ல பார்    கள

பேரா  ரியர். கலாநிதி. ம.இரகுநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.1.2.(1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்துத் தமிழ் நாவல்

## - சில பார்வைகள்

10373 SC

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி

பேராசிரியர்

கலாநிதி. ம. இரகுநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் விபரம்

**ஈழத்துத் தமிழ் நாவல் - சில பார்வைகள்**

Srilankan Tamil Novels - Some Views


ஆசிரியர் : பேராசிரியர்.கலாநிதி. ம. இரகுநாதன்
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் -
யாழ்ப்பாணம்.

முதற்பதிப்பு : 2009

உரிமை : ஆசிரியருக்கு

பக்கங்கள் : 98 + IV

எழுத்து : 12 புள்ளி

கணினி -
அச்சமைப்பு : SSR பிறின்டேர்ஸ்,
72, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

விலை : 200.00



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்


முன்னுரை

பொருளடக்கம்

01. ஆரம்பகால ஈழத்துத் தமிழ் நாவல்களில் மதப்பிரசாரம் - சில குறிப்புக்கள் - 01

02. புனைகதைகளில் கேட்கும் புதிய குரல்கள் - 08

03. செ. கணேசலிங்கனின் நாவல்களில் பெண்ணியச் சிந்தனையின் தாக்கம் - 19

04. செ. கணேசலிங்கனின் நாவல்களில் குடும்பச் சிதைவு - 29

05. செங்கை ஆழியானின் நாவல்களில் சமுதாயச் சிக்கல்கள் - 39

06. சமுதாய வாழ்வை நெறிப்படுத்தும் உயிரினங்கள் - செங்கை ஆழியானின் நாவல்களினூடான ஒரு தேடல் - 53

07. புலம்பெயர் கதைகளில் கலப்பு மணங்கள் - 63

08. டானியலின் நாவல்களில் சம்பவப்புனைவு - 73

09. மலையகத் தமிழ் நாவல்கள் புலப்படுத்தும் வாழ்வியற் பிரச்சினைகள். - 87




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

சித்திலெப்பையின் அசன்பேயுடைய கதையுடன் ஆரம்பித்த ஈழத்துத் தமிழ் நாவலுக்கு வயது நூறாண்டுகளைக் கடந்து விட்டது. நாவல் புதுமையானது; புதியது; புதியதையே புனைவது. நூறாண்டுகளைக் கடந்து வளர்ந்து வருகின்ற இலக்கிய வடிவத்தில் புதியவை என்றுமே புதியவைகளாக இருக்க முடியாது என்பதால் மாறும் சமுதாய நிலைமைகளுக்கேற்ப நாவல் வடிவமும் தன்னை மாற்றிக்கொள்கின்றது. சமுதாயம் தொடர்ச்சியாக இயங்கிக்கொண்டே இருப்பது என்பதால் மாறும் சமுதாயத்தில் மாறி வருகின்ற நிகழ்வுகளைப் புதிது புதிதாகவே புனைவது நாவலாசிரியனின் பொறுப்பாகும். இதனாலேயே நாவல் நிகழத்தக்க சம்பவங்களைப் புலப்படுத்தும் இலக்கிய வடிவமாகத் திகழ்வதும் சாத்தியமாகின்றது. இந்நூலில் உள்ள கட்டுரைகள் பலவும் ஈழத்துத் தமிழ் நாவல்கள் தொடர்பாக அவ்வப்போது எழுதியவை. யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவந்த புலரி, ஜீவநதி ஆகிய சஞ்சிகைகளில் சில கட்டுரைகள் வெளிவந்துள்ளன.

ஈழத்து மண்ணையும் மக்களையும் பொருளாகக் கொண்டு நாவல் எழுதிய மங்களநாயகம் தம்பையா கிறிஸ்தவ மதத்தின்பால் பற்றுக்கொண்டவர். நாவலினூடாகவும் சன்மார்க்க சீவியத்தின் மாட்சிமையை உணர்த்துவதே அவரின் நோக்கமாகும். அதனாலேயே கணவனாற் கொடுமைப்படுத்தப்பட்ட கண்மணிக்கு கிறிஸ்தவ மத பாதிரியாரின் உபதேசம் ஆறுதல் அளித்ததாக அவர் கதை புனைந்துள்ளார். ம.வே.திருஞானசம்பந்தப்பிள்ளை சைவ சமயத்தில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவர். இவர் ஏழைச்சிறுவர்களுக்கு ஆசை காட்டி அவர்களை மதமாற்றம் செய்யும் கிறிஸ்தவர்களைக் கண்டிக்கும் நோக்கில் நாவல் எழுதியுள்ளார். இவரது நாவலான கோபாலநேசரத்தினம் இவ்வாறான பொருளுடையதாகவே உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை ஆரம்பகால ஈழத்துத் தமிழ் நாவல்களினூடாக எமக்குத் தெரிய வருகின்ற செய்திகள்.

1950 களின் பிற்பகுதியிலிருந்து ஈழத்தில் முற்போக்கு அணியினரின் செல்வாக்கே அதிகரித்திருந்தது. செ.கணேசலிங்கன் முற்போக்கு அணியின் மூத்த படைப்பாளிகளில் ஒருவர். 1960 களில் இருந்து ஆக்க இலக்கியம் படைத்து வருகின்ற இவர் 1980 களில் பெண்ணியச் சிந்தைகளால் கவரப்பட்ட பாத்திரங்களையே தனது நாவல்களில் படைத்திருக்கின்றார். தமிழர் பண்பாட்டைக் கட்டிக்காத்து வருகின்ற குடும்ப அமைப்பை உதறி எறிகின்ற பெண்களை இவரது நாவல்களில் காணக்கூடியதாக உள்ளது. இவை தமிழுக்குப் புதியவை; தமிழர் பண்பாட்டுக்கு ஆபத்தானவை; இவற்றை எடுத்துக்காட்டுவனவாகவே கணேசலிங்கனின் நாவல்கள் தொடர்பான மூன்று கட்டுரைகளும் அமைந்துள்ளன. இவை வெவ்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு இதழ்களின் தேவைகளுக்காக எழுதப்பட்டனவாதலால் இவற்றை ஒருங்கே வாசிக்கின்ற போது ஒரே எடுத்துக்காட்டுக்களைத் திரும்பவும் காணக்கூடிய நிலை ஏற்படுகின்றது. இதனை வாசகர்கள் பொறுத்துக் கொள்ளவேண்டும்.

செங்கை ஆழியான் முற்போக்கு அணியைச் சாராத ஒரு படைப்பாளி. ஈழத்தில் உள்ள பல்வேறு களங்கங்களைத் தனது நாவல்களினூடாக வெளியுலகிற்கு எடுத்துக்காட்டியவர். வன்னிப்பிரதேச விவசாயக் கிராம மக்களின் வாழ்க்கைப் பிரச்சினைகளைத் தெளிவாக எடுத்துக்காட்டும் இவரது காட்டாறு எனும் நாவல் சிறப்பானதாகும். இவர் தனது நாவலினூடாகப் புலப்படுத்தும் சமுதாயப் பிரச்சினைகள் இங்கு எடுத்துக்காட்டப்படுகின்றன. மற்றொரு கட்டுரையில் கிராமப் புறங்களில் உள்ள பறவைகள், விலங்குகள் முதலிய உயிரினங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித வாழ்வோடு பிணைந்துள்ள முறைமை எடுத்துக்காட்டப்படுகின்றது. இதற்கு ஆதரமாகச் செங்கை ஆழியானின் காட்டாறு நாவலே பெரிதும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

புலம்பெயர் கதைகளில் கலப்பு மணங்கள் என்ற கட்டுரையில் புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்கள் மேற்கு நாடுகளில் எமது பண்பாட்டுக்குப் புறம்பானவர்களை மணந்து அனுபவிக்கின்ற துன்பங்கள் எடுத்துக் காட்டப்படுகின்றன.

டானியல் ஈழத்துப் படைப்பாளிகளில் மிகவும் முக்கியமான ஒருவர். பஞ்சப்பட்ட மக்களின் வாழ்வின் அவலங்களைத் தனது நாவல்களினூடாக வெளியுலகிற்கு எடுத்துக்காட்டியவர். இந்த மக்களின் அவல வாழ்வைச் சுட்டிக்காட்ட முற்பட்ட போது சில இடங்களில் டானியல் பாதை மாறிச் சென்றுவிட்டதையே டானியலின் நாவல்களில் சம்பவப் புனைவு என்ற கட்டுரை எடுத்துக்காட்டுகின்றது.

இறுதியாகவுள்ள கட்டுரை மலையக மக்களின் வாழ்வின் அவலங்களை எடுத்துக்காட்டுகின்றது. இக்கட்டுரைகளைப் படிப்பதால் ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கியங்களை முழுமையாகப் படித்ததாகிவிடாது. அது நூறாண்டுகளைத் தாண்டிவிட்ட பெருவிருட்சம். அந்த விருட்சத்தின் விழுதுகள் சிலவற்றை எடுத்துக்காட்டுவதாகவே இக்கட்டுரைகள் உள்ளன. இந்நூல் இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கியத்தைக் கற்கின்ற மாணவர்களுக்கு துணை நூலாகப் பயன்படக்கூடியதாகும்.

பேராசிரியர். கலாநிதி. ம.இரகுநாதன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆரம்பகால ஈழத்துத் தமிழ் நாவல்களில் மதப்பிரசாரம் - சில குறிப்புகள்

நாவல் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழுக்கு அறிமுகமான புதியதொரு இலக்கிய வடிவம். மேற்குலகில் கைத்தொழில் புரட்சியோடு ஏற்பட்ட முதலாளித்துவ பொருளாதார சமுதாய அமைப்பின் தேவைகளைப் பிரதிபலிக்க உருவானதே இவ்விலக்கிய வடிவம். நிலமானிய சமுதாய அமைப்பில் காவியங்கள் பெற்ற இடத்தினை முதலாளித்துவ பொருளாதார அமைப்பில் நாவல், சிறுகதை என்னும் இரண்டினையும் உள்ளடக்கிய புனைகதை என்னும் வசன இலக்கிய வடிவங்கள் பெற்றுக்கொண்டன. தன்னேரில்லாத் தலைவர்களும் வீரபுருஷர்களுமே பாட்டுடைத் தலைவர்களாக இருந்த இலக்கிய மரபில் நாவல் மாற்றத்தை ஏற்படுத்தியது. சாதாரண மக்களின் வாழ்வுப் பிரச்சினைகள் இங்கே எடுத்துக் காட்டப்பட்டன. சாதாரண மக்களே அவற்றின் வாசகர்களாகவும் மாறினார்கள். பாரதி கூறியது போல ஓரிரண்டு வருஷத்து நூற்பழக்கமுள்ளவர்களும் நாவல், சிறுகதைகளின் வாசகர்களாக உருவாகினார்கள். ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமை என்றிருந்த சமுதாயத்தில் பெண்களே புனைகதைகளின் பிரதானமான வாசகர்களாகவும், சில சந்தர்ப்பங்களில் படைப்பாளிகளாகவும் மாறினார்கள். இதனால் சமுதாயம் மாறிக்கொண்டிருந்தது. இத்தகையதொரு சூழலில் மதம் பரப்ப வந்த கிறிஸ்தவ மிஷனரிகள் தமது மதத்தைப் பரப்பும் பணியில் தீவிரமாகச் செயற்பட்டன.

1802 இல் ஈழம் ஆங்கிலேயரது குடியேற்ற நாடானதைத் தொடர்ந்து ஈழத்திற்கு வருகை தந்த கிறிஸ்தவ மிஷனரி இயக்கங்கள் தமது மதத்தைப் பரப்பும் பணியில் முனைப்புடன் செயற்பட்டன. சைவத்தைப் பிரதான சமயமாகக் கொண்டிருந்த யாழ்ப்பாணத் தமிழர் மத்தியில் கணிசமான தொகையினரை கிறிஸ்தவ மிஷனரி இயக்கங்கள் தமது மதத்திற்கு மாறச் செய்வதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றி கண்டன. யாழ்ப்பாணத்துச் சைவ உயர்குடியினருள் பலரும் கிறிஸ்தவ மிஷனரிகளால் மதமாற்றம் செய்யப்பட்டதைக் கண்டு யாழ்ப்பாணத்து ஆறுமுகநாவலர் முதலியோர் ஆத்திரமுற்று கிறிஸ்தவத்திற்கு எதிரான செயற்பாடுகளில் ஈடுபட்டனர். இதனால் சைவத்திற்கும் கிறிஸ்தவ மதத்திற்குமிடையே ஒருவிதமான போட்டி நிலை உருவாகியது. இத்தகைய சமயப் போட்டி நிலையினால் இக்காலச் சமூக உணர்வு சமயம் சார்ந்ததாகவே இருந்தது. இவ்வுணர்வே பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து ஈழத்துத் தமிழ் இலக்கியத்தை நெறிப்படுத்தும் உந்துசக்தியாகவும் இருந்தது. ஏறத்தாழ இருபதாம் நூற்றாண்டின் முதல் நாற்பது ஆண்டுக்கால ஈழத்துத்தமிழ் நாவல் இலக்கியத்தின் போக்கு இதனையே காட்டுகின்றது.

இத்தகையதொரு சமுதாயச் சூழலில் ஆக்க இலக்கியம் படைக்க முற்பட்ட படைப்பாளிகள் தமது படைப்புக்களினூடாகத் தமது மதக் கருத்துக்களைப் பிரசாரம் செய்ய முற்பட்டனர். இதனால் ஆக்க இலக்கியங்களிலும் மதப்பிரசாரமும் போட்டியும் வெளிப்படுவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. வகை மாதிரிக்காக இங்கே இரண்டு நாவல்கள் மட்டும் எடுத்துக் காட்டப்படுகின்றன. ஆங்கில ஆட்சிக் காலத்தில் கல்வி, உத்தியோகம் முதலியவற்றிற்காக கிறிஸ்தவ மதத்தைத் தழுவிக் கொண்ட யாழ்ப்பாணத்து மத்தியதர வர்க்கத்துக் குடும்பத்தைச் சார்ந்த மங்களநாயகம் - தம்பையாவின் நொறுங்குண்ட இருதயம் என்னும் நாவல் கிறிஸ்தவ மதப் பிரசாரத்தன்மை கொண்டதாகும். நாவலின் நூன்முகத்தில் நாவலாசிரியை,

**"சன்மார்க்க சீவியத்தின் மாட்சிமையை உபதேசத்தால் விளக்குவதிலும் உதாரணங்களால் உணர்த்துவது மிகவும் நன்மை பயத்தற்கேதுவாகுமென்றெண்ணி இக்கதையை எழுதத் துணிந்தேன்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக் குறிப்பிடுவது ஆசிரியருக்கு கிறிஸ்தவ மதத்தில் இருக்கின்ற விசுவாசத்தையும் அதனை மற்றவர்களுக்கு உணர்த்த வேண்டும் என்று அவர் விரும்புவதையும் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது.

நாவலில் கணவனால் கொடுமைப்படுத்தப்பட்ட கண்மணி என்னும் பாத்திரம் மனமுடைந்த நிலையில் கிறிஸ்தவ பாதிரியார் ஒருவரின் போதனைகளால் அமைதி பெறுவதும் கிறிஸ்தவ மதத்தைத் தழுவி ஒழுகும் கண்மணியின் நற்பண்புகளை உணர்ந்த கணவன் இறுதி நேரத்தில் தனது தவறை உணர்ந்து திருந்தி வாழ்வதும் காட்டப்படுகின்றது. கண்மணி கணவனால் கொடுமைப்படுத்தப்பட்டு வாழ்வில் அமைதியை இழந்து ஒருவழியும் தெரியாதவளாக நின்ற போது கனவில் தோன்றிய பாதிரியார்,

'மகளே உனக்கிருக்குஞ் சகல கவலைகளையும் இக்கட்டுகளையும் கர்த்தரிடம் ஒப்புவித்துவிட்டுப் பொறுமையாயிரு. உன் தாழ்மையான சீவியம் அநேகருக்கு முன்மாதிரியாயும் அநேகரை கர்த்தரண்டை வழிநடத்துஞ் சீவியமாயுமிருப்பதாக. உன் துயரங்களை அவர்மேற் சுமத்தித் தைரியமாய் சகித்துக்கொள்' என்று கூறி மறைகின்றார். அவள் கண்விழித்த போது கனவில் வந்த பாதிரியாரே நேரில் நின்று,

'மகளே உனக்கு வெகுதூர இடைஞ்சலாய் இருப்பதாய் நான் விளங்குகிறேன். மட்டற்ற இரக்கமுள்ள பிதாவாகிய கர்த்தரிடத்தில் உன் குறைகளை முறையிட்டு சுமை தாங்கியாகிய அவர் மேல் உன் கவலைகள், துன்பங்களைச் சுமத்திப் பொறுமையாயும் ஆறுதலாயுமிரு. உலக சீவியத்துக்கு பலவகையான தொல்லைகள், கஷ்டங்களைக் கடந்து செல்ல வேண்டியிருப்பதால் தேவனையே துணையாய்ப் பிடித்துக்கொள். அவரை அண்டியவர்களுக்கு ஆறுதல் உண்டு. உனக்கிருக்கும் சகல துன்பங்களையும் இக்கட்டுக்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னிலிருந்து நீக்கி, உன் சீவியத்தைச் சந்தோஷ சீவியமாக்க அளவிறந்த இரக்கமுள்ள பிதாவாற் கூடும்'.

என்று அறிவுரை கூறுகின்றார். பாதிரியாரின் போதனைகளால் கிறிஸ்துவைப் பூரணமாக நம்பிய கண்மணிக்கு உடனடியாகவே பலன் கிடைப்பது போல நோய்வாய்ப்பட்டு மரணத் தறுவாயில் இருந்த அவரின் பிள்ளை உயிர்பிழைக்கின்றது. பிள்ளையின் உயிருக்காக கர்த்தரிடம் கண்மணி மன்றாடுகின்றாள்.

'அளவற்ற இரக்கமும் தயையும் நிறைந்த தகப்பனே நீர் சர்வ வல்லமையுள்ள தேவன். உம்மாலாகாததொன்றுமில்லை. ஆருமற்ற ஏழைப் பாவியாகிய எனக்கு உமது மட்டற்ற இரக்கத்தையும், தயையையுங் காண்பித்து மரணத்தறுவாயிலிருக்கும் என் பிள்ளைக்குப் பூரண சுகங் கொடுத்து மீட்டருளும்படி உமைக் கெஞ்சி மன்றாடி உம்முடைய பாதாரவிந்தத்தில் விழுந்து வேண்டிக்கொள்ளுகிறேன்'

இவ்வாறு கர்த்தரின் மீது நம்பிக்கை வைத்து மன்றாடிய கண்மணிக்கு கர்த்தரின் கருணை கிடைக்கின்றது. இறந்து விட்டதாகவே அவள் நினைத்த பிள்ளை உயிர் பிழைக்கின்றது. கண்மணி, 'கர்த்தர் இரக்கமுள்ளவர். அவர் ஏழைகளின் சகாயர் ஆருமற்ற விசுவாசிகளின் அடைக்கலக்கோட்டை' என்று கூறிக்கொண்டு பிள்ளையை முத்தமிடுகின்றாள்.

கண்மணி பாதிரியாரின் போதனைகளால் கவரப்பட்டுத் தனது கணவனுக்குத் தெரியாமலே கிறிஸ்து மார்க்கத்தைப் பின்பற்றுகின்றாள். கிறிஸ்து மார்க்கமே மெய்யான மார்க்கமென்று தனது நண்பர்களுக்குக் கூறுகின்றாள். மரணத் தறுவாயில் வேதப்புத்தகத்தின் 46 ஆம் சங்கீர்த்தனத்தை வாசிக்குமாறு கேட்கின்றாள். அதைக் கேட்டுக் கொண்டே உயிர் பிரிகின்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்மணியின் மரண காலத்தில் அவளது கணவன் தனது தவறினை உணர்ந்தவனாகத் திரும்பி வருகின்றான். அவளிடம் மன்னிப்பும் கேட்கின்றான். கண்மணிக்கு உண்டான துன்பங்களிலிருந்து அவளுக்கு ஆறுதல் கிடைத்ததற்குக் காரணம் அவள் கிறிஸ்து மார்க்கத்தைப் பின்பற்றியதே என்பது இங்கே தெளிவாக எடுத்துக்காட்டப்படுகின்றது. கண்மணியின் வாழ்க்கையினூடாக கிறிஸ்து மார்க்கமே உண்மையானது. அவனைப் பின்பற்றினாலே துன்பங்களிலிருந்து விடுதலை பெறலாம் என்பது பிரசார நோக்கில் எடுத்துக் கூறப்படுகின்றது.

கிறிஸ்தவ மதத்திற்கு மாறிய யாழ்ப்பாணத்து மத்தியதர வர்க்கத்தினர் மதப் பிரசார நோக்கில் புனைகதைகளை வெளியிட்ட போது இவர்களுக்கு எதிராக சைவசமயத்தினரும் புனைகதைகளை எழுத முற்பட்டனர். இந்த வகையில் இந்து சாதனம் பத்திரிகையின் ஆசிரியராகவும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் ஆசிரியராகவும் இருந்த மரபுவழிச் சைவத் தமிழறிஞரான ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை சைவத்திற்கு ஆதரவான தனது கருத்துக்களைப் புனைகதைகளினூடாகக் கூறமுற்பட்டார். இவர் எழுதிய மூன்று நாவல்களில் காசிநாதன், நேசமலர், கோபாலநேசரத்தினம் ஆகிய இரண்டும் சைவம் சார்ந்த பிரசாரத்தன்மை கொண்டனவாகவே அமைந்துள்ளன. சுருக்கம் கருதி இங்கே கோபாலநேசரத்தினம் என்னும் நாவல் மட்டும் எடுத்துக் காட்டப்படுகின்றது. இந்நாவலில் சிறுவயதிலேயே தந்தையை இழந்த சைவக் குடும்பத்துச் சிறுவனான கோபாலனின் வாழ்வில் கிறிஸ்தவச் சூழல் விளைவித்த தாக்கங்கள் எடுத்துக் காட்டப்பட்டு சைவ வாழ்வின் மேன்மை புலப்படுத்தப்படுகின்றது. கிறிஸ்தவப் பாடசாலையில் கல்வி கற்ற கோபாலனின் திறமையைக் கண்ட பாதிரியாரும் போதகரும் அவனை மதம் மாற்ற முயற்சிக்கின்றனர். இந்நோக்கத்திற்காக குட்டித்தம்பிப் போதகர் அவனைத் தனது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகனுக்குப் பாடம் சொல்லிக்கொடுக்குமாறு வீட்டுக்கு அழைத்து அங்கிருந்த தனது இளம் விதவையான மகள் நேசரத்தினத்தை அவனோடு பழகவிடுகின்றார். நேசரத்தினத்தின் நடையுடை பாவனைகளால் கவரப்பட்ட கோபாலன் அவளைக் காதலிக்கின்றான். அவனை மதம் மாற்றும் திட்டத்தின் முதற்படியாகப் போதகர் இதனை எதிர்பார்த்திருந்தார். ஆனால் விளைவு வேறுவிதமாக அமைந்து விடுகிறது. சைவப்பற்றில் உறுதியாக இருந்த கோபாலனின் தாய் அவன் மதம் மாறுவதை அனுமதிக்கவில்லை. முடிவில் போதகரின் மகள் நேசரத்தினமே சைவத்திற்கு மாறி அவனை மணம் முடிக்கின்றாள். நேசரத்தினம் சைவத்திற்கு மாறிக் கோபாலனை மணம் முடிக்கப்போவதை அறிந்த பாதிரியார் அவளைச் சந்தித்து தகப்பனின் போதகர் பதவி பறிபோய்விடும் என்று எச்சரிக்கின்றார். அதற்கு அவள்,

'ஐயா, உத்தியோகத்திற்குப் பயந்து பணத்திற்கு ஆசைப்பட்டு மனச்சாட்சிக்கு மாறாகச் சொந்தச் சமயத்தை விட்டு அந்நிய சமயத்தை அனுசரிப்பவர்களுக்குக் கடைசியில் இவ்விதமான கதிதான் வந்து சேரும்' என்று கூறி கிறிஸ்தவர்களால் தாம் ஏமாற்றப்பட்டதை எடுத்துக் கூறுகின்றாள். இறுதியில் போதகரும் மகனும் மகளின் வழியில் சைவத்தை ஆதரிக்கின்றனர். சைவ வாழ்வே மெய்யானது என்பதை உணர்ந்து கொள்கின்றனர். பொதுவாக இந்நாவல் சைவ சமயத்தவர்களை ஏமாற்றி மதமாற்றம் செய்வதைக் கண்டிப்பதாகவும் சைவத்தின் மேன்மையை உணர்த்துவதாகவும் அமைந்துள்ளது.

காலப்போக்கில் கிறிஸ்தவம் யாழ்ப்பாணத்துத் தமிழ் மக்களிடையே நிலையான ஒரு இடத்தினைப் பிடித்துவிட்டபோது அதற்கு எதிரான போராட்டங்களும் வலுவிழந்தன. இதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதப்பிரசார நோக்கில் புனைகதைகளை எழுத வேண்டிய தேவையும் இல்லாது போய்விட்டது.

இதன் பின்னர் கிறிஸ்தவச் சூழலாலும் மேற்கு நாட்டுப் பண்பாட்டாலும் ஏற்பட்ட சமுதாயச் சீர்கேடுகள் பலவற்றையும் கண்டிக்கின்ற வகையிலே தமிழ் நாவல்கள் எழுதப்பட்டன. கால ஓட்டத்தில் அதுவும் திசைமாறி புதிய புதிய விடயங்களை நோக்கி நகர்ந்தது. இது மாறும் சமுதாயத்தின் யதார்த்தம் என்பதால் இதில் ஆச்சரியப்பட எதுவும் இல்லை.

**பயன்படுத்திய நூல்கள்**


மங்களநாயகம் - தம்பையா *(1914)* நொறுங்குண்ட இருதயம், தெல்லிப்பளை.

ம.வே. திருஞானசம்பந்தப்பிள்ளை *(1948 இரண்டாம் பதிப்பு)* கோபாலநேசரத்தினம், யாழ்ப்பாணம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புனைகதைகளில் கேட்கும் புதிய குரல்கள்

உலகெங்கும் பரந்து வாழ்கின்ற மக்கள் அனைவரும் மனிதர்கள் என்ற வகையில் ஒன்றுபட்டாலும் இவர்கள் இனம், மதம், மொழி, பொருளாதார நிலை, புவியியற்சூழல் முதலியவற்றால் வேறுபடுகின்றனர். உலகில் மக்கள் வாழ்கின்ற பிரதேசங்கள் அனைத்தும் ஒரே புவியியற் சூழலைக் கொண்டிருக்கவில்லை. மாறுபட்ட சூழல்களில் வாழும் மக்கள் தமது சூழலுக்கேற்பத் தமது பழக்க வழக்கங்களையும் அமைத்துக் கொள்கின்றனர். சூழல் தேவை கருதி மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகள் காலப்போக்கில் அவர்களது பண்பாடாகவும் வரையறுக்கப்பட்டது. இது, குறித்த ஒரு மக்கட் பிரிவினரை அடையாளப்படுத்துவதாகவும் அமைந்தது. இவை புவியியற் சூழலால் ஏற்பட்ட விளைவுகள்.

மற்றொரு புறத்தில் பொருளாதார நிலைமைகளும் மனித நடத்தைகளில் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. குறிப்பாக மனித சமூகத்தில் குடும்பம் என்ற அமைப்பு உருவாகியமைக்கான காரணம் பொருளாதார நிலைமைகளே என்பது மானிடவியலாளர்கள் பலரதும் பொதுவான கருத்தாகும். குடும்பம் என்பது ஓர் ஆணையும் பெண்ணையும் அடிப்படையாகக் கொண்டது. சமுதாய வளர்ச்சிப்போக்கில் புராதன பொதுவுடைமை நிலையில் ஆணும் பெண்ணும் எந்தவிதமான கட்டுப்பாடுகளும் இல்லாது சுதந்திரமாகவும் சமத்துவமாகவும் வாழ்ந்து வந்தனர். பாலியல் நுகர்விலும் உறவுமுறைக் கட்டுப்பாடுகள் எதுவும் பின்பற்றப்படவில்லை. காலப்போக்கில் இந்நிலை மாற்றமுற்றுத் தனிக்குடும்ப அமைப்பு உருவாகியது. தமிழர் பண்பாட்டிலும் மாமுது பார்ப்பான் மறைவழி காட்டி தீவலம் செய்து பெண்ணை ஆணுக்குரியவளாகத் தாரைவார்த்துக் கொடுத்தனர். ஆணின் தலைமையில் உருவாகிய குடும்பத்தில் பெண் ஆணுக்குரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரிசைப் பெற்றுத் தரவேண்டியவள் என்பதால் அவளுக்கு மட்டும் கற்பு வலியுறுத்தப்பட்டது.

இவ்வாறு பெண்ணை ஆணுக்குரியவளாக்கி அவளைக் குடும்பம் என்ற அமைப்பினுள் கட்டுப்படுத்திய வாழ்வே இல்லற வாழ்வாகப் பேசப்பட்டது. நீதிநூல்கள் பலவும் இல்லற வாழ்வையே உயர்வானதாகக் கூறுகின்றன. வள்ளுவரும் 'அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை' என இல்லறத்தை உயர்வுபடுத்தினாலும் பெண்ணை ஆணின் இல்வாழ்வுக்குரிய வாழ்க்கைத் துணையாகவே குறிப்பிடுகின்றார். பெண்ணுக்கென்று தனியான வாழ்க்கை இலட்சியம் எதுவுமே பேசப்படுவதில்லை. இவ்வாறான பண்பாட்டுப் பாரம்பரியத்திலிருந்து உருவாகிய பெண்களையே ஆரம்ப காலத் தமிழ்ப்புனைகதைகளில் காணமுடிகின்றது. சான்றாக 1927இல் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த அ. நாகலிங்கத்தின் 'சாம்பசிவம் ஞானாமிர்தம்' என்ற புனைகதையில் வருகின்ற பொன்னம்பலத்தில் மனைவி அம்பிகை தொடர்பான சித்திரிப்பு பின்வருமாறு அமைகின்றது.

*"கற்பில் அருந்ததியை நிகர்த்தவள்... கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன் என்றபடி தன் கணவன் சொற்படியே நடந்து வருவாள். தன்வீட்டில் வேலைகளைச் சீக்கிரம் முடித்துக் கொண்டு தன் கணவனுடன் பயிர்களுக்குத் தண்ணீர் பாய்ச்சுவதிலும் நிலத்தைத் திருத்திப் பண்படுத்துவதிலும், எருயிடுவதிலும், இன்னும் தோட்டத்தோடு சேர்ந்த எவ்வித வேலைக்கும் சேர்ந்துழைப்பாள். கணவனுக்குத் தொந்தரவில்லாதபடி குடும்ப வேலைகளைத் தானே சுமந்து கொள்வாள். தன் புருஷன் விரும்பக் கூடிய உணவையே சுத்தமாகச் செய்து வைப்பாள். புருஷன் கோபித்தாலும் தான் கோபிக்கமாட்டாள்..... புருஷன் சந்தோஷமாயிருந்தால் அவளும் சந்தோஷமாயிருப்பாள். புருஷனுக்கு எதில் விருப்பமோ அவளுக்கும்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அதிலேயே விருப்பம்...... புருஷன் சாப்பிட்டால் அவளுடைய பசியாறிவிடும்.... வரவுக்குத் தகுந்த செலவையே செய்வாள். தன் வீட்டிற் காரியங்களைப் பிறரிடம் போய்ப் பேசமாட்டாள். புருஷன் தன்னை வைதுஅடித்தாலும் தாய்வீடு போகமாட்டாள். தன்புருஷனே அவளுக்குத் தெய்வம்" (ப. 2 – 4)*

இவள் கணவனுக்காகவே வாழ்பவள்; தனக்கென எந்தவிதமான ஆசையும் இலட்சியமும் இல்லாதவள். படியாய்க்கிடந்து பணிசெய்கின்ற பாரம்பரியத்தின் நல்லதொரு பிரதிநிதி இவள். இத்தகைய வாழ்வே தனக்குரியது என்பதை மனதார ஏற்றுக் கொண்டதாலேயே இவள் கணவன் இறந்தபின்னர் மறுமணம் செய்து கொள்வதை ஏற்க மறுக்கின்றாள்.

*"ஓர் பெண்ணானவள் தன் கொழுநன் இறந்தபின்னர் இன்னோர் ஆடவனை நோக்கினாலும், இச்சித்தாலும், மனத்தில் நினைத்தாலும், கற்புடையவளாக மாட்டாள். இவற்றைக் கவனியாது அவள் திரும்பவும் மணம் செய்வாளாகில் அவளை விபசாரியென்றே யான் சொல்ல வேண்டும்" (ப. 121)*

என்பது தான் மறுமணம் தொடர்பான இவளின் கருத்து.

இவ்வாறு உரிமைகள் மறுக்கப்பட்டவர்களாகவும் தமது உரிமைகளை உணரமாட்டாதவர்களாகவும் பெண்கள் அடக்கியொடுக்கப்பட்டிருந்த சூழலில் மேற்குநாட்டவரின் வருகை சில மாற்றங்களை ஏற்படுத்தியது. இதனாலேயே படிதாண்டாப் பத்தினியாக அம்பிகையைச் சித்திரித்த அ. நாகலிங்கத்தின் காலத்திலேயே விதவாவிவாகத்திற்கு ஆதரவான குரலும் சமூகத்தில் எங்கோ ஒரு புறத்தில் ஒலிக்க ஆரம்பித்திருந்தது. சான்றாக ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளையின் 'கோபால நேசரத்தினம்' என்ற புனைகதையில் வருகின்ற நேசரத்தினம் ஓர் இளம் விதவை. இவள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவத்திற்கு மதம்மாறி கோபாலனை மறுமணம் செய்கின்றாள். இவர்களின் திருமணம் மதமாற்றத்திற்காக எதிர்க்கப்பட்டதே தவிர மறுமணம் என்பதற்காக அல்ல. எனவே விதவா விவாகத்தை ஏற்றுக் கொள்கின்ற சமூகச் சூழல் இருந்ததென்பது புலனாகின்றது.

1950இல் வெளிவந்த தொ. மு. சி. ரகுநாதனின் 'மனைவி' என்ற புனைகதையில் வருகின்ற ராமசாமி, படித்த வாலிபன்; வாழ்க்கையில் சுதந்திரமாகவே வாழவிரும்புபவன்; தனது மனைவிக்கும் சகல விதமான சுதந்திரங்களையும் கொடுக்கப் போவதாக நண்பர்களிடம் சொல்லி வந்தவன்; மனைவியை அடிமையாய் நடத்துவதையும் அடிப்பதையும் காட்டுமிராண்டித்தனம் என்று நினைப்பவன்.

தனது மனைவியான செல்லத்துக்கும் தனது கருத்துக்களை அவன் கூறியுள்ளான்: தான் சாப்பிட்டபிறகுதான் அவள் சாப்பிடவேண்டும் என்ற சம்பிரதாயங்களையெல்லாம் மறந்துவிட வேண்டும் என்றும் ஏதாவது துணிமணி சாமான் எடுக்க வேண்டும் என்றாலும் அவள் இஷ்டப்படியே எடுத்துக் கொள்ளலாமென்றும் அவளது சுயநிர்ணய உரிமை எதிலும் தான் தலையிடப் போவதில்லை என்றும் சொல்லியிருக்கின்றான்.

ஆனால் செல்லம் தனக்கு வழங்கப்பட்ட சுதந்திரத்தைப் பயன்படுத்துபவளாக இருக்கவில்லை. அவள் எதற்கும் கணவனின் அனுமதியையும், துணையையும் நாடுபவளாகவே இருந்தாள். துணிக்கடையில் துணிவாங்கும் போதும் அவனுக்குப் பிடித்ததையே வாங்க விரும்புகின்றாள். அவன் அவளின் சுதந்திரத்தில் தலையிடவிரும்பாதபோது அவனோடு கோபித்துக் கொண்டு துணியே வாங்காமல் திரும்பி வருகின்றாள். அவள்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*''கணவனும் மனைவிக்கு அடிமையல்ல, மனைவியும் கணவனுக்கு அடிமையல்ல. ஆனாலும் சுதந்திரம் என்று சொல்லி இருவரும் ஒருவரையொருவர் அறியாமல் பிரிந்து தான்தோன்றியாகச் சென்று கொண்டிருப்பது தான் சுதந்திரமா? நான் பெண். எனக்கு அவர் துணை. அவரின்றி நான் இயங்க முடியாது. அப்படியிருக்கும் போது அவர் என்னைச் சுதந்திரமாய் விட்டுவிட்டேன் என்று சொல்லி என்னைவிட்டு விலகிச் சென்றால்.....'' அவருக்காகத்தானே நான் இருக்கின்றேன். என்றாவது என்னை, 'அதைக்கட்டு இதைக்கட்டு' என்று வற்புறுத்தியிருக்கிறாரா? எல்லாம் நான்தான் பார்த்துக் கொள்ளவேண்டுமாம். நல்ல சுதந்திரம்! அபிப்பிராயம் கூறுவதால் கூடவா சுதந்திரம் கெட்டுவிடப்போகிறது!*

*நான் அவருக்கு அடிமையாக வேண்டாம். ஆனால் அவரது அன்புக்கு நான் அடிமையாகத்தான் வேண்டும்...... அடிமையாவதில் ஒரு இன்பமா? இன்பம் இருப்பதாகத்தான் தெரிகிறது. இல்லறத்தில் அடிமை ஆதிக்கத்தினால் வரக்கூடாது. அன்பினால் வரவேண்டுமா? அன்புக்கு அடிமையா? அப்படியென்றால் அவருக்காக நானும் எனக்காக அவரும் வாழ்வதுதான் சுதந்திரமா......?*

என்றெல்லாம் சிந்தித்தவள்,

*''உங்கள் சுதந்திரமே எனக்கு வேண்டாம். நான் உங்கள் அடிமை. உங்கள் அன்புக்கு நான் அடிமை, உங்கள் இலட்சியத்துக்கல்ல. என்னை உங்கள் மனைவியாக நடத்துங்கள்''*

என்று கணவரிடம் கூறுகிறாள். செல்லம் பாரம்பரியமான தமிழ்ப்பண்பாட்டில் ஊறிப்போன பாரதப்பெண், அவளால் அவ்வாறுதான் சிந்திக்க முடியும். ஆனால் அவளின் வாழ்வில் ஒருவரையொருவர் புரிந்து கொண்டு வாழும் மகிழ்ச்சியான வாழ்வுக்கான ஒளிக்கீற்றுக்கள் தென்படுகின்றன. இதுதான் இன்பமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்ப வாழ்க்கை. இதையே தமிழ் மக்கள் பெரிதும் போற்றிப் பேணிவருகின்றனர்.

காதலர் இருவர் கருத்தொருமித்து வாழ்கின்ற வாழ்க்கையே இல்வாழ்க்கை. கருத்தால் ஒன்றுபடமுடியாத கணவனும் மனைவியும் இணைந்து வாழ்கின்ற வாழ்க்கை இருவருக்கும் துன்பமாகவே அமைந்துவிடும். ராஜம் கிருஷ்ணனின் 'வீடு' (1977) என்னும் நாவலில் வருகின்ற தேவி, தனது கணவனின் தன்னிச்சையான போக்கால் அதிருப்தியடைந்து வீட்டை விட்டே வெளியேறுகின்றாள். அவளின் மனதில்,

*"உங்கள் ஆளுகையில் அழுந்திப் புழுங்கிக் கொண்டிருந்த ஒருத்தி உங்கள் எல்லையை கோபதாபங்களை, அறியாமைகளை உதறிவிட்டுப் போகிறாள். அவள் இந்த நேரத்தில் இவ்வாறு முடிவு செய்ததையே ஒரு பெரிய சாதனையாகக் கருதுகிறாள். நீங்கள் எது செய்தாலும் சரியே என்று கருதும் மனப்பாங்கிலிருந்து விடுபட்டுத் தனித்துவம் பெற்று உங்கள் சொல்லையும் செயலையும் விமர்சிக்கும் துணிவு பெற்று எதிர்ப்பும் காட்டி தன் நியாயத்தை நிலைநிறுத்திக் கொண்டு அவள் தன் மனச்சாட்சிக்கொப்ப நடக்கிறாள். இதன் விளைவுகள் அவளைப் பலவாறாகப் பாதிக்கக்கூடும். உங்களுக்கும் பெருத்த அதிர்ச்சி அளிக்கக்கூடும். என்றாலும் மனிதத் தன்மைக்குப் பொதுவான கசிவு அவளை வென்றுவிட்டது. உங்களோடு வாழ்ந்து மக்களைப் பெற்று ஒரு குடும்பத்தை உருவாக்கியவள் என்ற நிலையில் அவள் உங்களை என்றும் மதிக்கிறாள். ஆனால் அதற்காக அவள் கண்களை மூடிக்கொண்டு மனச்சாட்சியை விழுங்கும் அறியாமைகளை உதறும் சந்தர்ப்பம் இதுவே எனக்கருதி அகலுகிறாள்"...... (ப. 272)*

என்ற வாக்கியங்கள் மின்னலிடுகின்றன. தேவி திருமணமாகிக் கணவனுடன் இல்லறம் நடாத்தியவள்; இரண்டு குழந்தைகளைப்



10373

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்று வளர்த்தவள்; வீட்டையும் பிள்ளைகளையும் நல்லபடியாகப் பேணிப் பராமரித்து வந்தவள். கணவனின் அதிகாரம் எல்லைமீறி, அவள் ஆசையோடு பராமரித்த வீட்டை விற்றதாலும், அவளுக்குத் தெரியாமலே மகளுக்குத் திருமணம் நிச்சயிக்கப்பட்டதாலும், தேவி மனமுடைந்து போகின்றாள். குடும்பத்தின் வளர்ச்சிக்காக உழைத்தவளுக்கு – தான் புறக்கணிக்கப்பட்டதாக ஏற்பட்ட உணர்வு அவளை வீட்டைவிட்டு வெளியேறத் தூண்டுகிறது. அதனாலேயே அவள் திருமண மண்டபத்தில் இருந்து வெளியேறிவிடுகிறாள். தேவியின் வெளியேற்றம் அமைதியான முறையில் நடந்திருக்கலாம். ஆனால் தமிழ்ப் பாரம்பரியத்தில் இது பெரியதொரு பாய்ச்சல். ஆணின் ஏகபோக உரிமையையும் அதிகாரத்தையும் பெண்கள் ஏற்கத் தயாரில்லை என்பதற்கு இது ஒரு முன்னறிவிப்பாகவே கருதப்படவேண்டியது.

தேவி தான் கட்டுண்ட குடும்பத்தைவிட்டுப் பிரிந்து செல்கின்றாள். ஆனால் தேவியின் பின்னவர்கள் குடும்ப அமைப்பினுள் கட்டுப்படுவதையே வெறுத்துப் புதுக்குரல் கொடுக்கின்றார்கள். செ. கணேசலிங்கனின் ‘சூரியன் கிழக்கில் உதிப்பதில்லை’ (1989) என்ற புனைகதையில் வருகின்ற சித்திரா,

*“ஒருவனுக்கு சமைத்துப்போட்டுப் பிள்ளை பெற்றுக் கொடுத்து அடிமைப் பணிகளும் செய்ய நாய் தயாரில்லை” (ப. 52)*

எனக் கூறிக் கொண்டு வெளிநாட்டிற்குப் பணிப்பெண்ணாகப் பணிபுரியச் செல்கின்றாள். கலியாணம் செய்து ஒரு பேரப்பிள்ளையைப் பெற்றுத் தருவாள் என்று ஆசைப்பட்ட தாய்க்கு அவள்கூறும் பதில்,

*“கலியாணத்திற்கும் பிள்ளைபெறுவதற்கும் என்ன தொடர்பு? எனக்குப் பிள்ளை வேணுமென்றால் தெருவிலே போகிற எந்த வாலிபனோ,*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கிழவனோகூடத் தயாராக இருப்பாங்க. நான் விரும்பினவனைக் கூப்பிட்டே என்னைச் சினைப்படுத்த முடியும். அது என் பிள்ளையாகவும் இருக்கும். என் கருவில் சுமந்து இரத்தத்தைச் சிந்திப் பெற்று இரத்தத்தைப் பாலாக்கிக் கொடுத்து வளர்க்கும் பிள்ளையை மற்றொருவன் உரிமைபேச விடமாட்டேன்." (ப. 61)*

என்பதுதான்.

செ. கணேசலிங்கனின் மற்றொரு நாவலான 'குடும்பச்சிறையில்' (1999) என்பதில் வருகின்ற சுகன்யா, குமுதினி என்ற இரு பெண்களும் தமிழ்நாட்டின் இந்துப் பாரம்பரியத்தில் வளர்ந்தவர்கள். புலம்பெயர்ந்து அமெரிக்காவில் வாழ்பவர்கள். இவர்கள் அமெரிக்காவில் மகாதேவன் என்ற தமிழக இளைஞனைக் கண்டு நட்புக் கொள்கின்றனர். இந்த நட்பு அவர்களிடையே பாலியல் தொடர்புகளையும் ஏற்படுத்துகின்றது. மகாதேவனுடன் இரு பெண்களும் சுதந்திரமாகப் பாலியல் இன்பத்தை அனுபவிக்கின்றனர். இந்த நிலையில் மகாதேவனுக்கு திருமணம் பேசப்படுகின்றது. அவன் தன்னோடு பாலியல் இன்பத்தை அனுபவித்த இருவரில் ஒருவரையாவது திருமணம் செய்யக்கூடாதா என்ற குற்ற உணர்வுக்கு உட்பட்டு அவர்களிடம் அதுபற்றிக் கேட்டபோது பெண்கள் இருவருமே மகாதேவனின் விருப்பத்தைப் புறக்கணித்துவிடுகின்றனர். சுகன்யா மகாதேவனுக்கு,

*"நீங்கள் வேண்டினால் உங்களுடன் வந்து இருக்கத் தயாராயிருக்கிறேன். இனிமேல் சடங்கு முறைவைத்துப் பாலுறவுக்கு அனுமதிபெறும் போலித் தேவையும் இல்லையே அக்காவின் (குமுதினி) உறவும் அப்படியே இருக்கலாம்.*

என்று கூறுகின்றாள். (ப. 182) குமுதினியும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"என்னுடையதும் அதே முடிவுதான். சுதந்திரமான பாலுறவுதான் வாழ்க்கைக்கு முக்கியமானதென்று எண்ணினால் தற்போது நடப்பது போலத் தொடரலாம். இருவருடனும் பாலுறவு கொள்ளத் தக்க வாய்ப்பையும் ஏற்படுத்தித் தந்தேன். இத்தகைய வாய்ப்பு அம்மா பேசும் திருமணத்தில் ஒரு போதும் கிடையாது. யோனிப் பொருத்தத்தை ஜாதகத்தில் தான் பார்ப்பார்கள். தம் இருவரிலும் பிடித்தவரோடு நீங்க வாழ்வதிலும் தவறில்லை. அமெரிக்காவில் குடும்ப உறவுப் பெயரின்றி அவரவர் தமது பெயருடன் கூட்டாகவும் தனித்தனியாகவும் வாழ்பவர் ஏராளம். சுகன்யாவைப் பிடிக்காவிட்டால் அதே போலவே வாழ்ந்து பார்க்கத் தயாராயிருக்கின்றேன். நான் விரும்பாதவேளை வெளியேறி விடுவேன். அந்த சுதந்திரம் வேண்டும்" (ப. 182)*

என்று கூறி அவனது வேண்டுகோளை நிராகரித்து விடுகின்றாள். குடும்ப அமைப்பினுள் கட்டுப்படாமல் சுதந்திரமாக வாழ்ந்து பாலியலையும் சுதந்திரமாக அனுபவிக்கும் இப்பெண்கள் இந்துப் பாரம்பரியத்தில் ஊறிய தமிழ்நாட்டுப் பெண்கள். இவர்களின் குரல் தமிழ்ப்பாரம்பரியத்திற்கு முற்றிலும் புதியது. இதுவரை எங்குமே கேட்காத குரல்.

மற்றொரு புறத்தில் பணத்துக்காக ஐந்து ஆண்டுகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் மனைவியாக வருகிறேன் என்று இன்னொரு பெண் குரல் கொடுக்கின்றாள். செங்கை ஆழியானின் 'மழைக்காலம்' (1988) என்ற புனைகதையில் வருகின்ற தேவி தனது காதல் தோல்வியாலும் குடும்பத்தின் வறுமையாலும் ஜேர்மனியிலுள்ள மைக்கல் என்ற இளைஞனுக்கு ஐந்து ஆண்டுகளுக்கு மனைவியாக வாழ உடன்படுகின்றாள். அண்மைக்காலத் திரையுலகிலும் இவ்வாறானதொரு குரலைப் பலரும் கேட்டிருக்காலம். விஜய் - சிம்ரன் நடித்த 'பிரியமானவளே' என்ற திரைப்படத்தில் கதாநாயகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவருட ஒப்பந்த மனைவியாகவே திருமணம் செய்கின்றாள். இவை தமிழர் பண்பாட்டில் புதியகுரல்கள்.

முடிவாக, ஒருவனுக்கு ஒருத்தியென உறவுகண்டு இல்லறத்தில் நல்லறம் கண்டவர்கள் தமிழர்கள். இன்று அந்த இல்லறத்திற்கு அடிப்படையான குடும்ப அமைப்பை உடைத்துத் தனியன்களாகி மீண்டும் பண்டைப் புராதன நிலைக்குச் சென்று கட்டற்ற பாலியல் இன்பத்தை நுகர்ந்து காட்டுமிராண்டிகளாக வாழும் நிலைக்குத் தமிழர்கள் திரும்பிக் கொண்டிருக்கிறார்களா? சித்திராவும் சுகன்யாவும், குமுதினியும் எமக்கு இதைத்தான் உணர்த்துகின்றனரா........? இது வெறும் அபத்தம். இவர்களின் குரல் வெற்றுக்கூச்சல், வெறும் மாயை. மேற்கில் உருவாகிய பெண்ணியச் சிந்தனையாளர்களில் ஒரு பிரிவினராகிய தீவிரவாதப் பெண்ணியவாதிகளே குடும்ப அமைப்பை வெறுத்து பாலியல் இன்பத்தை சுதந்திரமாக அனுபவிக்க விரும்பியவர்கள். இவர்களின் கருத்துக்கள் மேற்குலகில் கூட பெரியளவில் வரவேற்கப்படவில்லை. இந்தியாவிலும் இலங்கையிலும் இக்கருத்துக்கள் எந்த வகையிலும் முக்கியத்துவம் பெறவில்லை. இந்தியப் பெண்ணியம் பண்பாட்டின் அடித்தளமான குடும்ப அமைப்பினைச் சிதைக்காதவாறே பெண்களின் உரிமைகளை வலியுறுத்தியது. இத்தகைய நிலையில் மேற்படி புனைகதைகளில் வருகின்ற பெண்களின் குரல்கள் தமிழர் பண்பாட்டில் எங்குமே ஓங்கி ஒலிக்காத குரல்கள். புறநடைகளைப் புறந்தள்ளினால் இது வெறும் மாயை. குடும்ப அமைப்பை உடைத்து எமது பண்பாட்டின் அடித்தளத்தை வேரோடு கிள்ளி எறிய எந்தவொரு பெண்ணும் இன்னும் தயாராகவில்லை. எனவே, மேற்படி குரல்கள் அர்த்தமற்றவை. இவை மேலைப்புலத்துச் சிந்தனைகளுக்கு இலக்கிய வடிவம் கொடுக்க முற்பட்டதன் ஆபத்தான விளைவு என்பதே உண்மையாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்திய நூல்கள்

அ. நாகலிங்கம் - (1927) சாம்பசிவம் ஞானாமிர்தம், யாழ்ப்பாணம்

ம.வே. திருஞானசம்பந்தப்பிள்ளை - (1948 2ம் பதிப்பு) கோபால நேசரத்தினம், யாழ்ப்பாணம்.

தொ.மு.சி.ரகுநாதன் - (1980 2ம் பதிப்பு) ரகுநாதன் கதைகள், மனைவி ப.112, மதுரை.

ராஜம் கிருஷ்ணன் - (1977) வீடு, சென்னை

செ. கணேசலிங்கன் - (1997 மறுபதிப்பு) சூரியன் கிழக்கில் உதிப்பதில்லை, சென்னை.
(1999) குடும்பச் சிறையில், சென்னை

செங்கை ஆழியான் - (1988) மழைக்காலம், யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செ. கணேசலிங்கனின் நாவல்களில் பெண்ணியச் சிந்தனையின் தாக்கம்

பெண்ணியம் என்பது சமூகத்தில் பெண்களின் அடிமை நிலையை மாற்றமுற்படுகின்ற ஒரு கோட்பாடாகும். பெண் விடுதலைச் சிந்தனைகள் மேற்குலகில் 18ஆம் நூற்றாண்டிலேயே எழுச்சிபெற ஆரம்பித்துவிட்டாலும் பெண்ணியம் தனித்து ஒரு கோட்பாடாக வலுப்பெற்றது 19ஆம் நூற்றாண்டிலேயே. பொதுவாக பெண்ணியச் சிந்தனையாளர்கள் பலரும் சமூகத்தில் பெண்கள் மீதுள்ள பல்வேறு வகையான ஒடுக்குமுறைகளையும் நீக்கி ஆண்களைப் போலவே அவர்களுக்கும் சம உரிமை வழங்கப்பட வேண்டும் என்பதையே அடிப்படை நோக்கமாகக் கொண்டுள்ளனர். எனினும் இச் சிந்தனைகளின் வளர்ச்சிப் போக்கில் பல்வேறு வகையான கருத்துநிலைகளைக் கொண்ட பெண்ணியவாதிகள் உருவாகியுள்ளனர். இவற்றுள் ஒன்றாகவே நவீன பெண்ணியம் தோற்றம் பெற்றது. இது 1970களின் தொடக்கத்தில் மேற்கில் உருவாகியது. இப்பெண்ணியவாதிகள் ஆணாதிக்கத்திற்கு எதிராக மேற்கொண்ட தீவிர நடவடிக்கைகளைக் கருத்திற் கொண்டு இவர்களைத் தீவிரவாதப் பெண்ணியவாதிகள் என்றும் அழைத்தனர். இவர்கள் பெண்களின் உடற்கூறே அவர்களின் அடிமை நிலைக்குக் காரணமாக இருக்கின்றது எனக் கருதியதால் கருத்தரித்தல், குழந்தைப்பேறு ஆகியவற்றிற்கு அடிப்படையான திருமணம், குடும்பம் ஆகியவற்றை வெறுத்தனர். மாறாக கட்டற்ற பாலியல் உறவு, பெண் ஓரினச் சேர்க்கை ஆகியவற்றை ஆதரித்தனர். இவர்களின் கருத்துக்கள் இந்திய, இலங்கை மக்களிடையே வரவேற்பைப் பெறவில்லை. இந்தியப் பெண்ணியம் சமூக சீர்திருத்தத்தை அடிப்படையாகக் கொண்டதாகவே அமைந்தது. இந்தியப் பண்பாட்டின் அடித்தளமான குடும்ப அமைப்பைச் சிதைப்பதாக இது அமையவில்லை. எனினும் பெண்கள் குடும்பத்தைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேணுவதற்கே உரியவர்கள் என்ற மரபான கருத்து மாறவேண்டும் என்பதிலும் அவர்களின் ஆளுமை முக்கியத்துவம் பெறவேண்டும் என்பதிலும் இந்தியப் பெண்ணியம் அக்கறை காட்டியது. எனவே பண்பாட்டின் அடித்தளமாகவுள்ள குடும்ப அமைப்பைச் சிதைக்காத வகையில் பெண்களுக்கும் சகல உரிமைகளையும் வழங்குவதையே இந்தியப் பெண்ணியவாதிகள் வலியுறுத்தினர்.

செ. கணேசலிங்கனின் நாவல்களில் மேற்குலகப் பெண்ணியச் சிந்தனையின் தாக்கம் தெளிவாகப் புலப்படுகின்றது. வகைமாதிரிக்காக இங்கே ஓரிரு நாவல்களை எடுத்துக் காட்டலாம். இவரது சூரியன் கிழக்கில் உதிப்பதில்லை என்னும் நாவல் 1989இல் வெளியிடப்பட்டது. இதன் மறுபதிப்பு 1997இல் வெளிவந்தது. இந் நாவலில் வருகின்ற பெண்கள் தீவிரவாதப் பெண்ணியச் சிந்தனைகளைப் பிரதிபலிப்பவர்களாகவே காணப்படுகின்றனர். சான்றாக யாழ்ப்பாணத்துப் பாரம்பரிய இந்துக் குடும்பத்தில் பிறந்தவளான சித்திரா திருமணம் செய்து குடும்பமாக வாழ்வதை வெறுத்து

*"ஒருவனுக்கு சமைத்துப் போட்டுப் பிள்ளை பெற்றுக் கொடுத்து அடிமைப் பணிகளும் செய்ய நான் தயாரில்லை"*

எனக்கூறிக் கொண்டு டுபாய் நாட்டிற்குப் பணிப் பெண்ணாகச் செல்கின்றாள். திருமணம் செய்து குடும்ப வாழ்வில் இணையாதவர்கள் பாலியல் இன்பத்தை அனுபவிக்க முடியாமற் போய்விடும் என்று கூறிய பாலனுக்கு அவள்,

*"அதை எப்படிப் பெறுவது அனுபவிப்பது என்பதையும் நான் அறிவேன்"*

என்று கூறுகின்றாள். பிறிதொரு சந்தர்ப்பத்தில் தம்பி யோகநாதன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"நீ கலியாணஞ் செய்து ஒரு பேரப்பிள்ளையைப் பெற்றுத் தருவாய் என்று அம்மா கனவு கண்டு கொண்டிருக்கிறா........"*

என்ற தாயின் ஆசையை எடுத்துக் காட்டியபோது அவள்,

*"கலியாணத்திற்கும் பிள்ளைபெறுவதற்கும் என்ன தொடர்பு? எனக்குப் பிள்ளை வேணுமென்றால் தெருவிலே போகிற எந்த வாலிபனோ, கிழவனோகூடத் தயாராக இருப்பாங்க. நான் விரும்பினவனைக் கூப்பிட்டே என்னைச் சினைப்படுத்த முடியும். அது என் பிள்ளையாகவும் இருக்கும். என் கருவில் சுமந்து இரத்தத்தைச் சிந்திப் பெற்று இரத்தத்தைப் பாலாக்கிக் கொடுத்து வளர்க்கும் பிள்ளையை மற்றொருவன் உரிமைபேச விடமாட்டேன்." (ப. 61)*

என்கின்றாள். சித்திராவின் தோழி உமா ஜெயிலர் ஒருவனைத் திருமணம் செய்கின்றாள். உமாவுக்குத் திருமண வாழ்வு என்றுமே மகிழ்ச்சியாக இருந்ததாகக் கூறப்படவில்லை. திருமணம் முடிந்த புதிதில் உமா கணவனிடம்,

*"உங்களுக்காகவே என் கற்பு நிலையை பெரிசாகிய பிறகும் பதின்நாலு ஆண்டுகளாகக் காப்பாற்றி வந்தேன்" எனக் கூறிய போது அவன், "யார் உன்னைக் காப்பாற்றச் சொன்னது?" எனக் கூறி அவளை அலட்சியம் செய்கின்றான். உமா கணவனின் தேவைகளுக்கு அடிபணியும் ஓர் அடிமை போலவே வாழ்வதாக ஆசிரியர் சித்திரிக்கின்றார். அவள் என்றுமே மகிழ்ச்சியாக இருக்கவில்லை என்றே சித்திரிக்கப்படுகின்றது.*

*"பாலுறவில் கூட அவள் இன்பம் பெற்றதாக இல்லை. அவன் தேவைக்கு அவள் அடிபணிய நேரிட்டது. அவனது குடிவெறியையும், வாய் நாற்றத்தையும் அவளால் பொறுக்கமுடியவில்லை" (ப. 71)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனின் தேவைக்கு அடிமைபோல் இசைந்து போகும் உமா, பல நாட்கள் பிரிந்திருந்த கணவனைச் சந்தித்த போது தனது தாபத்தை வெளிப்படுத்துகின்றாள். அவன் "என்னோடு வேசையாடப் பார்க்கிறாயா? (ப. 72) என்று அவளின் உணர்வினைக் கேவலப்படுத்துகின்றான். இது பெண்ணின் உணர்ச்சிகள் மதிக்கப்படாமல் ஆணின் தேவைகளுக்குப் பயன்படும் அடிமையாகவே பெண் இருக்க வேண்டும் என்ற ஆணாதிக்க உணர்வினையே வெளிப்படுத்துகின்றது.

ஜெயிலர் இறந்தபோது உமாவுக்கு சிறையிலிருந்து விடுதலை கிடைத்ததாகவே காட்டப்படுகின்றது. எனினும் சமூகக் கட்டுப்பாடுகள், விதவை என்ற பட்டம், சமூக அந்தஸ்து, ஊர் வம்பு ஆகியவற்றால் அவள் இன்னும் கொடுமைகளை அனுபவிக்க வேண்டும் என்று ஆசிரியர் சுட்டிக்காட்டுகின்றார். (ப. 78)

டுபாயிலிருந்து திரும்பிய சித்திரா கணவனை இழந்து விதவையாகி வெள்ளைச் சேலையுடன் நிற்கும் தோழி உமாவைப் பார்த்து ஆத்திரப்படுகின்றாள். அவளுக்கு உடுப்பதற்காக நிறச்சேலை கொடுகின்றாள். உமாவின் மாமியின் ஆசைகளை நிராகரித்து "அதெல்லாம் அந்தக் காலம். இன்னும் பெண்களெல்லாம் முட்டாள்களல்ல. மனைவி இறந்ததும் ஆண்களுக்கும் "விடன்" என்று கூறி உடையில் கட்டுப்பாடுகள் வைக்க வேண்டும்" (ப. 109)

"அந்தச் சிறையிலிருந்து நீ விடுபட்டு விட்டாய். இனிமேல் கலங்க வேண்டியதில்லை. மற்றவர்களுக்காக வாழ்ந்தது போதும், இனிமேல் உனக்காக வாழ். நல்ல காலம் அங்கிருந்திருந்தால் சாகும் வரை அவர்களுக்காகத் தான் வாழ்ந்திருப்பாய். அப்போதும் நல்ல மனைவி, நல்ல மருமகள் என்று பெயரும் எடுத்திருக்க மாட்டாய். அதற்குத் தான் பெண் பிறந்தாள் என்ற பொய்ப் பிரசாரம் வேறு. ஆண்கள்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழப்பிறந்தவர்களாம். மண்ணாங்கட்டி" (ப. 109) என்று தனது ஆத்திரத்தை வெளிக்காட்டி நிற்கின்றாள்.

பொதுவான இந்நாவல் யாழ்ப்பாணத்து இளம்பெண் ஒருத்தி திருமணம் செய்து குடும்ப அமைப்பினுள் கட்டுப்படுவதை விரும்பாத நிலையினை எடுத்துக் காட்டுகின்றது. அவளின் கருத்து நிலையினை வலுச்சேர்க்கும் விதமாக தோழி உமாவின் திருமண வாழ்க்கை துன்பகரமாக முடிவதும் காட்டப்படுகின்றது. உமாவின் திருமண வாழ்வின் சோகம், ஆணாதிக்கத்திற்கு அடிபணிந்து நின்ற நிலை ஆகியன சித்திராவின் கருத்து நிலைக்கு வலுச்சேர்க்க அவள் குடும்ப அமைப்பை வெறுத்த பெண்ணாகக் காட்டப்படுகின்றாள்.

கணேசலிங்கனின் மற்றொரு நாவலான குடும்பச் சிறையில் என்பது 1999இல் வெளிவந்தது. இந்நாவல் தமிழ்நாட்டில் இந்துப் பாரம்பரியத்தில் வாழ்கின்ற கூட்டுக் குடும்பமொன்றை மையமாகக் கொண்டது. இந்தக் குடும்பத்திலுள்ள மகாதேவன் என்ற இளைஞன் புலம்பெயர்ந்து அமெரிக்கா செல்கின்றான். அமெரிக்காவில் ஒருநாள் எதிர்பாராத வகையில் தமிழகத்துப் பெண்களான குமுதினி, சுகன்யா ஆகியோரைச் சந்திக்கின்றான். ஒரே நாட்டவர்கள் ஒரே இனத்தவர்கள் என்பதால் மூவரும் இலகுவாக நண்பர்களாகி விடுகின்றனர். இந்த நட்பு தனித்தனியாக இரண்டு பெண்களுடனும் பாலியல் இன்பத்தை அனுபவிக்கின்ற அளவுக்கு முன்னேறுகின்றது. ஒரே அறையில் வாழும் இப்பெண்கள் தமக்குள் எந்தவிதமான மனக்கசப்புமின்றி ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து மாறிமாறி அவனோடு பாலியல் இன்பத்தை அனுபவிக்கின்றனர்.

இந்த நிலையில் மகாதேவனின் தாய் தமிழகத்தில் அவனுக்குப் பெண் தேடுகின்றாள். மகாதேவன் இப்பெண்களில் ஒருத்தியையாவது திருமணம் செய்ய விரும்புகின்றான். ஆனால் அவனின் விருப்பத்தை இரண்டு பெண்களுமே ஏற்றுக்கொள்ள மறுத்துவிடுகின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமுதினி, "செக்ஸ்சுக்கும் கல்யாணத்திற்கும் தொடர்பில்லை" என்று கூறி அவன் தங்களோடு பாலியல் இன்பத்தை அனுபவித்ததால் தங்களில் ஒருவரையாவது திருமணம் செய்யவேண்டும் என்று அவன் கருதுவதை ஏற்க மறுக்கிறாள். மேலும்,

*"நாங்க இருவரும் குடும்பம் என்ற சிறையில் அடைபடாமல் தனிச் சுதந்திரத்துடன், ஜனநாயக உரிமைகளுடன் இன்பமாக வாழ்கிறோம்"*

எனக்கூறி குடும்ப அமைப்பை வெறுக்கும் தனது நிலையை வெளிப்படுத்துகின்றாள். குடும்ப அமைப்பினுள் கட்டுப்படுவதால் தமது சுதந்திரம் பறிக்கப்படுகின்றது என்றே இப்பெண்கள் கருதுகின்றார்கள். இதனாலேயே அவள் சடங்கு வைத்து பாலுறவுக்கு அனுமதி பெறும் திருமணத்தை வெறுத்து சுதந்திரமான பாலுறவுக்கு அவனை அழைக்கின்றாள். குமுதினி,

*"சுதந்திரமான பாலுறவுதான் வாழ்க்கைக்கு முக்கியமானதென்று எண்ணினால் தற்போது நடப்பது போல தொடரலாம். இருவருடனும் பாலுறவு கொள்ளத்தக்க வாய்ப்பையும் ஏற்படுத்தித் தந்தேன். இத்தகைய வாய்ப்பு அம்மா பேசும் திருமணத்தில் ஒருபோதும் கிடையாது. யோனிப் பொருத்தத்தை ஜாதகத்தில்தான் பார்ப்பார்கள். நம் இருவரிலும் பிடித்தவரோடு நீங்க வாழ்வதிலும் தவறில்லை. அமெரிக்காவில் குடும்ப உறவுப் பெயரின்றி அவரவர் தமது பெயருடன் கூட்டாகவும் தனித்தனியாகவும் வாழ்பவர் ஏராளம். சுகன்யாவைப் பிடிக்காவிட்டால் அதே போலவே வாழ்ந்து பார்க்கத் தயாராயிருக்கிறேன் நான். விரும்பாதவேளை வெளியேறிவிடுவேன். அந்த சுதந்திரம் வேண்டும்" (ப. 182)*

எனக் கூறுகின்றாள். இது தமிழர் பண்பாட்டில் புதுக்குரல். மேலைநாட்டுப் பெண்ணியவாதிகளின் குரல் தமிழர் பண்பாட்டிலும் ஒலிப்பதாக கணேசலிங்கன் சித்திரிக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணேசலிங்கனின் மற்றொரு நாவல் கோடையும் பனியும். இது 2003இல் வெளிவந்தது. இந்நாவலில் யாழ்ப்பாணத்து சைவத்தமிழ் இளைஞன் ஒருவன் புலம்பெயர்ந்து சுவீடன் சென்று அங்கு சுவீடன் நாட்டுக் கிறிஸ்தவப் பெண்ணொருத்தியைக் காதலித்துத் திருமணம் செய்து இரண்டு பிள்ளைகளும் பிறந்த நிலையில் பிரிந்து செல்வது காட்டப்படுகின்றது.

யாழ்ப்பாணத்து சைவத் தமிழ்க் குடும்பத்து இளைஞனான சிவபாலன் இலங்கையில் ஏற்பட்ட யுத்த நிலைமைகளால் புலம்பெயர்ந்து சுவீடன் சென்று அங்கு ஆங்கில ஆசிரியனாகப் பணிபுரிகின்றான். சைவக்குடும்பத்தில் பிறந்தாலும் மதவிடயங்களில் அக்கறை காட்டாத சிவபாலனுக்கு தன்னிடம் படித்த கிறிஸ்தவப் பெண்ணான ரூபியின் மேல் காதல் ஏற்படுகின்றது. ரூபியும் கிறிஸ்தவ மத விடயங்களில் அக்கறை இல்லாதவள் என்பதால் இருவரும் திருமணம் செய்து கொள்கின்றனர். கருத்தொருமித்து வாழும் காதல் ஜோடிகளாகக் காட்டப்படும் சிவபாலன் - ரூபி தம்பதியினருக்கு முதலில் ஓர் பெண்குழந்தையும் பின்னர் ஓர் ஆண் குழந்தையுமாக இரண்டு பிள்ளைகள் பிறக்கின்றனர். சிவபாலன் மனைவியையும் பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு யாழ்ப்பாணம் வருகின்றான். யாழ்ப்பாணத்தில் சிவபாலனின் தாய் சகோதரர்கள் அனைவரும் இவர்களை மிகுந்த அன்போது உபசரிக்கின்றனர். ரூபியும் அவர்கள் மீது மிகுந்த நேசமுள்ளவளாகவே இருக்கின்றாள். இவ்வாறான கதைப்போக்கில் திடீரென ஒரு மாற்றம் ஏற்படுகின்றது. திட்டமிட்ட நாளுக்கு முன்பாகவே ரூபி சுவீடன் செல்லத் தீர்மானிக்கின்றாள். அதுவும் கணவனைப் பிரிந்து தனியாக. தனது ஒரே ஆண்குழந்தையை கணவனின் தாயிடம் கொடுத்துவிட்டு பெண் குழந்தையை மட்டும் தன்னோடு அழைத்துக் கொண்டு சுவீடன் புறப்படுகின்றாள். சிவபாலன் சுவீடன் சென்று முறைப்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவாகரத்துப் பெற்றுத் தனியாக வாழப் போவதாகக் கதை கூறப்படுகின்றது.

சிவபாலனைப் பிரிந்து செல்ல வேண்டிய தேவை ரூபிக்கு ஏற்பட்டது ஏன் என்பதற்கு நாவலில் தெளிவான காரணங்கள் காட்டப்படவில்லை. சுவீடனில் நவீன வசதிகளுடன் வாழ்ந்தவளுக்கு யாழ்ப்பாணச் சூழல் பொருத்தமாக இருக்காது என்பது உண்மைதான். ஆனால் இவர்கள் மீண்டும் சுவீடனிலேயே வாழவுள்ளனர் என்பதால் பிரிவுக்கு நியாயம் கூறமுடியவில்லை. சிவபாலன் "சுவீடனிலேயே வாழ்வதென்றால் இந்தப் பிரிவு ஏற்படாமல் போயிருக்குமா?" என்று சிந்திக்கின்றான். மேலும் இருவேறு நாடுகள், இருவேறு மொழிகள், இருவேறு மதத்தவர், இருவேறு நிறத்தவர், இருவேறு அரசியல், இருவேறு சமூகச்சூழல் இவற்றையெல்லாம் வெறும் உணர்ச்சிமிக்க உடலுறவை வைத்து ஒன்றாக்கப் பார்த்தேனா அல்லது அந்தப் புலனுணர்ச்சி வலையில் வீழ்ந்தேனா, வீழ்த்தப்பட்டேனா" என்று சிந்திக்கின்றான். மேலும், "மொழி, இன, மத, நிற, பால் வேறுபாடுகளை ஒழிக்க வேண்டும் என்பது நல்ல கோட்பாடே. ஆனால் நடைமுறையில்? இவற்றின் அடியாக எழும் பண்பாட்டின் பலம். நான் இந்தப் போராட்டத்தில் தோல்வியுற்றேனா? ரூபி வெற்றி பெற்றாளா? இருவருமே தோற்றோமா? அதற்கு அடிப்படைக் காரணங்கள்? வெற்றுப் புலனுணர்ச்சியை நம்பியலாதா?........" (ப. 216) என்றெல்லாம் சிந்தித்துக் குழப்பமடைகின்றான்.

இங்கு சுவீடன் நாட்டு ரூபியும் யாழ்ப்பாணத்துச் சிவபாலனும் வெவ்வேறு பண்பாடுள்ளவர்கள் என்பதால் இவர்கள் இருவரும் இணைந்து வாழமுடியாது என்பதே ஆசிரியரின் கருத்தாக உள்ளது. இத்தகைய கருத்துநிலையை மனதிற்கொண்டு பாத்திரங்களைப் படிப்படியாக முரண்படுகின்றவாறு வளர்த்தெடுத்திருப்பின் இந்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவு நியாயப்படுத்தப்படலாம். ஆனால் ஒத்த மனநிலையில் காதலித்து இரண்டு பிள்ளைகளையும் பெற்று நல்ல கணவன், அன்பான பிள்ளைகள், நல்ல உறவினர்கள் என்று எந்தவிதமான வெறுப்புமின்றி வாழ்ந்த ரூபியை திடீரென குடும்பத்தைப் பிரிந்து செல்பவளாகக் காட்டுவது பொருத்தமாக அமையவில்லை. இது குடும்பத்தை உடைக்க வேண்டும் என்ற பெண்ணியச் சிந்தனையின் தாக்கம். ஆசிரியரின் கருத்துநிலையில் செல்வாக்குச் செலுத்தியிருப்பதையே எடுத்துக் காட்டுகின்றது.

L0373

புலம்பெயர ஆரம்பித்த தொடக்க காலங்களில் இருந்தநிலை இன்று மாறிவிட்டது. இன்று எமது இரண்டாம் மூன்றாம் தலைமுறையினர் ஈழத்தவர்களைத் திருமணம் செய்ய முடியாத நிலையிலேயே உள்ளனர். இவர்களில் பலர் வெளிநாட்டவர்களைத் திருமணம் செய்து குடும்ப அமைப்பில் வாழ்கின்றனர். இந்த நிலை மேன்மேலும் தொடரக்கூடிய சாத்தியங்களே அதிகமாக உள்ளன. இதனால் எம்மவர்கள் தமது தனித்துவங்கள் சிலவற்றை இழக்க நேரிடலாமே தவிர குடும்பப் பிரிவே நிச்சயம் என்று கூறமுடியாது. எவ்வாறாயினும் ரூபியின் பிரிவுக்கு ஆசிரியர் வலுவான காரணங்களைக் காட்டியிருப்பின் நாவல் யதார்த்தமாக அமைந்திருக்கும். அது நிகழாத பட்சத்தில் வெறுமனே கருத்தியலுக்காக கதைமாந்தர்களைப் பலியிட்டதாகவே அமைந்துவிடும். இங்கு அதுவே நிகழ்ந்துள்ளது போலத் தெரிகின்றது.

தொகுத்து நோக்கும் போது இங்கு காட்டப்பட்ட மூன்று நாவல்களிலும் குடும்பப் பிரிவே முதன்மைப்பட்டு நிற்கின்றது. முன்னைய இரு நாவல்களிலும் குடும்ப அமைப்பு உடைக்கப்படுவதும் பெண்கள் சுதந்திரமாக வாழமுற்படுவதும் காட்டப்படுகின்றது. உண்மையில் தமிழர் பண்பாட்டினைக் கட்டிக் காக்கின்ற ஒரு வலுவான நிறுவனமாகவே குடும்ப அமைப்பு இன்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து வருகின்றது. இன்னும் இது அவசியமற்றதாகக் கருதப்படவில்லை. இதனால் இந்த அமைப்பினை உடைக்க வேண்டும் என்ற சிந்தனை இங்கு முனைப்புப் பெறவில்லை. குடும்ப அமைப்பில் பெண்கள் சகல உரிமைகளையும் பெற்று ஆளுமையுடன் வாழ்வதையே இந்தியப் பெண்ணியமும் வலியுறுத்துகின்றது. மேற்கில் இந்த நிலை சற்று மாறுபடலாம். இறுதியாகக் காட்டிய நாவலில் சிவபாலன் குடும்ப அமைப்பை உடைக்க விரும்பாத நிலையிலும் மேற்கு நாட்டவளான ரூபியே அதனை உடைக்கத் துணிவது மேலைப்பண்பாட்டினையே உணர்த்துகின்றது. இவளிடம் பெண்ணியச் சிந்தனையின் தாக்கம் இருப்பதாகக் காட்டப்படவில்லை. அவளின் பிரிவுக்கு பண்பாட்டு முரண்பாடே காரணமாகக் கூறப்படுகின்றது. ஆனால் அந்த முரண்பாடு பாத்திரங்களின் வளர்ச்சிப் போக்கில் புலப்படுத்தப்படவில்லை. இதனால் முடிவு வலிந்து உருவாக்கப்பட்டதாகவே அமைகின்றது. உண்மையில் இவை பெண்ணியம் சார்ந்த கருத்து நிலைகளின் தாக்கத்தினால் கருத்தியலுக்கு முக்கியத்துவம் கொடுத்துக் கதை மாந்தர்களைப் பலியிட்ட ஒரு விபத்தாகவே தெரிகின்றது.

**பயன்படுத்திய நூல்கள்**


செ. கணேசலிங்கன் - *(1997* மறுபதிப்பு*)* சூரியன் கிழக்கில் உதிப்பதில்லை, சென்னை

*(1999)* குடும்பச் சிறையில், சென்னை

*(2003)* கோடையும் பனியும், சென்னை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செ. கணேசலிங்கனின் நாவல்களில் குடும்பச் சிதைவு

குடும்பம் என்ற சமுதாய நிறுவனம் ஒரு ஆணையும் பெண்ணையும் அடிப்படையாகக் கொண்டதாகும். சமுதாய வளர்ச்சிப் போக்கில் புராதன பொதுவுடைமை நிலையில் ஆணும் பெண்ணும் எந்தவிதமான கட்டுப்பாடுகளும் இல்லாது சுதந்திரமாகவும் சமத்துவமாகவும் வாழ்ந்து வந்தனர். பாலியல் நுகர்விலும் எந்தவிதமான உறவுமுறைக் கட்டுப்பாடுகளும் இருக்கவில்லை. காலப்போக்கில் இத்தகைய வாழ்க்கைமுறையில் சிறிதுமாறுதல் ஏற்பட்டது. ஆண் தனது தாய் உடன்பிறந்த சகோதரிகள் ஆகியோருடன் பாலியல் தொடர்புகளைத் தவிர்த்துக் கொண்டான். அதேவேளை தனது பல சோடிகளில் ஒருத்தியைப் பிரதான சோடியாக்கிக் கொள்கின்றான். அவளும் அவனையே பிரதான சோடியாக்கிக் கொள்கின்றாள். இத்தகைய நிலை இணைக்குடும்பம் ஒன்றிற்கு வித்திட்டது. இணைக்குடும்பம் மிகவும் பலவீனமான அமைப்பாகவே இருந்தாலும் இந்த வாழ்வின் மூலம் பெண் தனது வயிற்றில் உருவாகிய குழந்தையின் தகப்பன் யார் என்பதை அறிந்து கொள்கிறாள். பிரசவம், குழந்தை வளர்ப்பு முதலிய காரணங்களால் பெண் வேட்டையிலும் வேறு தொழில்களிலும் ஈடுபடமுடியாத நிலை வந்த போது அவள் ஆணைச்சார்ந்தே வாழவேண்டி ஏற்படுகின்றது. ஆணே சொத்துக்குரியவனாகவும் மாறுகின்றான். இதனால் தாய்வழி உரிமையும் தூக்கி எறியப்பட்டு தந்தை வழி உரிமை பின்பற்றப்படுகின்றது. ஆணின் தலைமையில் குடும்பம் என்ற அமைப்பு உருவாகின்றது. பெண் ஆணின் சொத்துக்குரிய வாரிசைப் பெற்றுத்தர வேண்டியவள் என்பதால் அவளுக்கு மட்டும் கற்பு வலியுறுத்தப்பட்டது. இதனால் அவள் தனது சுதந்திரத்தை இழந்து ஆணுக்கு அடிமையாக்கப்பட்டாள். எனவே குடும்பம் என்ற அமைப்பே பெண்ணை அடிமையாக்கியது என்பதே பெண்ணியவாதிகளின் கருத்தாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாளித்துவத்திற்கு எதிராக எழுந்த மார்க்சிய வர்க்கப் போராட்டங்களின் போது அடக்குமுறைக்கு எதிராகக் கொடுக்கப்பட்ட குரல் பெண்களை அடக்குவதை எதிர்த்தும் ஒலித்தது. 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மேலைநாடுகளில் பெண்ணியவாதிகள் பெண்களுக்கும் ஆண்களைப் போலவே சமமான உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்று குரலெழுப்பினர். பெண்ணியச் சிந்தனைகளின் வளர்ச்சிப் போக்கில் பல்வேறு வகையான கருத்து நிலைகளைக் கொண்ட பெண்ணியவாதிகள் உருவாகினர். இவற்றுள் ஒன்றாகவே நவீன பெண்ணியம் தோற்றம் பெற்றது. இது 1970களின் தொடக்கத்தில் மேற்கில் உருவாகியது. இவர்களின் செயற்பாட்டினைக் கருத்திற் கொண்டு இதனைத் தீவிரவாதப் பெண்ணியம் என்றும் அழைத்தனர். இவர்கள் பெண்களின் உடற்கூறே அவர்களின் அடிமை நிலைக்குக் காரணமாக இருக்கின்றது என்று கருதியதால் கருத்தரித்தல், குழந்தைப்பேறு ஆகியவற்றிற்கு அடிப்படையான திருமணம், குடும்பம் ஆகியவற்றை வெறுத்தனர். மாறாக கட்டற்ற பாலியல் உறவு, பெண் ஓரினச் சேர்க்கை ஆகியவற்றை ஆதரித்தனர். இவர்களின் கருத்துக்கள் இந்திய இலங்கை மக்களிடையே வரவேற்றைப் பெறவில்லை. இந்தியப் பெண்ணியம் சமூக சீர்திருத்தத்தை அடிப்படையாகக் கொண்டதாகவே அமைந்தது. இந்தியப் பண்பாட்டின் அடித்தளமான குடும்ப அமைப்பைச் சிதைப்பதாக இது அமையவில்லை. எனினும் பெண்கள் குடும்பத்தைப் பேணுவதற்கே உரியவர்கள் என்ற மரபான கருத்து மாறவேண்டும் என்பதிலும் அவர்களின் ஆளுமை முக்கியத்துவம் பெற வேண்டும் என்பதிலும் இப் பெண்ணியம் அக்கறை காட்டியது. எனவே பண்பாட்டின் அடித்தளமாகவுள்ள குடும்ப அமைப்பைச் சிதைக்காத வகையில் பெண்களுக்கும் சகல உரிமைகளும் வழங்கப்படுவதையே இந்தியப் பெண்ணியவாதிகள் விரும்பினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செ. கணேசலிங்கனின் நாவல்களில் குடும்ப அமைப்பை உடைக்கின்ற பெண்கள் காட்டப்படுகின்றனர். வகைமாதிரிக்காக இங்கே இரண்டு நாவல்கள் எடுத்துக்காட்டப்படுகின்றன. இவரது சூரியன் கிழக்கில் உதிப்பதில்லை என்னும் நாவல் 1989இல் வெளியிடப்பட்டது. இதன் மறுபதிப்பு 1997இல் வெளிவந்தது. யாழ்ப்பாணத்துப் பாரம்பரிய இந்துப் பண்பாட்டில் வளர்ந்த சித்திரா *"ஒருவனுக்கு சமைத்துப் போட்டுப் பிள்ளை பெற்றுக் கொடுத்து அடிமைப் பணிகளும் செய்ய நான் தயாரில்லை"*

எனக்கூறிக் கொண்டு டுபாய் நாட்டிற்குப் பணிப் பெண்ணாகச் செல்கின்றாள். திருமணம் செய்து குடும்ப வாழ்வில் இணையாதவர்கள் பாலியல் இன்பத்தை அனுபவிக்க முடியாமற் போய்விடும் என்று சுட்டிகாட்டிய பாலனுக்கு அவள்,

*"அதை எப்படிப் பெறுவது அனுபவிப்பது என்பதையும் நான் அறிவேன்"*

என்று கூறுகின்றாள். வேறொரு சந்தர்ப்பத்தில் தம்பி யோகநாதன்,

*"நீ கலியாணஞ் செய்து ஒரு பேரப்பிள்ளையைப் பெற்றுத் தருவாய் என்று அம்மா கனவு கண்டு கொண்டிருக்கிறா நீ என்னவென்றால்......" (ப. 61)*

என்ற தாயின் ஆசையை எடுத்துக் காட்டியபோது சித்திரா,

*"கலியாணத்திற்கும் பிள்ளைபெறுவதற்கும் என்ன தொடர்பு? எனக்குப் பிள்ளை வேணுமென்றால் தெருவிலே போகிற எந்த வாலிபனோ, கிழவனோகூடத் தயாராக இருப்பாங்க. நான் விரும்பினவனைக் கூப்பிட்டே என்னைச் சினைப்படுத்த முடியும். அது என் பிள்ளையாகவும் இருக்கும். என் கருவில் சுமந்து இரத்தத்தைச்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சிந்திப் பெற்று இரத்தத்தைப் பாலாக்கிக் கொடுத்து வளர்க்கும் பிள்ளையை மற்றொருவன் உரிமைபேச விடமாட்டேன்.'' (ப. 61)*

என்று கூறுகின்றாள்.

சித்திராவின் தோழி உமா ஜெயிலர் ஒருவனைத் திருமணம் செய்கின்றாள். உமாவுக்குத் திருமண வாழ்வு என்றுமே மகிழ்ச்சியாக அமையவில்லை. திருமணம் முடிந்த காலத்தில் உமா கணவனிடம்,

*''உங்களுக்காகவே என் கற்பு நிலையை பெரிசாகிய பிறகும் பதின்நாலு ஆண்டுகளாகக் காப்பாற்றி வந்தேன்'' எனக் கூறிய போது அவன், ''யார் உன்னைக் காப்பாற்றச் சொன்னது?'' (ப. 31) எனக் கூறி அவளை அலட்சியம் செய்கின்றாள்.* உமாவின் வாழ்க்கை என்றைக்கும் மகிழ்ச்சியாக இருக்கவில்லை என்பதை ஆசிரியர் எடுத்துக் கூறுகின்றார்.

*''பாலுறவில் கூட அவள் இன்பம் பெற்றதாக இல்லை. அவன் தேவைக்கு அவள் அடிபணிய நேரிட்டது. அவனது குடிவெறியையும், வாய் நாற்றத்தையும் அவளால் பொறுக்கமுடியவில்லை'' (ப. 71)*

சில நாட்கள் பிரிந்திருந்த பின்னர் சந்தித்த போது அவள் தனது பாலுறவுத் தாபத்தை மறைமுகமாகத் தெரியப்படுத்தியபோது அவன் "என்னடி என்னோடு வேசையாடப் பார்க்கிறாயா? (ப. 72) எனக் கேட்கின்றான். இது பெண்ணின் உணர்ச்சிகள் மதிக்கப்படாமல் ஆணின் தேவைகளுக்குப் பயன்படும் அடிமையாகவே பெண் இருக்க வேண்டும் என்ற ஆணாதிக்க உணர்வினையே வெளிப்படுத்துகின்றது.

ஜெயிலர் இறந்தபோது உமாவுக்கு சிறையிலிருந்து விடுதலை கிடைத்ததாகவே காட்டப்படுகின்றது. எனினும் சமூகக் கட்டுப்பாடுகள், விதவை என்ற பட்டம், சமூக அந்தஸ்து, ஊர் வம்பு ஆகியவற்றால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் இன்னும் கொடுமைகளை அனுபவிக்க வேண்டும் என்று ஆசிரியர் சுட்டிக்காட்டுகின்றார். (ப. 78)

டுபாய் சென்ற சித்திரா திரும்பி வந்தபோது உமாவின் கணவன் இறந்த செய்தியை அறிகின்றாள். உமாவுக்கு டுபாயில் வாங்கிய சேலையுடன் அவளின் வீட்டிற்குச் செல்கின்றாள். மாமியாரின் வேண்டுகோளின்படி வெள்ளைச்சேலை உடுத்த உமாவுக்கு சித்திரா நிறச்சேலை கொடுக்கிறான்.

"எனக்கு வெள்ளைச் சேலையல்லவா தரவேண்டும்"

எனக்கூறிய உமாவுக்கு அவள்,

"அதெல்லாம் அந்தக் காலம். இன்னும் பெண்களெல்லாம் முட்டாள்களல்ல. மனைவி இறந்ததும் ஆண்களுக்கும் "விடன்"என்று கூறி உடையில் கட்டுப்பாடுகள் வைக்க வேண்டும்" (ப. 109)

என்று சமூகத்தின் கட்டுப்பாட்டைத் தூக்கி எறிந்து பேசுகின்றாள்.

*"என் மாமா, மாமி வெள்ளைச் சேலை கட்டுவதையே விரும்புகிறார்கள். கொழும்பில் அவர்கள் இருக்கும் வரை உடுக்கச் செய்தார்கள்" (ப. 109)*

எனக்கூறிய உமாவுக்கு சித்திரா,

*"அந்தச் சிறையிலிருந்து நீ விடுபட்டு விட்டாய். இனிமேல் கலங்க வேண்டியதில்லை. மற்றவர்களுக்காக வாழ்ந்தது போதும், இனிமேல் உனக்காக வாழ். நல்ல காலம் அங்கிருந்திருந்தால் சாகும் வரை அவர்களுக்காகத் தான் வாழ்ந்திருப்பாய். அப்போதும் நல்ல மனைவி, நல்ல மருமகள் என்று பெயரும் எடுத்திருக்க மாட்டாய். அதற்குத் தான் பெண் பிறந்தாள் என்ற பொய்ப் பிரசாரம் வேறு. ஆண்கள்தான் வாழப்பிறந்தவர்களாம். மண்ணாங்கட்டி" (ப. 109)*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று தனது ஆத்திரத்தை வெளிக்காட்டி நிற்கின்றாள்.

பொதுவாக இந்த நாவலில் சித்திரா என்ற யாழ்ப்பாணத்து இளம்பெண் ஒருத்தி திருமணம் செய்து குடும்ப அமைப்பில் கட்டுப்படுவதை விரும்பாமல் சுதந்திரமானவளாக வாழ விரும்புவது காட்டப்படுகின்றது. திருமணம், குடும்பம் என்பவை பெண்ணுக்குச் சிறைபோன்றதே என்ற இவளின் கருத்திற்கு அரண் செய்வதாகவே உாமவின் குடும்பவாழ்க்கை அவளுக்குச் சிறையாக அமைந்தது காட்டப்படுகின்றது.

கணேசலிங்கனின் மற்றொரு நாவலான குடும்பச்சிறையில் என்பது 1999இல் வெளிவந்தது. இந்நாவல் தமிழ்நாட்டில் இந்துப்பாரம்பரியத்தில் வாழ்கின்ற கூட்டுக் குடும்பமொன்றை மையமாகக் கொண்டது. இந்தக் குடும்பத்திலுள்ள மகாதேவன் என்ற இளைஞன் புலம்பெயர்ந்து அமெரிக்கா செல்கின்றான். அமெரிக்காவில் ஆங்கிலம் பேசும் அந்நிய மனிதர்களையே சந்திக்கின்ற மகாதேவன் ஒருநாள் எதிர்பாராத வகையில் தமிழகத்துப் பெண்களான குமுதினி, சுகன்யா ஆகியோரைச் சந்திக்கின்றான். ஒரே நாட்டவர்கள் ஒரே இனத்தவர்கள் என்பதால் மூவரும் இலகுவாக நண்பர்களாகி விடுகின்றனர். இந்த நட்பு தொலைபேசி மூலமாகவும், விடுமுறை தினங்களில் ஒன்றாக உணவருந்தச் செல்வதனூடாகவும் படிப்படியாக முன்னேறி இரு பெண்களும் அவனோடு தனித்தனியாக ஊர் சுற்றி விடுதியில் தங்கி பாலியல் இன்பத்தை அனுபவிக்கின்ற அளவுக்கு முன்னேறுகின்றது. ஒரே அறையில் வாழ்கின்ற இப்பெண்கள் எந்த மனக்கசப்புமின்றி இருவரும் மாறிமாறி அவனோடு பாலியல் இன்பத்தை அனுபவிக்கின்றனர்.

இந்த நிலையில் மகாதேவனின் தாய் தமிழகத்தில் அவனுக்குப் பெண் பார்க்கின்றாள். சகுந்தலா என்ற தமிழ்நாட்டுப் பெண்ணின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகைப்படமும் அவனுக்கு அனுப்பப்படுகின்றது. மகாதேவன் தாயின் ஆசையை உணர்ந்து கொண்டாலும் இந்த இரண்டு பெண்களையும் என்ன செய்வது என்று தெரியாமல் குழம்புகின்றான். இவர்களில் ஒருவரையாவது திருமணம் செய்து கொள்ளலாம் என்று யோசித்து தனது விரும்பத்தை குமுதினியிடம் தெரிவிக்கின்றான். குமுதினியும், சுகன்யாவும் மகாதேவனின் விருப்பத்தை ஏற்க மறுத்துவிடுகின்றனர். குமுதினி,

"செக்ஸ்சுக்கும் கல்யாணத்திற்கும் தொடர்பில்லை" (ப. 177)

என்று கூறி அவன் தங்களோடு பாலியல் இன்பத்தை அனுபவித்ததால் தங்களில் ஒருவரையாவது திருமணம் செய்யவேண்டும் என்ற அவன் கருத்தை நிராகரித்து விடுகின்றாள். அவனோடு அடிக்கடி பேசும் கருத்துக்களை மகாதேவன் நினைத்துப் பார்க்கின்றான்.

*"கலியாணம் என்பது குடும்பத்தின் முதல்படி என அவள் கருதியிருக்க வேண்டும். அவளது கூற்றில் உண்மையே இருப்பதாக உணர்ந்தான். கலியாணம் என்பது குடும்பம் என்ற நிறுவனத்திற்காக என அவனும் எண்ணிக் கொண்டான். அங்கேதானே நிரந்தர செக்ஸ்சுக்கு உரிமை இருக்கிறதே.... அந்த செக்ஸ் பெண்ணை அடிமைப்படுத்தும் செக்ஸ் எனக்கருதினாளா? அப்போது ஆண்நிலை அவனும் குடும்பத்திற்கு அடிமையாகிறானா? குடும்பம் வன்முறை வடிவங்கொண்டது என குமுதினி அடிக்கடி கூறுகின்றாளே. ஆதிக்க உறவில் தான் கூட்டுக்குடும்ப, குடும்ப உறவெல்லாம் ஏற்படுகின்றது என்று எண்ணுகிறாளா? பாலுறவிற்கும் மனைவியின் அனுமதி வேண்டுமா? இல்லாவிட்டால் வன்முறையா? தற்போது அவளுடனும் சுகன்யாவிடமும் கொண்ட உறவு தான் சுதந்திரமான ஜனநாயகமான பரிசுத்த உணர்வு உறவு எனக் கருதுகிறாளா?" (ப. 177)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என மகாதேவனின் மனம் அவள் கூறும் கருத்துக்களை அசைபோடுகின்றது. எனவே அப்பெண்கள் மகாதேவனின் கூட்டுக்குடும்பத்தில் இணைவதை விரும்பவில்லை. குடும்ப அமைப்புத்தம்மை அடிமையாக்கி விடும் என்பதே அவர்களின் கருத்தாகும்.

சுகன்யா மகாதேவனுக்கு,

*"என்னைக் காதலிப்பதினால் குடும்பத்தாரை விட்டு விட்டு இங்கேயே இருப்பதினால் நீங்கள் வேண்டினால் உங்களுடன் வந்து இருக்கத் தயாராயிருக்கிறேன். இனிமேல் சடங்குமுறை வைத்துப் பாலுறவுக்கு அனுமதி பெறும் போலித்தேவையும் இல்லையே. அக்காவின் (குமுதினி) உறவும் அப்படியே இருக்கலாம்" (ப. 182)* எனக்கூறுகின்றாள்.

குமுதினியும்,

*"என்னுடையதும் அதே முடிவுதான். சுதந்திரமான பாலுறவுதான் வாழ்க்கைக்கு முக்கியமானதென்று எண்ணினால் தற்போது நடப்பது போல தொடரலாம். இருவருடனும் பாலுறவு கொள்ளத் தக்க வாய்ப்பையும் ஏற்படுத்தித் தந்தேன். இத்தகைய வாய்ப்பு அம்மா பேசும் திருமணத்தில் ஒருபோதும் கிடையாது. யோனிப் பொருத்தத்தை ஜாதகத்தில்தான் பார்ப்பார்கள். நம் இருவரிலும் பிடித்தவரோடு நீங்க வாழ்வதிலும் தவறில்லை. அமெரிக்காவில் குடும்ப உறவுப் பெயரின்றி அவரவர் தமது பெயருடன் கூட்டாகவும், தனித்தனியாகவும் வாழ்பவர் ஏராளம். சுகன்யாவைப் பிடிக்காவிட்டால் அதே போலவே வாழ்ந்து பார்க்கத் தயாராயிருக்கின்றேன். நான் விரும்பாத வேளை வெளியேறிவிடுவேன். அந்த சுதந்திரம் வேண்டும். (ப. 182)*

என்று கூறிய குமுதினி மேலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"நாங்க இருவரும் குடும்பம் என்ற சிறையில் அடைபடாமல் தனிச்சுதந்திரத்துடன் ஜனநாயக உரிமைகளுடன் இன்பமாக வாழ்கிறோம்" (ப. 183)*

என்று குடும்ப உறவை வெறுக்கும் தமது நிலையை வெளிப்படுத்துகின்றாள். இவர்கள் இருவருமே இந்துப் பாரம்பரியத்தில் ஊறிய தமிழ்நாட்டுப் பெண்கள். புலம்பெயர்ந்த சூழல் அல்லது புதிய பெண்ணியச் சிந்தனைகள் இவர்களின் கருத்து நிலையை மாற்றியிருக்கலாம்.

பொதுவாக நோக்கும் போது மேலே காட்டப்பட்ட இரண்டு நாவல்களிலும் வருகின்ற பெண்கள் குடும்பம் என்ற அமைப்பினுள் கட்டுப்பட விரும்பாதவர்கள். இவர்கள் குடும்பம் பெண்ணுக்குச் சிறை போன்றதே என்றும் அச்சிறையில் பெண் ஆணுக்கு அடிமையாகவே வாழ வேண்டும் என்றும் கருதுகின்றனர். ஆனால் இவர்கள் திருமணம், குடும்பம் என்ற உறவுகளை வெறுத்தாலும் பாலியல் இன்பத்தைப் புறக்கணிக்கவில்லை. இதனைச் சுதந்திரமாக அனுபவிக்கவே விரும்புகின்றனர். இத்தகைய கருத்து நிலை தீவிரவாதப் பெண்ணியத்தினாலேயே முன்வைக்கப்பட்டதாகும். இவர்களின் கருத்துக்கள் மேற்கில் கூட பெரிய வரவேற்பைப் பெறவில்லை. இந்தியாவிலும், இலங்கையிலும் இக்கருத்துக்கள் எந்த வகையிலும் முக்கியத்துவம் பெறவில்லை. இந்தியப் பெண்ணியம் பண்பாட்டின் அடித்தளமான குடும்ப அமைப்பை சிதைக்காதவாறே பெண்களின் உரிமைகளை வலியுறுத்தியது. இத்தகைய நிலையில் இவ்விரு நாவல்களிலும் இடம்பெறுகின்ற பெண்கள் ஏன் இவ்வாறான கருத்துடையவர்களாகப் படைக்கப்பட்டுள்ளனர் என்ற வினா வாசகர்களின் மனதில் எழலாம். புலம்பெயர் சூழலும், யுத்தச் சூழ்நிலையும், சமூக ஒடுக்குமுறைகளும் பெண்களை இவ்வாறு சிந்திக்க வைத்துவிட்டனவா என்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணிவிடலாம். உண்மையில் ஒரு சில உதாரணங்களைப் புறநடையாகக் கொண்டால் எமது சமூகம் இத்தகைய கருத்துநிலையை ஏற்றுக்கொள்ளவில்லை என்றே கூறவேண்டும். குடும்பத்தைச் சிதைக்க வேண்டும் என்ற கருத்து நிலையுள்ள பெண்கள் இங்கு உருவாகவில்லை. அல்லது அவ்வாறான இந்த நிலையில் நாவலில் இடம்பெறுகின்ற பாத்திரங்கள் வெறுங் கற்பனை என்றே கருதவேண்டியுள்ளது. இது பெண்ணியம் சார்ந்த கருத்துநிலைக்கு ஏற்ற வகையில் நாவல் எழுத முற்பட்டதால் ஏற்பட்ட விபத்தாகவும் கருதப்பட வாய்ப்புள்ளது.

**பயன்படுத்திய நூல்கள்**


செ. கணேசலிங்கன் - *(1997 மறுபதிப்பு)* சூரியன் கிழக்கில் உதிப்பதில்லை, சென்னை

*(1999)* குடும்பச் சிறையில், சென்னை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செங்கை ஆழியானின் நாவல்களில் சமுதாயச் சிக்கல்கள்

ஈழநாட்டின் வடபுலத்து யாழ்ப்பாணத்திலே பிறந்த கந்தையா குணராசா ஒரு புவியியலாளன். சிறந்த நிர்வாகி. தமிழ் இலக்கிய உலகம் அவரை "செங்கை ஆழியான்" என்ற புனைகதை எழுத்தாளராகவே அறிந்து வைத்திருக்கின்றது. அந்த அளவிற்கு ஈழத்துத் தமிழ்ப்புனை கதைத்துறையில் அவரின் அடையாளங்கள் பதிந்து வைக்கப்பட்டுள்ளன. 1960களின் ஆரம்பத்தில் நாவல் உலகில் அடியெடுத்து வைத்த செங்கை ஆழியான் இன்றுவரை எழுதிக் கொண்டிருக்கிறார். இதுவரை நாற்பதுக்கும் அதிகமான நாவல்களை வெளியிட்டுள்ளார். இந்நாவல்களை வரலாறு சார்ந்தவை, நகைச்சுவை பொருந்தியவை, சமூகம் சார்ந்தவை எனப் பலவாறாக வகுத்து நோக்கலாம். இவற்றுள் சமுதாயம் சார்ந்த நாவல்களில் புலப்படுத்தப்படும் சமுதாயப் பிரச்சினைகள் இங்கே எடுத்துக் காட்டப்படுகின்றன.

செங்கை ஆழியானின் நாவல்களில் ஈழத்தின் வடபுலக் கிராமங்கள் பலவும் களங்களாக இடம்பெற்றுள்ளன. இக்களங்கள் பலவற்றிலும் பிரதானமான சமுதாயப் பிரச்சினைகளாக சாதியம், சீதனம் ஆகியவற்றுடன் உழைக்கும் மக்கள் எதிர்நோக்கிய பல்வேறு பிரச்சினைகளையும் இவரின் நாவல்கள் எடுத்துக் காட்டுகின்றன.

தமிழர் சமுதாய அமைப்பிலே காணப்படுகின்ற பிரதானமான சமுதாயச் சிக்கல்களில் ஒன்று தீண்டாமை ஆகும். ஈழத்து மக்களிடையே குறிப்பாக யாழ்ப்பாணச் சமூகத்தினரிடையே சாதியமைப்பின் இறுக்கம் மிகக் கடினமான அளவில் பின்பற்றப்பட்டு வந்திருக்கின்றது. இங்கு அதிகாரமேன்மையுடையவர்களாக இருந்த வேளாளர்கள், ஒரு சில சாதியினரை அடிமை குடிமைகளாக வைத்திருந்ததோடு அவர்களின் சமூக உரிமைகளையும் மறுத்துவந்தனர். இதனால் யாழ்ப்பாணத்தின் கிராமங்கள் பல


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்க்கோலம் கொண்டன. இத்தகைய சமூகப்பின்னணியில் எழுத்தாளர்கள் பலருக்கும் சாதியமே இலக்கியப் பொருளானது. செங்கைஆழியானின் பிரளயம் (1989), அக்கினி (1991) ஆகிய நாவல்கள் சாதியம் தொடர்பான அவரின் பார்வையினையும் எடுத்துக் காட்டுகின்றன. 'பிரளயம்' யாழ்ப்பாணத்துக் கிராமத்திலுள்ள வண்ணார்பண்ணைக் கிராமத்தைக் களமாகக் கொண்டது. இக்கிராமத்தில் வாழும் சலவைத் தொழிலாளியான வேலுப்பிள்ளையின் குடும்பம் கல்விகற்று முன்னேறி வருகின்றது. இந்நிலையில் உயர்சாதியைச் சேர்ந்த வாமதேவன் எனும் இளைஞன் வேலுப்பிள்ளையின் மகள் சுபத்திராவைக் காதலிக்கிறான். சாதியை மீறிய இக்காதலை வாமதேவனின் பெற்றோரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இதனால் வாமதேவனுக்கு அவனது சாதிக்குள் திருமண ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. வயிற்றிலே கருவோடு நின்ற சுபத்திராவை வாமதேவனும் அவனது பெற்றோரும் பொருட்படுத்தாத நிலையில் வாமதேவனின் தம்பியான மகாலிங்கம் அவளை ஏற்றுக்கொள்ள முன்வருகிறான். மகாலிங்கத்தின் செயல் இளைய தலைமுறையினரிடையே ஏற்பட்டுவரும் மனமாற்றத்தை எடுத்துக் காட்டினாலும் சாதியை மீறிய காதல் துன்பத்தையே தரும் என்பதையே சுபத்திராவின் நிலை எமக்கு உணர்த்துகின்றது.

இவரின் மற்றொரு நாவலான அக்கினி யாழ்ப்பாணத்தின் கலட்டிக் கிராமத்தைக் களமாகக் கொண்டது. இந்நாவலில் வருகின்ற கனகு கலட்டியில் வாழும் அடிநிலை மக்களில் ஒருவன். பொருளாதார அடிப்படையில் மிகவும் பின்தங்கிய குடும்பத்தில் பிறந்தவன். யாழ்ப்பாணத்து இளைஞர்கள் பலரும் புலம் பெயர்ந்து வெளிநாடுகளுக்குச் சென்றபோது கனகுவும் புலம் பெயர்கிறான். கனகுவின் வெளிநாட்டுப் பணத்தால் அவனின் குடும்பநிலை உயர்வடைகின்றது. மண்வீடு கல்வீடாகின்றது. வசதிகளும் அதிகரிக்கின்றன. சகோதரர்கள் படித்து முன்னேறுகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலையில் கனகு ஊருக்குத் திரும்பி வருகிறான். வெளிநாட்டுப் பணத்தால் அவனின் சமுதாய நிலை மாறுகின்றது. கனகு கனகசபை ஆகின்றான். கனகசபையின் தம்பி சிவபாலன் உயர்சாதிப் பெண்ணொருத்தியைக் காதலிக்கின்றான். இக்காதலுக்குத் தடை ஏற்பட்ட போது கனகசபை தனது நண்பனுக்கு, "இது தனி மனித விவகாரமல்ல. சமூக விவகாரம். ஒரு கலியாணத்தின் பின்னணியில் எத்தனை சமூக உறவுகள் இருக்கின்றன தெரியுமா? பிரிக்க முடியாதவாறு யாழ்ப்பாணத்தில் சமூகத்தோடு ஒட்டிவிட்ட சாதிப்பாகுபாடு என்னதான் மாற்றம் நேரிட்டாலும் அழியும் என என்னால் நம்பமுடியவில்லை......

"மாற்றங்கள் சமூகத்தில் திடீரென ஏற்படுவதில்லை. படிப்படியாகத்தான் ஏற்படுகின்றன. முன்னைய காலத்திலும் பார்க்க இந்தக் கிராமத்தில் இன்று எவ்வளவோ மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன. அடிமை குடிமைமுறை இருக்கின்றதா? கட்டுப்பாடிருக்கின்றதா? கோயிலுக்குள் வரக்கூடாதெனத் தடுக்கிறார்களா? இவ்வளவும் படிப்படியான சமூக மாற்றம்தான். கல்வியால் என் தம்பி உயர்வதால் அப்பெண் அவனிடம் காதல் கொள்ள நேர்ந்தது என நினைக்கிறன். இருவரும் மணந்து கொள்வதற்கு இந்தச் சமூகத்தால் தடை விதிக்க முடியுமென நான் நினைக்கவில்லை......

"முதலில் எங்களுடைய அந்தஸ்தை உயர்த்திக் கொள்ள வேண்டும். அதுக்குப் பிறகு தான், பணத்தாலும், கல்வியாலும் அந்தஸ்தில் உயர்ந்திருக்கிற அவங்களுடன் சரி நிகர் சமானமாக நின்று பேச முடியும். உரிமைகளை வென்றெடுக்கிற மாதிரி உறவுகளை அவ்வளவு லேசாக வென்றெடுக்க முடியாது.." எனக் கூறுகின்றான்.

எனவே, கல்வி வசதி, செல்வம் ஆகியவற்றால் தாழ்த்தப்பட்ட மக்களது சமூக அந்தஸ்து தானாகவே உயர்வடையும் என்பதையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்கை ஆழியான் தன்னிரு நாவல்களிலும் எடுத்துக் காட்டுகின்றார். "சமூக அந்தஸ்து மாற்றமடைவதற்கும், ஏற்றத்தாழ்வுகள், ஒடுக்குமுறைகள் அகல்வதற்கும் புரட்சியின் மூலமாகக் கிடைக்கும் புதிய சமுதாயமே வழி" என்று அக்கினியில் வருகின்ற கந்தசாமி கூறியபோது கனகு, "நம்புவோம்" என்று கூறிச்சிரிப்பதாக ஆசிரியர் சித்திரிப்பது தாழ்த்தப்பட்ட மக்களின் நம்பிக்கையீனத்தை வெளிப்படுத்துவதாகவே தெரிகின்றது. எனவே தடையின்றி எல்லாருக்கும் கிடைக்கின்ற கல்வியைத் தக்கபடி பயன்படுத்துவதாலும் பொருளாதார நிலையை மேம்படுத்துவதாலும் சமுதாய ஏற்றத்தாழ்வுகள் படிப்படியாக அகன்றுவிடும் என்பதே ஆசிரியரின் சாதியம் தொடர்பான பார்வை எனலாம்.

தமிழர் சமூக அமைப்பில் குடும்பம் என்ற கட்டமைப்பு பிரதானமானதாகும். திருமணத்தின் மூலம் ஓர் ஆணுடன் இணைந்து குடும்பத்தவளாகி அதாவது இல்லாளாகி வாழும் வாழ்வே பெண்ணுக்குச் சிறப்பானதென்றும் இவர்கள் கருதுகின்றனர். ஆனால் குடும்ப அமைப்பு ஆணாதிக்கத்தை மையப்படுத்தியே உருவானதால் அதன் உருவாக்கத்தில் ஆண்களின் நலனே பெரிதும் கவனிக்கப்படுகின்றது. ஆண்கள் தமதும் தமது குடும்பத்தவரதும் நலனைக் கருத்திற் கொண்டே தமக்குரிய பெண்களைத் தெரிவு செய்கின்றனர். இத்தகைய பெண் தெரிவின் போது சீதனம், சாதி ஆகிய இரண்டு அம்சங்கள் பெரிதும் கவனிக்கப்படுகின்றன.

யாழ்ப்பாண சமூகத்தில் சீதனம் இரண்டு வகையாகப் பெற்றுக்கொள்ளப்படுகிறது. பெண் வீட்டார் தம் பெண்ணுக்காகக் கொடுக்கும் வீடு, காணி முதலிய அசையாச் சொத்துக்களும், ஆபரணங்களும் பணமும் சீதனம் என்ற பெயரில் குறிக்கப்படுகின்றன. இவற்றை விட அன்பளிப்பு என்ற பெயரில் மாப்பிள்ளையின் வீட்டாருக்கும் ஒரு தொகைப் பணம் வழங்கப்படுகின்றது. இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாப்பிள்ளையின் பெற்றோருக்கோ மணமாகாத சகோதரிகளுக்கோ வழங்கப்படுகின்றது. இப்பணம் மணமகனின் சகோதரியின் வாழ்வுக்கு அவசியமானது என்பதால் ஆணின் தரப்பிலிருந்து அது நியாயப்படுத்தப்படுகின்றது. இத்தகைய நிலைமையினால் பெண்ணைத் தெரிவு செய்யும் போது ஆண்கள் தமது விருப்புகளைப் புறக்கணித்து சீதனம், நன்கொடை ஆகியவற்றைக் கருத்திற் கொண்டே பெண்ணைத் தெரிவு செய்ய வேண்டியுள்ளது. இது ஒருவகையில் ஆணையும் பாதித்தாலும், இதனால் வாழ்வை இழந்து நிற்பவள் பெண்ணே. சீதனப் பணமில்லாமல் வாழ்வை இழந்து நிற்கும் பெண்களால் சமூகத்தில் பல்வேறுவிதமான பிரச்சினைகள் உருவாகின்றன. இவ்வாறான பிரச்சினைகள் சிலவற்றைச் செங்கை ஆழியானின் நாவல்களினூடாகவும் காணமுடிகின்றது.

கங்கைக்கரையோரம் (1978) என்னும் நாவலில் வருகின்ற சிவராசா – கங்கா காதல் நிறைவேறாது போனதற்கும் கங்காவின் கனவுகள் கனவுகளாகவே அமைந்து அவள் திருமண வாய்ப்பை இழந்ததற்கும் சீதனக் கொடுமையே காரணமாகும். வறிய குடும்பத்தில் பிறந்து பல்கலைக்கழகம் சென்றவன் சிவராசா. அவனின் காதலி கங்காவும் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தவள். சிவராசாவின் கல்விக்காக ஈடு வைக்கப்பட்ட காணி, அவனின் உழைப்பை எதிர்பார்த்திருக்கும் சகோதரிகள் இவ்வளவையும் தனக்குச் சாதகமாக்கிக் கொண்ட மாமா ஈடு மீண்டு, சகோதரிகளுக்கும் வாழ்க்கை தேடித்தந்து சிவராசனையும் தனது மகள் சரோசாவுக்கு மணம் செய்து வைக்க விரும்புகிறார். சிவராசாவின் பெற்றோரும் இதற்கு உடன்படுகின்றனர். சிவராசாவின் குடும்பநிலையை அறிந்த கங்கா தனது காதலைத் தியாகம் செய்கிறாள். சிவராசன் தனக்காக வாழ முடியாதவன். அவனை எதிர்பார்த்துச் சகோதரிகள், ஈடுவைத்த காணி இவையெல்லாம் இருக்கும்போது அவையனைத்தையும் தன்னால் சமாளிக்க முடியாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற நிலையில் காதலும் பணக்காரர்களுக்கே உரியது என நினைத்து கங்கா தனது காதலைத் தியாகம் செய்கிறாள். சீதனம் இல்லாத ஏழைகள் காதலிக்க முடியாத சமூகத்தில் பணக்கார சரோசாவிடம் கங்காவின் காதல் தோற்றுப்போய்விடுகின்றது. இதனால் கங்கா திருமணமாகாமல் கன்னியாகவே வாழ்கிறாள்.

கங்காவிடம் சீதனம் இல்லை. அவளைச் சீதனமின்றி மணந்து கொண்டால் சிவராசனின் சகோதரிகள் வாழ்வு பாதிக்கப்படும். இத்தகைய முரண்பாடான நிலையில் சிவராசன் தரப்பிலிருந்து சீதனம் வாங்க வேண்டிய தேவை எடுத்துக்காட்டப்படுகின்றது. சிவராசன் சீதனம் வாங்கியே சகோதரிகளின் வாழ்வை மலரவைக்க முடியும் என்ற நிலையில் அவனும் தனக்காக வாழ முடியாதவனாகின்றான். இதனால் காதலும் பணக்காரர்களுக்கேயுரியது என்பதை ஆசிரியர் உணர்த்திவிடுகின்றார். எனவே தற்போதுள்ள சமூக அமைப்பு மாறாதவரை சீதனக் கொடுமையும் ஒழியப்போவதில்லை.

சீதனக் கொடுமை நிலைத்திருக்கும் வரை பெண்களின் வாழ்வு துன்பமாகவே இருக்கும். இதற்கு எடுத்துக்காட்டு கங்காவின் வாழ்வு. மறுபக்கத்தில் ஆண்கள் கூடத் தமக்காக வாழ முடியாமல் துன்பப்படுவதற்கும் இச்சீதனக் கொடுமையே காரணமாகி விடுகின்றது என்பதற்குச் சிவராசனின் வாழ்வு எடுத்துக் காட்டாகின்றது. எனவே சீதனக் கொடுமை தனியே பெண்களை மட்டும் பாதிக்கவில்லை. அது ஆண்களையும் பாதிக்கின்றது என்பது இந்நாவலினூடாக உணர்த்தப்படுகின்றது.

காற்றில் கலக்கும் பெருமூச்சுகள் (1983) என்னும் நாவலில் யாழ்ப்பாணச் சமூகத்திலுள்ள திருமணமாகாத இளம் பெண்கள் பலரின் பெருமூச்சுக்கள் எடுத்துக்காட்டப்படுகின்றன. இந்நாவலின் பிரதான பாத்திரமாக வருகின்ற மனோரஞ்சிதம் பல்கலைக்கழகத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படித்த காலத்தில் ரவீந்திரனைக் காதலிக்கிறாள். அவள் படித்து முடிந்ததும் அவளின் பெற்றோர் அவளின் உழைப்பைக் கருத்திற் கொண்டு அவளின் காதலுக்குத் தடையாக இருக்கின்றனர். அவளுக்காகக் காத்திருந்த ரவீந்திரன் வேறு திருமணம் செய்துவிடுகின்றான். இதன்பின்னர் மனோரஞ்சிதத்திற்குப் பேசப்படும் திருமணங்கள் அனைத்தும் சீதனப்பிரச்சினையால் குழம்பி விடுகின்றன. இதனால் அவள் திருமண வாய்ப்பை இழக்கிறாள்.

இந்நாவலில் வருகின்ற மற்றொரு பெண்ணான சித்திராவும் சீதனக் கொடுமையால் திருமண வாய்ப்பை இழக்கிறாள்.

'பெண்ணாகப் பிறக்கக்கூடாது. பெண்ணாகப் பிறந்தாலும் யாழ்ப்பாணச் சமூகத்தில் ஒருக்காலும் பெண்ணாகப் பிறக்கக்கூடாது. பாவம் செய்த சமூகம்.. பேராசை பிடித்த சமூகம்' (பக். 49) என்று சமூகத்தின் மீதான தனது வெறுப்பை வெளிக்காட்டுகிறாள். அவள் தனது தகுதிக்கு ஏற்ற வாழ்வையே தேடினாள். சீதனக் கொடுமையால் அதைக் கூட அவளால் பெற்றுக் கொள்ள முடியவில்லை. அவளே தனது நிலைமையை எடுத்துக் கூறுகின்றாள்.

'எனக்கொன்றும் பெரியதொரு உத்தியோகத்தன் மாப்பிள்ளையாக வரவேண்டும் என்று நான் ஒருக்காலும் எண்ணியதில்லை. எங்களிடம் இருக்கின்ற சீதனத்திற்கு அளவாக ஒரு மாப்பிள்ளையைத்தான் என் தகப்பனார் தேடினார். எத்தனைபேர் வந்தார்கள். அவர்களுக்காக நான் அலங்கரித்து அலங்கரித்தே நான் தேய்ந்து போனேன். ஒருவருக்குப் பொம்பிளை பிடிக்கவில்லை. இன்னொருவருக்குச் சீதனம் போதவில்லை. இன்னொருவருக்குத் தன் தங்கைக்கு டொனேசன் வேணுமாம். இப்படி....... இப்படி.......... என் வயது ஏறியது தான் மிச்சம்.' (பக். 49) திருமண வாய்ப்பை இழந்தபோது அவள்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“கலியாணம் இப்போது யாழ்ப்பாணத்தில ஒரு வர்த்தகம் போல.... இலாப நோக்கம் பார்க்கும் வர்த்தகம் போல... பணம் படைத்தவர்கள் சற்றுப் படித்த நல்ல உத்தியோகத்திற்கு வந்த இளைஞர்களைத் தேடிப்பிடித்து அவர்களின் சீதனத்தைப் போட்டி போட்டு அதிகரிக்க வைக்கிறார்கள். அந்த வர்த்தகப் போட்டியில் எங்களைப் போன்ற சாதாரண பெண்கள் மூலையில் ஒதுங்கிக் கொள்ள வேண்டியது தான்.” (பக். 50) என்ற முடிவிற்கு வருகிறாள். இந்த முடிவு சமூக யதார்த்தத்தினூடாக ஆசிரியர் கூறும் முடிவாகவே கருதத்தக்கதாகும்.

இந்த நாவலில் வருகின்ற இன்னொரு பெண்ணான ராஜி சீதனக் கொடுமையால் திருமண வாய்ப்பை இழந்தவள். எனினும் தன் இளமையைப் பழுதாக்க விரும்பாமல் தனது காதலனுடன் ஒழுக்கப் பிறழ்வான நடவடிக்கைகளில் ஈடுபட்டு இன்பம் காண்கிறாள். தனது சகோதரிகளினதும் தனதும் வாழ்வைப் பாழாக்கிய சமூகத்தை வெறுக்கின்றாள்.

‘ஆடு கத்தினால் கூட பருவத்திற்கு அழைத்துச் செல்கின்ற இந்தச் சமூகம் ....சீச்சீ...... கிழடாகிற குமருகளைப் பற்றி....? அவர்களின் இயல்பான உணர்வுகளைப் பற்றிச் சிந்திக்கிறதா? நான் இந்தச் சமூகத்தைப் பழிவாங்கப்போகிறேன். இந்தச் சமுதாயம் சொல்கிற சம்பிரதாயங்களை உடைக்கப் போகின்றேன். சந்தர்ப்பம் கிடைக்கும் போது வாழப் போகிறேன். சம்பிரதாயச் சிறைக்கும் அடைபட்டுக் கிடக்கின்ற என் அக்காமாருக்கு வாழ்வளிக்க முயற்சிக்கின்ற அதேவேளை என் இளமையை அவமாக்க நான் தயாராகவில்லை...” (பக் 20 – 21) எனக் கூறி ராஜி தனது காதலனோடு கூடி இளமையை அனுபவிக்கிறாள். மேலும் சீதனக் கொடுமையால் பெண்களோடு கூடப்பிறந்த ஆண்களும் தமது இளமையை அவமாக்க வேண்டியிருக்கின்றது என்பதையும் ராஜி எடுத்துக் கூறுகின்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘அவரும் என்னைப் போலத்தான். அவரை நம்பி வீட்டில் இரண்டு அக்காமாரும் ஒரு தங்கைகளும் காத்திருக்கிறார்கள். சீதனப் பேயும் காத்திருக்கிறது. வி ஆர் ஜஸ்ற் பிறன்ட்ஸ்.... அங்க இருக்கும் வரை வாழ்வோம். வெளியே போனதும் அவர் யாரே நான் யாரோ... எங்கள் முன் கிடக்கும் கடமைகள் முடிய நாளும் கிழவியாகிவிடுவேன். அவரும் கிழவனாகிவிடுவார்....’ (பக். 20)

ராஜியின் வார்த்தைகள் தமது சகோதரிகளின் வாழ்வுக்காகத் தம்மைத் தியாகம் செய்யும் ஆண்களின் பரிதாப நிலையை எடுத்துக் காட்டுகின்றன. இவ்வாறானவர்களைப் பொறுத்தவரை சீதனம் வாங்குவது நியாயப்படுத்தப்படலாம். எனினும் இது தனிப்பட்ட முறையில் ஒரு சிலரது பிரச்சினையல்ல. இது ஒரு சமுதாயப் பிரச்சினை. எனவே தனிப்பட்ட முறையில் ஆண்கள் மீது குற்றம் சுமத்த முடியாது. அவர்களும் தமக்காக வாழ முடியாதவர்களாகி விடுகின்றார்கள்.

இத்தகைய நிலையில் தான் ராஜியும் அவனும் தமது இளமையை அனுபவிக்கத் துணிகின்றனர். இங்கு ராஜி என்ற பாத்திரத்தின் மூலமாக ஆசிரியர் எமது சமூகத்தை எச்சரிக்கின்றார். சீதனக் கொடுமை சமூகத்தை இவ்வாறுதான் பாதிக்கும். எனவே சமூகம் திருந்த வேண்டும் என்பது ஆசிரியரின் நோக்கமாக இருக்கலாம்.

அடுத்து இலங்கை ஒரு விவசாய நாடாகும். இலங்கையின் மொத்தச் சனத்தொகையில் விவசாயிகளே அதிக எண்ணிக்கையினராக உள்ளனர். விவசாயத்தைப் பிரதாக தொழிலாகக் கொண்டு வாழ்பவர்களின் பிரச்சினைகளும், வாழ்க்கைத் தரமும் ஒரே மாதிரியாக அமைவதில்லை. சிலர் விவசாயிகள் என்ற பெயரில் குட்டி நிலச் சுவாந்தர்களாக விளங்குகின்றனர். சிலர் சிறிய சிறிய துண்டு நிலங்களையே சொந்தமாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திருக்கின்றனர். வேறு சிலர் சொந்த நிலம் எதுவுமின்றி குத்தகை விவசாயிகளாகவுள்ளனர்.

இவர்களை விட மீன்பிடித்தொழிலில் ஈடுபடுகின்ற மக்களும் ஈழத்துத் தமிழர்களில் கணிசமான அளவில் காணப்படுகின்றனர். இவர்கள் அனைவரும் எதிர்நோக்கும் பொதுவான பிரச்சினை வறுமை, பணக்கார வர்க்கத்தினரின் சுரண்டல் ஆகியனவே. செங்கை ஆழியானின் "காட்டாறு" (1977), என்னும் நாவலில் வன்னிப் பிரதேச விவசாயிகளின் பிரச்சினைகள் எடுத்துக் காட்டப்படுகின்றன. இந்நாவலின் தோற்றம் பற்றிச் செங்கை ஆழியான் நாவலின் முன்னுரையில் பின்வருமாறு கூறுகின்றார்.

'விவசாய தொழிலாள மக்கள் கூட்டம் காடுகளை வெட்டிக் கொளுத்திக் கழனிகளாக்கி இயற்கைக்கும் மிருகங்களுக்குமிடையில் நிரந்தரப் போராட்ட வாழ்வு வாழ்கின்ற வேளையில், இடையில் இன்னொரு வர்க்கம் சுரண்டிப் பிழைப்பதைக் கண்டேன். நிலந்தேடியபின் அதனையும் இழந்து சீரழிவதைக் காணமுடிந்தது. அழகிய விவசாயக் கிராமங்களைப் பெரிய மனிதர் என்ற போர்வையில் உலவும் முதலாளித்துவக் கூட்டமும், உத்தியோக வர்க்கமும் எவ்வாறு சீரழித்துச் சுரண்டுகின்றன என்பதை நான் என் கண்களால் காண நேர்ந்தது. மண்ணையும் பொன்னையும் மட்டுமா அவர்கள் சூரண்டினார்கள்? பெண்களை விட்டார்களா? சுரண்டலின் வகைகள் என்னைப் பதற வைத்தன. பல முனைகளிலும் தாம் சுரண்டப்படுவதை அறியாது, அறிய வகையற்ற தேங்கிய குட்டையாகக் கிராம மக்கள் வாழ்ந்து வருவதையும், அதிகாரத்திற்கும் சண்டித்தனங்களுக்கும் பயந்து ஒதுங்கியிருப்பதையும் ஆங்காங்கு சிறு தீப்பொறியாக இளைஞர் சிலர் விழிப்புக்குரல் எழுப்புவதையும் நான் கண்டேன். என் மனதில் இவை அனைத்தும் ஆழப்பதிந்து வெளிவரத் துடியாத் துடித்தன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சின்னத்தனங்களை, தேசியத் துரோகிகளை, மக்கள் விரோதிகளை மக்கள் முன் காட்டிக் கொடுக்க வேண்டும் என்ற சத்திய ஆவேசத்தின் விளைவாக உருவானது தான் காட்டாறு"

ஆசிரியரின் நோக்கத்திற்கு ஏற்ப நாவலில் விவசாயிகள் பல்வேறு விதமாகவும் சுரண்டப்படுவது காட்டப்படுகின்றது. கிரமசபையால் வீதிகளைத் திருத்துவதற்காக ஒதுக்கப்படும் பணத்தை கிரமசபையின் தலைவரும் வேறு சிலருமாகச் சேர்ந்து எவ்வாறு கையாடுகிறார்கள் என்பதை ஆசிரியர் எடுத்துக்காட்டியுள்ளார். ஒப்பந்தக்காரனான கந்தசாமியிடமிருந்து சேர்மன் தனக்குரிய பங்கைக் கேட்டு நிற்கும் போது ஒப்பந்தத்தில் எவ்வாறு கையாடல் நடைபெறுகின்றது என்பது தெரிய வருகின்றது.

"இரண்டாயிரத்திலை செய்து முடித்து விடக்கூடிய வேலையை நான் பத்தாயிரத்திற்கு எஸ்ரிமேற் போடச்செய்து உமக்குக் கொன்றாக் தந்தன். ஏன் தந்தன்? எல்லாரும் பிழைக்க வேண்டும் என்றதுக்காகத்தான். நீர் நினைக்கிறீர் ஏதே நான் தனிய இரண்டாயிரத்தைக் கொண்டு போகப் போறன் எண்டு எத்தனை பேருக்குப் பிரிச்சுக் கொடுக்க வேணும்.. (பக் .14) இங்கு இரண்டாயிரத்தில் செய்து முடிக்க வேண்டிய வேலைக்குப் பத்தாயிரம் போட்டதால் எண்ணாயிரம் ரூபாவை இந்த அதிகாரிகள் சுரண்டிவிடுகிறார்கள். என்பது காட்டப்படுகிறது.

மேலும் விதானையார், அப்போதிக்காரி, ரீ. ஓ. மார், ஓவிசியர் மார் முதலியோரெல்லாம் கிராம மக்களைச் சுரண்டுவதைக் கண்டு இளைஞர்கள் சிலர் விழித்துக் கொள்கின்றனர். அவர்களில் ஒருவனான சந்தனம், எதுவுமே அறியாத தாமரைக்கண்டு போன்ற விவசாயிகளுக்கு அவர்களின் சுரண்டல் பற்றி எடுத்துக் கூறுகின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“கடலாஞ்சி விதானையிடம் ஒரு முறைப்பாடு கொடுக்கிற தெண்டால் மூன்று ரூபா லஞ்சம் கொடுக்க வேண்டியிருக்கும். ஒரு ஏக்கர் அரசாங்கக் காணிக்கு விதானையாரின் சிபார்சு பெறுவதற்குக் குறைந்தது ஒரு புசல் நெல், ஐந்து கொத்து உளுந்து ஏதாவது தேவைப்படுகுது. ஒரு கூப்பன் பெறுவதற்கு விதானையாரின் றிப்போர்ட் பெற ஒருவன் எத்தனை தடவை அலைய வேண்டியிருக்குது. பத்துப்பன்னிரண்டு தடவை அலைஞ்ச பிறகும் இரண்டு ரூபா வாங்கிக் கொண்டு தான் றிப்போர்ட் கொடுக்கிறார் ...” (பக். 104)

“எங்கட கிராமத்து வைத்தியசாலை எப்படி இயங்குது? அந்த அப்போதிக்கரி ஐம்பது சதத்திலிருந்து ஐந்து ரூபா வரை வாங்காமல் ஆருக்காவது வைத்தியம் பார்த்திருக்கிறாரா? நல்ல மருந்து கொடுக்கிறதெண்டால் அவருக்கு மேசையில் வைக்க வேணும். காசில்லா விட்டால் கத்தரிக்காய் பிஞ்சு அல்லது முட்டைகள் கொடுக்க வேணும். நல்ல மருந்துகளை ஓடலி எடுத்து வித்து விடுவான் எண்டு மேசை லாச்சிக்குள்ள பூட்டி வைச்சு காசுக்கு இலவச வைத்தியம் செய்யிறவர். தமிழ்ப்பகுதியெண்டு நல்ல திறமான மருந்துகள் வாறதில்லை எண்டு முதலைக் கண்ணீர் வடிக்கிற அந்த அப்போதிக்கரி வாற மருந்துகளை எல்லாம் சேகரித்து வைக்கிறார். ஏன் தெரியுமே? பென்சன் எடுத்ததும் தனிப்பட்ட டிஸ்பென்சரி போட ...அரசாங்கம் மக்களுக்குத் தருகிற இலவச மருந்துகளை வைத்துக் கொண்டு காசு சம்பாதித்து வீடு, காணி, பூமி என்று தேடியது போதாமல் இப்ப மருந்து சேமிப்பும் நடக்குது. இது சுரண்டலில்லையா? (பக். 104- 195) சந்தனம் இவ்வாறு கூறக்கேட்ட சந்திரன்.

“உணவு உற்பத்திக் கிணறுகளுக்கு அரசாங்கம் தாற இரண்டாயிரத்து எண்ணூறு ரூபாவில் கடலாஞ்சிக் காணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓவிசியர்மார் அடிக்கிறது எவ்வளவு தெரியுமோ? வார முடிவில் கடலாஞ்சியிலிருந்து ஊருக்குப் போகிற காணி ஓவிசியர்மார் கொண்டு போற ஆட்டுக் கிடாய், கோழிகள், முட்டைகள், லக்ஸ்பிறேக்கள் எல்லாம் ஆர்கொடுத்தது? கிராம மக்களிடம் வாங்கிய லஞ்சங்கள் தான்.... இவர்கள் எல்லாரும் கடலாஞ்சியிலிருந்து துரத்தப்பட வேண்டும். (பக் 105.106) என்று தனது கருத்தைக் கூறினான் இதைக் கேட்ட கணபதி, தினசகாயம் வாத்தியை மட்டும் இதற்குள் இழுக்காதீர்கள். என்று கூறிய போது சந்தனம். இந்தக் கிராமத்திலேயே மிக ஆபத்தானவன் இந்த வாத்தி தான். அறிவுச் சுரண்டலைச் செய்யிறவன் எங்கட கிராமத்துப் பிள்ளையள் படிப்பறிவைப் பெற்று விடக்கூடாது. அப்படிப் பெற்று விட்டால் இவங்களின்ர விளையாட்டுகளுக்கு இடம் இருக்காது என்பதை நல்லாத் தெரிஞ்சு வைத்துக் கொண்டு திட்டமிட்டு நமது சந்ததியைப்பாழடிச்சு வாறான்கள். பத்து மணிக்குப் பள்ளிக்கூடம் திறந்து பதினொன்றிற்கு பூட்டி விட்டு பள்ளிக்குப் போற பிள்ளையளைக் கொண்டு வீட்டு வேலைகளைச் செய்விக்கின்ற யாழ்ப்பாணத்து வாத்தி வாரத்தில் செவ்வாய்க்கிழமை பள்ளிக்கு வந்து வியாழக்கிழமை மத்தியானம் காய்கறியோடும் மல்லிச் சாமான்களுடனும் திரும்பிச் செல்வதை நீங்கள் ஒருத்தரும் காண்பதில்லையா? இவற்றைவிடவா நமது கிராமத்திற்குக் கேடு வேண்டும். (பக். 109) என்று தினசகாயம் வாத்தியின் கல்விச் சுரண்டலை எடுத்துக் காட்டினான்.

ஏழை விவசாயிகள் அதிகாரிகளாலும் பணக்காரர்களாலும் சுரண்டப்பட்டு தொடர்ந்தும் வறுமையும் அறியாமையுமே வாழ்வாகிப் போன மண்ணிலே இளைஞர்களின் விழிப்புணர்வு மாத்திரமன்று இந்தச் சுரண்டலை வெளியுலகிற்கு அம்பலப்படுத்திய செங்கை ஆழியானின் துணிவும் சமூக நல நாட்டமும் பாராட்டப்பட வேண்டியவை. 1980 களின் பின்னர் ஈழத்து தமிழ் மக்கள் மத்தியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாக யாழ்ப்பாணத்தவர் மத்தியில் ஏற்பட்ட சமுதாயப் பிரச்சினைகள் பல புலம் பெயர்வு காரணமாகவும் ஏற்பட்டன. கொழும்பு லொட்ஜ், கிடுகு வேலி, மழைக்காலம் ஆகிய நாவல்களில் புலம் பெயர்வால் விளைந்த பிரச்சினைகள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. விரிவஞ்சி அவை இங்கு எடுத்துக் காட்டப்பட வில்லை.

முடிவாக செங்கைஆழியானின் நாவல்களில் யாழ்ப்பாணத்தின் கிராமங்கள் பலவும் களங்களாக இடம் பெற்றுள்ளன. சுருட்டுத்தொழிலாளர் முதல் மீன்பிடித் தொழிலாளர் வரையும் பல்வேறு தொழிலாளர்களினதும், சாதாரணமக்களினதும் பிரச்சினைகள் பலவும் இவரது நாவல்களில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. எனினும் பிரதானமான சமுதாயச் சிக்கல்களாக உள்ள சாதியம் சீதனம், வறுமையும் சுரண்டலும் ஆகியனவே வகைமாதிரியாக இக்கட்டுரையில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. இது ஓர் ஆய்வின் சுருக்கமாகவே அமைகின்றது. முழுமையான ஆய்வுக்கு இங்கு இடமில்லை என்பதை வாசகர்கள் புரிந்து கொள்வார்கள் என நம்புகின்றேன்.

**பயன்படுத்திய நூல்கள்**


செங்கை ஆழியான் - *(1989 2ம்பதிப்பு)* பிரளயம், யாழ்ப்பாணம்

*(1991)* அக்கினி, யாழ்ப்பாணம்

*(1978)* கங்கைக் கரையோரம், கொழும்பு

*(1983)* காற்றில் கலக்கும் பெருமூச்சுகள், யாழ்ப்பாணம்

*(1977)* காட்டாறு, கொழும்பு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமுதாய வாழ்வை நெறிப்படுத்தும் உயிரினங்கள் - செங்கை ஆழியானின் நாவல்களினூடான ஒரு தேடல்

உலக இயற்கையில் மனிதனுக்குப் புரிந்ததும் புரியாததும் நிறையவே உள்ளன. இயற்கையை அவன் தவறாகவோ சரியாகவோ புரிய முற்பட்டபோது அவனுக்குச் சில நம்பிக்கைகளும் ஏற்படுகின்றன. இத்தகைய நம்பிக்கைகள் அவனது வாழ்வை நெறிப்படுத்துவனவாகவும், அமைந்து விடுகின்றன. குறிப்பாகக் கிராமங்களில் வாழ்கின்ற மக்கள் இயற்கையோடு மிகவும் நெருக்கமான தொடர்புடையவர்கள். இவர்களின் சமூக வாழ்க்கையில் இயற்கையின் பங்கு முக்கியமானது. கிராமங்கள் நகரப் பகுதிகளைப் போலன்றிக் காடுகளுடன் இணைந்திருப்பவை. அதனால் காட்டு விலங்குகள் பறவைகள் முதலானவற்றின் தொடர்பு இவர்களுக்கு அதிகம். இதனால் இவர்கள் அவற்றின் நடமாட்டங்களையும் பல்வேறுபட்ட ஓசைகளையும் அவதானிக்கின்ற வாய்ப்பினைப் பெறு கின்றனர். இந்த அவதானங்கள் அவர்களுக்குச் சில நம்பிக்கைகளைக் கொடுக்கின்றன. இத்தகைய நம்பிக்கைகள் சமூக மயமாக்கத்தின் மூலம் தலைமுறை தலைமுறையாகக் கடத்தப்பட்டு வருகின்றன. சான்றாக கிராமிய மக்களிடையேயுள்ள சில நம்பிக்கைகளை எடுத்துக் காட்டலாம்.

கிராமப் புறங்களில் உள்ள பறவை இனங்களில் ஒன்று கலவாய்க்குருவி, மிகவும் சிறிய பறவையான இது பெரும்பாலும் தனித்தே பறந்து திரிவதாகும். இக் குருவியின் ஓசை பல குருவிகள் இணைந்து சத்தமிடுவது போலப் பெரிதாகவும் ஆரவாரம் மிக்கதாகவும் காணப்படும். இதனால் சிறுவர்கள் பலர் இணைந்து ஒரே நேரத்தில் கூச்சலிடுவதையும் 'கலவாய்க்குருவி கத்துவது போல' என்று கூறுகின்ற வழக்கத்தையும் கிராமங்களில் அவதானிக்கலாம். இக்குருவியின் ஓசை வீட்டருகே கேட்டால் அங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதோ சச்சரவு ஏற்படப்போகின்றது என்று இவர்கள் நம்புகின்றார்கள். இதனால் இக்குருவி கலகக்குருவியாகவே கருதப்படுகின்றது. வீட்டில் அல்லது கிராமத்தில் ஏதாவது சச்சரவுகள் கலகங்கள் ஏற்பட்டால் முதியவர்கள் “கலவாய்க்குருவி கத்தேக்கையே எனக்குத் தெரியும், உதுக்குத்தான் கலவாய்க்குருவி கத்தினது” என்று தமது அவதானிப்பையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்துவதைக் காணமுடியும். இது இயற்கையில் இருந்து அவர்கள் கற்றுக்கொண்ட பாடம், இப்புரிதல் தவறாகவும் இருக்கலாம். அது எவ்வாறெனினும் அவர்கள் அதை நம்புகின்றார்கள். இதனால் இக்குருவியின் ஓசை கலகத்திற்கான முன்னறிவிப்பாகவே கருதப்படுகின்றது.

இவ்வாறே சுடலைக்குருவி என்பதும் காடுகளில் வாழ்கின்ற சிறிய தொரு பறவை. இது மக்கள் வாழும் குடிமனைகளுக்கு அண்மையில் பறந்து வந்து சத்தமிட்டால் அது யாரோ ஒருவரின் மரணத்திற்கான முன்னறிவிப்பாகவே கருதப்படுகின்றது.

காட்டு விலங்குகள் பறவைகள் போலவே வீட்டு மிருகங்களை மையமாகக் கொண்டும் இவர்கள் பல நம்பிக்கைகளை வைத்திருக்கின்றனர். வீட்டிலுள்ள பசு வித்தியாசமான முறையில் கத்துவதையும், நாய் ஊளையிடுவதையும் இவர்கள் யமனின் வருகையை உணர்த்தும் அறிகுறியாகவே கருதுகின்றனர். இவ்வாறே வீட்டிலிருந்து புறப்படும் போது பூனை குறுக்கறுப்பதையும். வழியில் சாரைப்பாம்பு குறுக்கறுப்பதையும் கெட்ட சகுனமாகவே கருதுகின்றனர். வீட்டிலுள்ள பல்லி மிகவும் முக்கியமானது. பல்லி சொன்னால் எந்தக் காரியமும் நிறைவேறாது என்றும் உடம்பில் பல்லி விழுந்தால் விழுந்த இடத்திற் கேற்ப பலன்கள் உண்டென்றும் மக்கள் நம்புகின்றனர். இவற்றிற்கான பலன்களைப் பஞ்சாங்கங்கள் விரிவாக எடுத்துக் கூறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறாக கிராமிய மக்களின் வாழ்வினை நெறிப்படுத்துவதில் சூழலிலுள்ள உயிரினங்கள் பெறுகின்ற முக்கியத்துவத்தினை சில ஆக்க இலக்கியப் படைப்பாளிகள் தமது படைப்புக்களில் எடுத்துக் காட்டியுள்ளனர். இந்த வகையில் செங்கை ஆழியானின் காட்டாறு வாடைக்காற்று, யானை, நடந்தாய் வாழிவழுக்கியாறு, ஒருமைய வட்டங்கள் ஆகிய நாவல்களில் உயிரினங்களின் செயற்பாடுகள் எவ்வாறு மக்களின் வாழ்வை நெறிப்படுத்துவனவாக அமைந்துள்ளன. என்பது இந்த ஆய்வில் எடுத்துக்காட்டப்படுகின்றது.

**ஆட்காட்டி**

ஆட்காட்டி என்னும் பறவை காட்டுப்பகுதிகளிலும் வயற்பகுதிகளிலும் காணப்படும். இது தான் வாழும் சூழலில் புதியவர்களைக் கண்டாலும் வேறு விலங்குகளைக் கண்டாலும் சத்தமிட்டு அவற்றின் வருகையைப் பிறருக்கு அறிவித்து விடும். என்பதனால் ஆட்காட்டி என்று காரணப்பெயருடன் அதனை அழைக்கின்றார்கள். இப்பறவையின் செயற்பாடுகள் கிராமிய மக்களுக்குப் பல சந்தர்ப்பங்களில் பயனுள்ளதாக அமைகின்றது. இவ்வாறான சந்தர்ப்பங்கள் பலவற்றை காட்டாறு நாவலில் செங்கை ஆழியான் பதிவு செய்துள்ளார். சான்றாக சியாமனுக்கும் செல்வாக்குள்ள வேறு பலுருக்கும் தண்ணி வழங்கப்பட்டபோது காய்ந்து கிடக்கின்ற தனது வயல்களைப் பார்த்துக் கணபதி வேதனைப்படுகின்றான். மழையாவது வருமா? என்று ஏக்கத்தோடு வானத்தைப் பார்க்கின்றான். அருகில் நின்ற தாமரைக்கண்டு ஆறுதல் கூறுகின்றான். அவ்வேளையில் ஆட்காட்டிக் குருவி அவலமாகக் கத்துகிறது. ஆட்காட்டியின் இந்த அவலக்குரல் கணபதியின் வயல்கள் தண்ணியின்றி அழிந்துவிடும் என்பதையே உணர்த்துகின்றது. (ப.75)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களுக்கு கல்வியையும் நல்லொழுக்கங்களையும் போதிக்க வேண்டிய ஆசிரியர் தினசகாயம் மாணவர்களைத் தவறான வழிகளில் பயன்படுத்தித் தனது சுயதேவைகளைப் பூர்த்தி செய்து வருவதைக் கண்ட இளைஞர்கள் சிலர் அவருக்கு அடித்து விடுகின்றனர். இதனால் ஊருக்குள் பொலிசார் வருகின்றனர். இவ்வேளையில் ஆட்காட்டிக் குருவி அலறுகின்றது. இங்கு ஆட்காட்டியின் அலறல் ஊருக்குள் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பு நிலைக்கு முன்னறிவிப்பாகவே அமைகின்றது.(ப.236)

ஒரு மைய வட்டங்கள் என்னும் நாவலில் சிறிசேனாவும் மாலினியும் காட்டில் சந்தித்து ஒருவரை ஒருவர் கட்டியணைத்து முத்தமிட்டபோது ஆட்காட்டி குரல் எழுப்புகிறது. ஆட்காட்டியின் இந்தக் குரல் இவர்களின் காதல் நிறை வேறாது, மாலினியின் வாழ்வு சோகமாகவே முடியும் என்பதற்கான அறிவிப்பாகவே அமைகின்றது. (ப.20)

மேலும் காட்டில் சிறிசேனாவும் கொடிப்புலியும் யானையைத் தேடிச்சென்ற போது ஆட்காட்டியொன்று வீரிட்டபடி உயரே கிளம்புகின்றது. (ப. 84))ஆட்காட்டியின் இந்தச் செயற்பாடு அபாய அறிவிப்பாகிவிட சிறிசேன குழியில் வீழ்ந்து துன்பப்படுகின்றான்.

வாடைக்காற்று என்னும் நாவலில் பிலோமினா தனது சிநேகிதியான நாகம்மாவிடம் காதலன் செமியோனைக் களவாகச் சந்திக்க ஏற்பாடு செய்து தருமாறு கேட்கின்றாள். அப்போது ஆட்காட்டி அபத்தமாக அலறுகின்றது. (ப.43) இந்த அபத்தமான அலறல் இவர்களின் காதல் நிறைவேறாது என்பதற்கான அறிகுறியாகவே உள்ளது.

மேலும் விருத்தாசலம், தான் மனதார நேசிக்கும் நாகம்மா நேற்று வந்த மன்னார் சம்மாட்டி மரியதாசை விரும்புகின்றாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதை அறிந்து வேதனைப்பட்டபோது ஆட்காட்டி குருவியொன்று அவலக்குரல் எழுப்புகிறது. (ப. 123) இந்த அவலக்குரல் விருத்தாசலத்தின் காதல் தோல்வியில் முடியும் என்பதற்கான முன்னறிவிப்பாகவே உள்ளது.

யானை என்னும் நாவலில் வந்தனா வீட்டை விட்டுக் களவாக வெளியேறி இரவு இரண்டு மணியளவில் தனது காதலன் செங்காரனைத் தேடி வயலுக்கு ஓடுகிறாள். இரவில் அவளின் வருகையை அறிவிப்பது போல ஆட்காட்டி குரல் கொடுக்கின்றது. (ப.14)

பழிவாங்கும் நோக்கத்தில் காட்டில் நொண்டியன் யானையைத் தேடி மரத்தில் மறைந்திருக்கின்றான் செங்காரன். ஆட்காட்டி அவனைக்கண்டு வீரிட்டுச் சத்தமிட்டவாறு பறக்கின்றது. பின்னர் மரத்தைச் சுற்றி அவலமாகக் கத்தியபடி பறக்கின்றது. (ப.40) ஆட்காட்டியின் அவலக்குரல் யானைக்கு ஏற்படப்போகின்ற ஆபத்தை அறிவிப்பது போல அமைகின்றது.

நொண்டியன் யானையைத் தேடிச் சென்று கொண்டிருந்த செங்காரனுக்கு எதிர்பாராதவிதமாக மதங்கொண்ட தனியன் யானை ஒன்று எதிர்ப்படுகின்றது. மதயானை ஏனைய விலங்குகளுக்கு ஆபத்தை விளைவிக்கக்கூடியது. இதனால் இதன் வருகையை அறிவித்து காட்டை எச்சரிப்பது போல இவ்வேளையில் ஆட்காட்டி அவலமாகச் சத்தமிடுகிறது. (ப.60)

நடந்தாய் வாழி வழுக்கியாறு என்னும் நாவலில் காணாமற் போன மாடுகளைத் தேடி மயிலரும் வேறு சிலரும் குளக்கட்டுப் பக்கம் செல்கின்றனர். இவர்களின் வருகையை உணர்த்துவது போல ஆட்காட்டிகள் கூச்சலிட்டபடி பறக்கின்றன. இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதியவர்களின் வருகையை ஏனைய விலங்குகளுக்கு அறிவிப்பது போல அமைகின்றது.(ப. 12)

எனவே இந்த ஐந்து நாவல்களிலும் ஆட்காட்டியின் செயற்பாடுகள் சில சந்தர்ப்பங்களில் புதியவர்களின் வருகையை அறிவிப்பதாக அமைந்ததைக் காணக் கூடியதாகவுள்ளது. ஆட்காட்டி அவலக்குரல் எழுப்புவதும், அலறுவதும், வீரிட்டுக் கத்துவதும் ஆபத்தின் அறிகுறிகளாகவே சித்திரிக்கப்படுவதைக் காணக் கூடியதாகவுள்ளது.

காட்டாறு நாவலில் தினசகாயம் ஆசிரியர் தனது வீட்டுக்கு விறகு எடுத்துப் போட மறுத்த மாணவன் ஒருவனைத் தாக்கி விடுகின்றார். இதனால் அம்மாணவன் அடுத்த நாள் பாடசாலைக்குப் போக மறுக்கிறான். இச்சம்பவத்தை சின்னத்துரை சந்தனத்திற்கு கூறும் போது தூரத்தில் யானை ஒன்றின் பிளிறல் ஓசை கேட்கிறது. இங்கு யானையின் பிளிறல் இளைஞர்களின் விழிப்புணர்வையே எடுத்துக்காட்டுகின்றது.

கணபதி, அழிந்து கொண்டிருக்கின்ற தனது வயலுக்குத் தண்ணி வழங்க மறுத்தவர்களை எதிர்த்து குளத்தின் சுலுசை உடைக்கின்றான். அப்போது யானையின் பிளிறல் ஒலி கேட்கிறது. (ப.237) இங்கும் யானையின் பிளிறல் கணபதியின் விழிப்புணர்வையே எடுத்துக் காட்டுகின்றது.

**கரிக்குருவி**

காட்டாறு நாவலில், சந்தனம் செவந்திக்கும் தனக்கும் கல்யாணம் என்பதைப் புவனத்திற்குக் கூறுகின்றான். புவனம் தான் சந்தனத்தை விரும்பியதால் ஒரு தலைக்காதல் ஏமாற்றமாகிப் போனதை நினைத்து வேதனைப்படுகிறாள். இவ் வேளையில் வானில் அலறியபடி கரிக்குருவியின் அலறல் துன்பமான முடிவுக்கு முன்னறிவிப்பாகவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைகின்றது. முடிவில் திருமணம் நடைபெற முன்பே செவந்தி கொலை செய்யப்பட்டு விடுகின்றான்.

வாடைக்காற்று என்னும் நாவலில் பிலோமினா தனது காதலனான செமியோனைக்கண்டு பேச முடியவில்லை என்ற தனது ஏக்கத்தை நாகம்மாவுக்கு கூறி அழுகிறாள். அப்போது தூரத்தில் கரிக்குருவி ஒன்று வீரிட்டு அலறுகின்றது. (ப.41) இந்த அலறல் பிலோமினாவின் காதல் துன்பத்தில் முடியப் போவதையே எடுத்துக் காட்டுகிறது. முடிவில் அவள் காதல் நிறை வேற முன்பே கொலை செய்யப்பட்டு விடுகின்றாள்.

நடந்தாய் வாழி வழுக்கியாறு என்னும் நாவலில் காட்டில் மாடு தேடிச்சென்ற இடத்தில் செல்லத்துரை தன்னை ஏமாற்றித் திருமணம் செய்து வைத்த தரகர் மயிலுவைப் பழிவாங்க முற்படுகின்றான். அவ்வேளையின் கரிக்குருவி ஒன்று உச்சி வானில் ஓலமிடுகின்றது. (ப.36) இந்த ஓலம் கூடச் சென்ற சண்முகத் தாரின் மரணத்தின் அறிவிப்பாகவே அமைகின்றது.

**நரியின் ஊளை**

ஒரு மைய வட்டங்கள் என்னும் நாவலில் செல்லத்துரையும் மனைவி சோமாவும் தனது எதிர் காலம் பற்றி மகிழ்ச்சியாகப் பேசிக் கொண்டிருந்த போது தூரத்தில் நரியொன்றின் ஊளை எழுகின்றது. (ப.63) இது அவர்களின் ஆசைகள் நிராசையாகி குழந்தை வீட்டோடு எரிந்து இறப்பதற்கான அறிவிப்பாகவே உள்ளது.

வாடைக்காற்று என்னும் நாவலில் சுடலைச் சண்முகம் பிலோமினாவைக் கடத்திச் சென்றதை அறிந்த விருத்தாசலம் அவர்களைத் தேடி ஓடுகின்றான். அப்போது தூரத்தில் நரி ஒன்றின் ஊளைச் சத்தம் கேட்கிறது. இது பிலோமினா கற்பழிக்கப்பட்டு கொலை செய்யப்படுவதற்கான முன்னறிவிப்பாகவே உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யானை என்னும் நாவலில் நரிகளின் ஊளைச்சத்தம் நள்ளிரவு இரண்டு மணியை உணர்த்துவதாக எடுத்துக்காட்டப்படுகின்றது.

"நிலவைச்சுற்றி பரிவட்டம் படர்ந்திருந்தது நேரம்

இரவு இரண்டு மணி வரையில் இருக்கும் காட்டுப்

பக்கமிருந்து நரிகளின் ஊளை இன்னமும் சிறிது

நேரத்தில் ஆரம்பித்து விடும்" (ப. 14)

இவ்வாறே வயற்காவற்குடிலில் ஒன்று சேர்ந்த வந்தனாவும் செங்காரனும் ஊரை விட்டு ஓட முயல்கின்றனர். அப்போது நரிகள் ஊளையிட்டு நள்ளிரவு இரண்டு மணி என்பதை எடுத்துக் காட்டுகின்றன. (ப. 17)

செங்காரன் வந்தனாவைப் பலிகொடுத்த நிலையில் பழிவாங்கு வதற்காக காட்டில் நொண்டியன் யானையைத் தேடிச் சென்ற போது அவன் பெரியமாவில் குள வெளியை அண்மிக்க நடுநிசி தாண்டிக் கொண்டிருக்கிறது. அப்போது நரிகள் ஊளையிடத் தொடங்கியிருந்தன எனக் காட்டப்படுகிறது. இதுவும் நேரத்தை உணர்த்துவதாகவே உள்ளது. (ப.69)

**கூழைக்கடா**

வாடைக்காற்று என்னும் நாவலில் மரியதாசின் காதலை நாகம்மா ஏற்றுக் கொண்டு அவனோடு மன்னாருக்குப் போக உடன்பட்டபோது இணையிழந்த கூழைக்கடா ஒன்று வானில் கதறியபடி விரைகின்றது.(ப. 114) இது நாகம்மாவையே நினைத்திருந்த விருத்தாசலத்தின் காதலில் ஏற்பட்ட தோல்வியையே எடுத்துக் காட்டுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் பிலோமினா செமியோன் காதலை விரும்பாத சூசை அவர்களைப் பிரிக்கும் முயற்சியில் ஈடுபடுகின்றான். இதற்காக செமியோனையும் மரியதாசையும் பகைக்க வைக்கத் திட்டம் போட்டு மரியதாசின் வாடிக்குச் செமியோன் நெருப்பு வைக்கப் போவாதாகப் பொய் கூறுகின்றான். அப்போது கூழைக்கடா ஒன்று குரல் எழுப்பியவாறு விரைகின்றது. (ப.169) இது வாடி எரிந்து துன்பமான விளைவுகள் ஏற்படப் போவதையே எடுத்துக் காட்டுகின்றது.

உலக இயற்கையைப் புரிய முற்பட்டபோது மனிதனுக்கு ஏற்பட்ட சில நம்பிக்கைகள் அவனது வாழ்வுக்கு அடிப்படையாக அமைந்து விடுகின்றன. சூழலிலுள்ள விலங்குகளும் பறவைகளும் கூட அவன் புரியாத பல செய்திகளை அவனுக்குப் புரிய வைக்கின்றன என்று அவன் நம்புகிறான். இந்த நம்பிக்கை தலைமுறை தலைமுறையாகக் கடத்தப்பட்டு வருவதால் அது சமூகத்தில் பலம் பெற்று விடுகின்றது. இதனால் இவற்றை ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்ற எண்ணம் எவருக்கும் ஏற்படுவதில்லை. காலமாற்றத்தில் அவற்றின் மீதான நம்பிக்கைகள் குறைவடைந்தாலும் இது ஏதோஒரு வகையில் மனிதனைப் பாதிப்பதாகவே உள்ளது. பல்லி சொல்லுவதில் உண்மை இல்லை என்று நினைப்பவர்கள் கூட முக்கியமான சந்தர்ப்பங்களில் பல்லி சொன்னால் ஒரு கணம் தயங்கவே செய்வர். இது காலங்காலமாக ஏற்பட்ட நம்பிக்கை. இதனை இலகு வாகத் தட்டிக் கழித்து விட முடியாது. இத்தகைய நம்பிக்கைகள் மனித வாழ்வை நெறிபடுத்துவனவாகவுள்ள சமுதாயதில் இருந்து பிறக்கின்ற நாவல் இலக்கியங்களில் இவ்வாறான நம்பிக்கை ஏற்ற சந்தர்ப்பங்களில் பதிவு செய்யப்படும். போது நாவல் உயிரோட்டமுள்ளதாக அமையும். அது மக்களின் வாழ்வோடு நெருக்கமாகச் செல்வதை வாசகனால் உணரமுடியும். செங்கை ஆழியானின் படைப்புக்களில் இத்தகைய நம்பிக்கைகள் பல பதிவு செய்யப்பட்டுள்ளதால் அவை அந்த மக்களின் வாழ்வோடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருங்கிச் செல்வதை உணர முடிகின்றது. எனினும் நாவலாக்கத்தில் மேலும் கூடிய கவனமெடுக்கும் போது இத்தகைய உத்திகள் படைப்பின் உச்சப் பயன்பாட்டை ஏற்படுத்த உதவலாம்.

**பயன்படுத்திய நூல்கள்**


செங்கை ஆழியான் *(1977)* காட்டாறு, கொழும்பு

செங்கை ஆழியான் *(1973)* வாடைக்காற்று, கொழும்பு

செங்கை ஆழியான் *(1991 2ம்பதிப்பு)* யானை, யாழ்ப்பாணம்

செங்கை ஆழியான் *(1984)* நடந்தாய்வாழி வழுக்கியாறு, யாழ்ப்பாணம்

செங்கை ஆழியான் *(1991 2ம்பதிப்பு)* ஒருமைய வட்டங்கள், யாழ்ப்பாணம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலம் பெயர் கதைகளில் கலப்பு மணங்கள்

திருமணம் என்பது ஒரு ஆனையும் ஒரு பெண்ணையும் இணைப்பதாகவே இருந்தாலும் தமிழர் பண்பாட்டில் இது இரண்டு குடும்பங்களின் இணைப்பாகவே தொழிற்பட்டு வருகின்றது. இவ்வாறு இணைக்கப்படவுள்ள குடும்பங்களைத் தெரிவு செய்வதில் குடும்ப நலன், சமூகநலன் ஆகிய விடயங்களே பிரதானமாகக் கருத்திற் கொள்ளப்படுகின்றன. இங்கு சமூக நலன் எனக் குறிப்பிடப்பட்டது அக் குடும்பத்தின் சாதியக் குழுமத்தையே ஆகும். உண்மையில் தமிழர் பண்பாட்டில் சாதியம் மிகவும் இறுக்கமாகப் பேணப்படுவது திருமண உறவுகளிலேயே. யாழ்ப்பாணத்துத் தழிழர்களிடையே சாதிக்குள் சாதி பார்க்கும் வழக்கமும் இருப்பதால் திருமண உறவுகளில் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. பல பெண்கள் பருவ வயதில் திருமண வாய்ப்பினை இழந்து விடுவதும் வழக்கம்.

இலங்கையில் ஏற்பட்ட இன முரண்பாடுகளினால் வடக்கு கிழக்கு என்ற தமிழர் தாயகப் பிரதேசங்களிற் கூடத் தழிழர்கள் அச்சமின்றி வாழமுடியாத ஒரு அவலநிலை ஏற்பட்ட போது இளைஞர்கள் முதல் முதியவர்கள் வரை பலரும் புலம் பெயர ஆரம்பித்தனர். சொந்த மண்ணில் வாழமுடியாமல் குடும்பத்தை, ஊரை, உறவுகளைப் பிரிந்து உயிரைப் பாதுகாப்பதற்காக உலகின் பல்வேறு நாடுகளுக்கும் அகதிகளாகச் சென்ற போது புலம் பெயர்ந்த நாடுகளில் கண்ட புதிய சூழல் புதியவாழ்க்கை, புதிய மனிதர்கள், புதுவிதமான உறவுகள் எல்லாமே எமது மக்களுக்குப் புதுமையானவையாகவே இருந்தன. இப்புதிய சூழல் தாம் இதுவரை பண்பாட்டின் பேரால் தமக்குத் தாமே போட்டிருந்த சமூகக் கட்டுப்பாடுகள் மீது கேள்வி எழுப்பவைத்தது. இது வரை காலமும் கேள்விக்குள்ளாக்கப்படாத பண்பாட்டு விழுமியங்கள் கேள்விக்குள்ளாக்கப் பட்டுப் புலம்பெயர் சூழலில் அவை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்த்தமற்றவை என உணரப்பட்டன. இத்தகையதொரு சமூக நிலையின் வெளிப்பாடுதான் கலப்பு மணங்கள். ஆனால் இறுக்கமான சமூகக்கட்டுப்பாடுள்ள ஒரு இனம் அதற்கு நேர்மாறான இன்னொரு சமூகத்துடன் இணையும் போது அது ஆரம்பத்தில் சிக்கல்களை உருவாக்கும் என்பதை மறுக்கமுடியாது. இத்தகைய சமூக நிலைகள் பலவற்றையும் புலம் பெயர் கதைகளினூடாகத் தேடுவதே இந்த ஆய்வின் நோக்கமாகும். அந்த வகையில் இது ஒரு ஆரம்ப முயற்சியே என்பதையும் குறிப்பிடுவது அவசியமாகும்.

சக்கரவர்த்தியின் "மனசு" என்ற சிறுகதையில் வருகின்ற யாழ்ப்பாணத்து வாலிபன் ஒருவன் புலம் பெயர்ந்த நாட்டில் வெள்ளைக்காரி ஒருத்தியின் மீது காதல் கொள்கின்றான். பெண்ணை வீட்டுக்குரியவளாக, வீட்டுக்காரியாக, இல்லாளாக, படிதாண்டாப் பத்தினியாக வைத்திருந்த பண்பாட்டிலிருந்து சென்றவனுக்கு புதிய சூழலில் கட்டுப்பாடுகளின்றி வாழ்ந்த பெண்களின் மீது கவர்ச்சி ஏற்படுவது தவிர்க்க முடியாததாகலாம். குடும்பம், சமூகம், நாடு என்ற எந்த நிலையிலும் அடக்குமுறை அச்சம், கொடூரம் .... என்று வாயடைக்கப்பட்டு சிந்திக்கும் ஆற்றலையே இழந்து நின்ற சமூகத்திலிருந்து வெளியேறி மேற்குலகில் தஞ்சம் புகுந்தவனுக்கு அங்கு கண்டவையெல்லாமே புதுமையானவை. அதனால் அவற்றின் பால் கவரப்படுவது உடனடிச் சாத்தியமானதுதான். இக்கவர்ச்சியினால் அவனுக்குத் தமிழர் பண்பாடு கேலிக்குரியதாகத் தோன்றுகின்றது.

"பயித்தியக்காரத்தனமான அந்தப் பம்மாத்துக் கல்சர், நம்மளோட கல்ச்சர்! இந்த தமிழிச்சிகள் தலையைக் குனியிறதும், ஓடுறதும், வெக்கப்படுகிறதும். வோஷ்ரும் போகக் கூட அவையளுக்கு ஆம்புள வேணும். ச்சீ சுத்த பம்மாத்து கார் பேஷ்! சோஷலாப் பழகவேணும் வேறுபாடு பார்க்காமல் தோள்ள கை போட்டு திரிய வேணும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒண்டா இருந்து தண்ணியடிக்க வேணும். ஒரு சிகரட்ட புருஷனும் பொஞ்சாதியும் பாதி பாதியா பத்த வேணும் .... பார்ட்டியில கட்டிப்பிடிச்சு டான்ஸ் ஆட வேணும். ....”

என்றெல்லாம் ஆசைப்படுகின்றான். இந்த ஆசையின் விளைவு தான் வெள்ளைக்கார மனைவி. ஆனால் ஒன்றுக் கொன்று முற்றிலும் மாறுபட்ட இரு பண்பாட்டு ஜோடிகள் இணைந்த மணவாழ்வு அவனுக்கு விரைவிலேயே கசந்து விடுகின்றது.

“எது வாழ்க்கை? எங்கேயோ குடிச்சுப் போட்டு விடியச்சாமம் ரெண்டு மணிக்கு எவனோ ஒரு ஆம்புளையோட வாற பொஞ்சாதியோட எப்படி வாழ முடியும்.

“ஒரு புருஷன் குடிச்சால் குடிக்காத எண்டு பொஞ்சாதி சொல்ல வேணும். பறிச்சிக் குடிக்கிற பொம்புளையோட எப்படி வாழ்றது? அசிங்கமான பழக்க வழக்கமுள்ள பொஞ்சாதியோட குடும்பம் நடத்திறது. எவ்வளவு கொடுமை எண்டு இப்பதான் தெரியுது”

இது சக்கரவர்த்தியின் பாத்திரமான சீதாராமனின் வார்த்தைகளாக இருக்கலாம். உண்மையில் இது தமிழர் பண்பாட்டின் வலுவான குரல். எனினும் இன்றைய புலம் பெயர் வாழ்வுச் சூழலில் இக்குரல் மதிப்பிழந்து வெறும் ஈனக்குரலாகி வருவதையே இக்கதை உணர்த்துகின்றது.

அளவெட்டி சிறிசுகந்தராசாவின் “மரபுகளும் உறவுகளும்” என்ற கதை “பெண்களும் காளைமாடுகளும் உங்களுங்கள் நாட்டிலேயே எடுக்கப்பட வேண்டும்.” என்ற இத்தாலியப் பழமொழியை முதலில் காட்டியவாறே ஆரம்பிக்கின்றது. கதையில் வருகின்ற கும்பன் என்ற யாழ்ப்பாணத்து உயர்சாதி இளைஞன் வெளிநாட்டில் வெள்ளைக்காரி லௌறாவுடன் காதல் தொடர்பு வைக்கிறான். இதை அறிந்த கும்பனின் தாய் யாழ்ப்பாணத்தில் இருந்தவாறு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“சாதி இறக்கமெண்டு..... குலத்திலை ..... மேளோடை
பறைச்சல் பேச்சல் வைக்கிறானெண்டு குத்தி
முறிஞ்சம் ..... இண்டைக்குப் பாருங்கோவன்
வெள்ளைக்காறியோடை வெக்கங்கெட்டதனமாய்
வெளிக்கிட்டுத் திரியிறான் தம்பி, சச்சாய்......
நாச மறுப்பு.............. எத்தனையெல்லாம் நினைச்சன் .....
கண்குளிருகிற கணக்குக்கு கண்ணகி மாதிரி
மருமகள்ப் பெட்டை யொருத்தி வருவாள்.....
கயிட்டமில்லாமல் கண்ணை மூடுவமெண்டால்....
சந்திக் குத்தி வைரவரே அடுக்குமோ இந்தச் சோதனை?”

“கொள்ளி வைக்க வெண்டு கோயிலான கோயி
லுக்கெல்லாம் மாவிளக்குக் கொழுத்தி
ஆசையருமையாய்ப் பெத்த ஒற்றை வாரிசு
கண்ணுக்கும் மூக்குக்கும் பூசி மெழுகிக் கொண்டு
அரைதெரியிற விறுத்தத்துக்கு அலையிற ஆட்டக்
காறியோடை ..... பெத்த மனசுக்கு பொச்சு
வைக்க நெருப்பு மூளாதோ.....

“ .....செம்பட்டைப் பரட்டைமயிரை ஒடுக்கி
கழுத்து விட்டமும் கமக்கட்டடியும் கண்டாவளை
வெளிக்கணியத்துக்கு தெரியிற மாதிரி ஓடுகாலி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளச்சியே எனக்கு மருமகளாய் வாறது......"

என்று அழுது புலம்புகின்றாள். ஆனால் கும்பன் வெள்ளைக்காரி லௌறாவை ஏமாற்றி விட்டு தான் முன்பு காதலித்த யாழ்ப்பாணத்துப் பெண்ணையே மனைவியாக்கிக் கொள்வதாகக் கதை முடிகின்றது.

அவன்.

லௌறா, பொட்டாகக் குறுகியதுதான் வாழ்க்கை என்றாலும் சம்பந்தப்பட்டு வாழுகிற மனிதரின் மட்டத்தில் வைத்து வரிக்கையில் அதே வாழ்க்கை ரொம்பவும் நீண்டது மட்டுமல்ல செழுமிய உதாரணத்தை தூக்கித் தரவும் கூடியது...... இதனால் தான் வாழ்வுப் பிணைப்பின் இணைத்தேர்வில் அதீதமான அவதானங் கொள்ள வேண்டியிருக்கின்றது. புவியியலும் மானிடவியலும் படுவேகமாய் எவ்வளவு தான் நெருங்கி வரினும் நடை முறை நிதர்சனங்களை அசட்டு விரிப்பிற்காகப் புறந்தள்ள முடியாது என்னால்...."

என்று வார்த்தை அளக்கும் போது லௌறா.

"என்ன குமஸ் நீ? அபரிமிதமாய் ஆலாபனை செய்கிறாய் ....நீ எங்கே வருகிறாயென்பது எனக்குப் புரிகிறது. நான் கீழைத்தேயக் குப்பையிலிருந்து வந்தவன். நீ வாழ்வை கல அணுவால் மாமிசவகையாய் ருசிக்கிற வெள்ளைப் பரத்தை உன்னை மணந்து நாளும் கணமும் ஏன் துக்கித்தழிவான் என்று கலாசாரத்தையும் பண்பாட்டையும் இடையில் போட்டு உடைத்தழல்கிறாய் அதுதானே.? அப்புறம் என்ன ...க்கு என்னிடம் நெருங்கினாய்? எனது கட்டிலின் பாதியை உன்னுடன் சேர்த்துப் போர்வையால் மூடினாய்?"

என்று லௌறா கேட்டபோது கும்பன்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உனது போர்வைக்குள் நானும் வந்த பிற்பாடு தான் எனக்கு என்னுடைய ஜென்மபூமியின் நிறம் பளீரிட்டது. இதற்காக உன்னை ஏமாற்றியதாயோ உனது வழக்க தோஸங்களுக்குதுரோகமிழைத்த தாயோ கணக்கிடுவதாயிருந்தால் நீ ஒரு நாள் மண முடிக்கப் போகும் உனது எதிர் கால புருஸா பிள்ளையாண்டான் என்று ஒருவனுமில்லை என்றிருக்க வேண்டும் - உனக்கே தெரியும் இது சாத்தியத்துக்கே சாத்தியமற்ற தொன்றென்று....."

எனக் கூறுகின்றான் கும்பனின் இந்த முடிவும் லௌறா வின் நிலையும் இரு பண்பாடுகளும் ஒன்றோடொன்று இணைய முடியாதவை என்பதையே எடுத்துக் காட்டுகின்றது. ஆனால் லௌறாவின் தொடர்பும் மேற்குலகப் பண்பாட்டின் கவர்ச்சியும் அவனுக்கு தமிழர் பண்பாட்டின் சாதியம் சார்ந்த மதிப்பீடுகளை அர்த்தமற்ற தாக்கி விடுகின்றது. இதனாலேயே அவன் ஊரிலே காதலித்த சின்னியை மனைவியாக்கிக் கொள்கிறான் எனக் கதை முடிகின்றது. கதையின் முடிவில் இல்லாத தெளிவு புலம்பெயர் சூழலிற் கூட இன்னும் எமது பண்பாட்டு மதிப்பீடுகள் கட்டிக் காக்கப்படுவதையும் அவற்றின் மீதுள்ள இரண்டக நிலையினையுமே எடுத்துக் காட்டுகின்றது.

புலம்பெயர்ந்த - ஈழத்துத் தமிழர்கள் மேற்கு நாடுகளில் நிரந்தர வதிவிட உரிமையினைப் பெற்றுக் கொள்வதற்காகவும் அந்நாட்டவர்களைத் திருமணம் செய்கின்றனர். இத்தகைய திருமணங்கள் வதிவிட உரிமை கிடைத்ததும் விவாகரத்துப் பெற்றுப் பிரிந்து விடுகின்ற திருமணங்களாகவே இருக்கின்றன. முருகபூபதியின் "மழை" என்ற சிறுகதையில் வருகின்ற சந்திரன் யாழ்ப்பாணத்தில் மனைவியையும் பிள்ளைகளையும் விட்டுவிட்டுப் புலம் பெயர்ந்தவன் வெளிநாட்டில் வெள்ளைக்காரி ஒருத்தியுடன் இவனுக்குத் தொடர்பு ஏற்படுகின்றது. இதனால் அவனின் மனநிலை மாறுபடுகின்றது .அவன்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“இவளுடனான இந்த நட்பு எப்போதோ கிட்டியிருக்க வேண்டும் இவளை மணந்து இந்த அந்நிய மண்ணில் நிரந்தர வதிவிட அனுமதி பெற்று பின்பு இவளை ஏதும் பணம் கொடுத்து விவாகரத்து செய்து விட்டு ஊரிலிருந்து மனைவி பிள்ளைகளை “ஸ்பொன்ஸர்” மூலம் அழைத்திருக்கலாம் என்று சிந்திக்கின்றான். பின்னர் பப்பில் அவளோடு ஒன்றாக இருந்து மதுவருந்திவிட்டு அவளைத் தனது அறைக்கு அழைத்துச் செல்கின்றான் அவள் அவனின் கன்னத்தில் முத்தமிட்டு ஆனந்தமாக அவனோடு செல்கின்றாள். அறையில் அவள் அவனின் கழுத்தைக் கட்டிப்பிடித்தவாறு நெருக்கமாக அமர்ந்து கொள்கின்றாள். பின்னர் உடலுறவு கொள்ள அழைத்த போது அவன் மனம் மாறி,

“வாயைமூடு அஞ்ஜெலா.... நான்காண்டுகளுக்கும் மேலாக என் ஸ்பரிசம் இன்றி எனது உடல் சுகம் கிட்டாமல் துப்பாக்கி வேட்டுக்களுக்கும் செல் அடிகளுக்கும் .... பயந்து கொண்டு என் மனைவியும் அங்கே ...இந்த சுகத்துக்காக உன்னைப்போல் ஒருவனைத் தேடிப்போகலாம். இல்லையா.........”

எனக் கூறுவதாக ஆசிரியர் புனைவது புலம்பெயர் சூழலின் யதார்த்தமாக அன்றி ஆசிரியர் விடுக்கும் எச்சரிக்கையாகவே கருதமுடிகின்றது.

ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் “அரங்கேற்றங்கள்” என்ற சிறுகதையில் லண்டனில் வாழும் இலங்கைத்தமிழ்க் குடும்பத்துப் பெண்ணொருத்தி பல்கலைக்கழகத்தில் படிக்கும் போது வெள்ளைக்காரன் ஒருவனைக் காதலித்து அவனையே திருமணம் செய்வதும் இந்தத் திருமணத்தைப் பெற்றோர்கள் - அயலவர்கள் விரும்பாததும் காட்டப்படுகின்றது. இவள் வெள்ளைக்காரனோடு ஓடிவிட்டதாய்க் கேள்வியுற்று வீட்டில் துக்கம் விசாரிக்க வந்த உறவுக்காரப் பெண்ணொருத்தி,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னதான் இருந்தாலும் எங்கள் கலாசாரத்துக்கு நாங்கள் கௌரவம் கொடுக்க வேண்டும்."

என்று அவளின் செய்கையைக் கண்டிக்கிறான். ஆனால் அவளின் தங்கை

"அக்கா கடந்த இரண்டு மூன்று வருடங்களாக அவளின் Boy friend உடன் தொடர்பு வைத்திருக்கிறாள். அவளைத் தமிழ்க் கலாச்சாரத்துக்காக தியாகம் செய்து விட்டு முன்பின் தெரியாத இன்னொருத்தனைத் தாலிக் கயிற்றால் பிணைத்துக் கொண்டு கோயிலுக்கும் சந்தனகுங்குமத்துக்கும் அவள் மனச்சாட்சியை அழித்துக் கொள்ளவா சொல்கிறாள்? தமிழ்க் கலாசாரம் என்பது பொய்மையின் மறு பெயரா?"

என்று தமிழர் பண்பாட்டினையே கேள்விக்குள்ளாக்குகின்றாள்.

ரதியின் "நிறமில்லை" என்ற சிறுகதையில் வருகின்ற சாந்தி B.Sc படித்த பட்டதாரி கறுப்பானவள், சீதனமில்லை என்பதால் ஊரில் அவளுக்குத் திருமண வாய்ப்பு இல்லாமற் போய் விடுகிறது. இந்நிலையில் அவள் மேற்படிப்புக்காக அவுஸ்திரேலியா செல்ல நேரிடுகின்றது. அங்கு அவளோடு படித்த ஜேம்ஸ் என்ற வெள்ளைக்கார வாலிபனுக்கு அவள் மீது விருப்பம் ஏற்படுகின்றது. அந்த விருப்பத்தை ஏற்றுக் கொள்ள முடியாமல் இருந்த சமூகத்தடைகளை அவள் நினைத்துப் பார்க்கிறாள்.

"........சாதி, சனம், நிறம், மொழி, மாகாணம் என்று எத்தனையோ பேதங்களாகப் பிரிந்து தாங்கள் போட்ட வட்டத்துக்குள் பிள்ளைகளை வளர்ப்பது எங்கள் சமுதாயம் - பிள்ளைகள் வளர்ந்த பின்னும் குழந்தைகளாகப் பாவிப்பதும் எங்கள் வழக்கு. எனக்கு இப்போ இருபத்தி ஒன்பது வயது உங்கு பல்கலைக்கழகப் படிப்பு முடித்து வேலையில் இருக்கும் போது எனக்குக் கலியாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசத்துவங்கி நானும் நீங்களும் பட்ட அவமானங்களை நினைத்துப் பார்க்கின்றேன். படிப்பில் விளையாட்டில், பாட்டில், சமையலில் இவை யெல்லாவற்றிலும் திறமைசாலியாக இருந்த என்னை – உங்கள் ஒரே ஒரு பெண்ணை – கலியாணம் செய்ய ஒருவரும் முன்வரவில்லை. பொடிச்சி சாங்கமாக இருந்தாலும் நிறம் குறைவு பாருங்கோ இதுக்கே

ஒரு இரண்டு இலட்சம் டொனேசன் கேட்பினம் என்று சொன்னவர்களும் கறுப்பு.... இரண்டாம் தாரமாகச் செய்ய விருப்பமே?.... என்றவர்களும் வெளியில் இருக்கும் பெடியளும் Tall, Slim, & Fair என்று கேட்கிறார்கள். என்று தட்டிக்கழித்தவர்களும்...... என்றவாறு தனக்கு கலியாணம் என்றாலே கசப்பு என்ற எண்ணத்தையூட்டியதை நினைத்தவள் தன்னைத் தானாகவே விரும்பும் ஆடவனை விரும்பி ஏற்றுக் கொள்ளுகின்றாள்.

பொதுவாக நோக்கும்போது மிகவும் இறுக்கமான கட்டுப்பாடுகள் உள்ள பண்பாட்டுச் சூழலில் இருந்து புலம்பெயர்ந்த ஆண்கள் சுதந்திரப்பறவைகளாகத் திரியும் வெளிநாட்டுப் பெண்கள் மீது காதல் வயப்படுகின்றனர். நிரந்தர வதிவிட உரிமைக்காகவும் மீளமுடியாத காதலுக்காகவும் சில வேளைகளில் திருமணம் செய்து கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டு விடுகின்றது. ஆனால் ஆசை அறுபது நாள் என்பது போல மிகவிரைவிலேயே இவர்கள் விரக்தியுற்று விவாகரத்துப் பெறவேண்டிய நிலைக்கு வந்து விடுகின்றனர். இது இரண்டு பண்பாடுகளும் ஒன்றோடொன்று ஒட்ட முடியாதவை என்பதையே உறுதிப்படுத்துகின்றது. ஆனால் தமிழ்ப் பெண்கள் இலங்கையில் திருமண வாய்ப்பை இழந்தவர்கள் வெளிநாட்டு ஆண்களைத் திருமணம் செய்தாலும் அவர்களாக குடும்பத்தை முறித்து வெளியேற முயற்சிப்பதாகத் தெரியவில்லை. இது தமிழர் பண்பாட்டில் வீட்டுக்குரியவளாக பத்தாவுக்கேற்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவிரதையாக இருந்ததன் காரணமாகவும் இருக்கலாம். அடுத்து வெளிநாடுகளிலேயே பிறந்து வளர்ந்த பிள்ளைகளைப் பொறுத்தவரையில் அவர்கள் அந்தந்த நாட்டுச் சூழலுக்கேற்ப தமது துணையைத்தாமே தேடி விட விரும்புகின்றனர். இவர்கள் தமிழர் பண்பாட்டுக் கட்டுப் பாடுகளை உணராதவர்கள் இதனால் இவர்களின் வாழ்வில் பண்பாட்டுத் தடைகள் ஏற்படவில்லை எனவே கால ஓட்டத்தில் பண்பாட்டின் பேரால் இருந்த சமூகத்தடைகள் அர்த்தமற்றதாகிக் கலப்பு மணங்கள் சாதாரணமாகவே ஏற்பட வாய்ப்பு உள்ளது என்பதில் சந்தேகமில்லை இதன் மூலம் புலம் பெயர் சமூகத்தில் தமிழர் பண்பாட்டுக்குரிய தடையங்கள் காணாமற் போகின்ற வாய்ப்பே அதிகமாகும் இது வருத்தத்திற்குரியதாக இருந்தாலும் முடிவு அதுவாகவே இருக்கும்.

**பயன்படுத்திய நூல்கள்**

*இந்திரா பார்த்தசாரதி என்.பொ. (தொகுப்பு 1994) பனியும் பனையும்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டானியலின் நாவல்களில் சம்பவப்புனைவு

ஈழத்து நவீன தமிழிலக்கிய வரலாற்றில் தனிக்கவனத்தைப் பெற்றுள்ள படைப்பாளிகளுள் டானியல் முதன்மையானவர். 1950 களில் சிறுகதை ஆசிரியராக இலக்கிய உலகில் அடியெடுத்துவைத்த டானியல் 1986இல் இவ்வுலக வாழ்விலிருந்து விடுதலை பெறும் வரை எழுதிக் கொண்டே இருந்தவர். உரிமைகள் மறுக்கப்பட்ட மக்களின் இலக்கியக் குரலாகத் தன்னை வெளிப்படுத்திக் கொண்ட டானியல் இம்மக்களின் விடுதலைக்காகவே தனது எழுத்துக்களை அர்ப்பணித்துக் கொண்டவர். இவரது படைப்புக்களாக பஞ்சமர், கோவிந்தன், அடிமைகள், தண்ணீர், கானல், போராளிகள் காத்திருக்கின்றனர், பஞ்சகோணங்கள் ஆகிய ஏழு நாவல்களும் பூமரங்கள், முருங்கையிலைக் கஞ்சி, மையக்குறி, இருளின் கதிர், ஆகிய நான்கு குறுநாவல்களும் டானியல் கதைகள், உலகங்கள் வெல்லப்படுகின்றன என்ற இரு தொகுதிகளிலுமுள்ள சில சிறுகதைகளுமே எமக்குக் கிடைத்துள்ளன. இவற்றைவிட சாநிழல், நெடுந்தூரம் ஆகிய இரு நாவல்களை அவர் எழுதியிருப்பதாகக் கூறப்பட்டாலும் அவை இதுவரை எமது பார்வைக்குக் கிடைக்கவில்லை. இவரது நாவல்களில் பஞ்சமர், கோவிந்தன், அடிமைகள், கானல், தண்ணீர், பஞ்சகோணங்கள் ஆகிய ஆறு நாவல்களும் பஞ்சமர் வரிசை நாவல்கள் எனப்படுகின்றன.

இவையனைத்தும் பஞ்சப்பட்டமக்களின் அதாவது வாழ்வுக்கான உரிமைகள் மறுக்கப்பட்ட மக்களின் அவல வாழ்வைச் சித்திரிப்பனவாகவே உள்ளன. போராளிகள் காத்திருக்கின்றனர் என்ற நாவலில் முதலாளிகளால் சுரண்டப்படுகின்ற கடல் தொழிலாளர்களின் துயரம் நிறைந்த வாழ்வு எடுத்துக் காட்டப்படுகின்றது.

10373



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சமர் வரிசை நாவல்களினூடாக உரிமைகள் மறுக்கப்பட்ட மக்களை வர்க்க அடிப்படையில் ஒன்றிணைந்து உரிமைக்காகப் போராட வைப்பதே டானியலின் நோக்கம் எனக் கருதலாம். இவ்வாறான நோக்கம் டானியலுக்கு இருப்பினும் நாவலின் சம்பவப் புனைவில் சில தடுமாற்றங்களையும் பாதை விலகல்களையும் காணும்போது அவரது நோக்கம் கேள்விக்குள்ளாக்கப்படுவதைத் தவிர்க்க முடியாத நிலை ஏற்படுகின்றது. இங்கு டானியலின் அடிமைகள், தண்ணீர் ஆகிய இரு நாவல்களிலும் இடம் பெறுகின்ற சில சம்பவங்கள் எடுத்து நோக்கப்படுகின்றன.

சம்பவப் புனைவு என்பது நிகழ்ச்சிகளைக் கோவைப்படுத்தும் முறையாகும். சம்பவங்கள் காரணகாரியத்தோடு புனையப்பட வேண்டும். இதன் மூலமே நாவலின் கதைப்பின்னல் சிறப்புற அமைகின்றது. சம்பவப் புனைவில் கிடைக்கின்ற வெற்றியே நாவலின் தரத்தைத் தீர்மானிப்பதிலும் பெரும்பங்கு வகிக்கின்றது. பாத்திரங்களின் முழுமை புலப்படும்படியாகவும் புனையப்படும் சம்பவங்கள் நிகழத்தக்கவையாகவும் அமைந்து சமூக மெய்மையை உணர்த்தும் போதே நாவல் தரமான படைப்பாக அமைகின்றது. டானியல் கோரிக்கைகளை ஆவேசங்களை இலக்கியத்தில் பதிவு செய்ய வேண்டும் என்ற இலட்சிய வேட்கையுடன் நாவல் உலகில் புகுந்தவர். இந்த இலட்சிய வேட்கை புலப்படும்படியாக நிகழ்ச்சிகளைக் கோவைப்படுத்தி சம்பவங்களைப் புனைந்து வெற்றி பெறுகின்றாரா என்பதை நோக்குவதாகவே சில சம்பவப் புனைவுகள் எடுத்துக் காட்டப்படுகின்றன.

டானியலின் தண்ணீர் நாவலில் மூத்ததம்பி நயினாரின் மனைவி அன்னப்பிள்ளை நாச்சியார் குடிமகன் நல்லதம்பியிடம் சோரம் போய் முருகுப்பிள்ளை நயினாரைப் பெற்றெடுத்த சம்பவம் ஒரு தனி வரலாறாகவே காட்டப்படுகின்றது. ஆசிரியர் மூத்ததம்பி நயினார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னப்பிள்ளை நாச்சியாரைத் திருமணம் செய்த சம்பவத்திலிருந்து ஆரம்பித்து அவர்களின் வாழ்க்கையில் ஏற்பட்ட பல்வேறு சம்பவங்களையும் எடுத்துக் காட்டுகின்றார். மூத்ததம்பி நயினார் தனது ஐம்பதாவது வயதில் இருபத்தைந்து வயதான அன்னப்பிள்ளை நாச்சியாரைத் திருமணம் செய்து கொள்கின்றார். நாச்சியாரின் சாதகத்தில் இருந்த செவ்வாய்க் குற்றமே நாச்சியாரை ஐம்பது வயதான மூத்ததம்பி நயினாருக்கு மனைவியாக்கியது இதை ஆசிரியர் சாந்தா தோட்டத்து சாஸ்திரியாரின் முடிவாகவே கூறுகின்றார். சாஸ்திரி, பொருந்தினால் இந்தச் சாதகங்கள் தான் பொருந்தும் இல்லாவிட்டால் இரண்டு சாதகங்களுக்கும் மாங்கல்ய பிராப்தமே இல்லை. என்று முடிவாகக் கூறியதால் பெருமளவு சொத்துக்களுக்கு அதிபதியாக இருந்த அன்னப்பிள்ளை நாச்சியார், தன்னை விடச் சாதி அந்தஸ்தில் குறைந்த அதாவது தாம் வாய் நனைக்காத இடத்தில் மூத்ததம்பி நயினாரைத் திருமணம் செய்கின்றார். இந்தச் சம்பவத்திற்கு அன்னப்பிள்ளை நாச்சியாரின் உறவினர்கள் பலர் வரவேயில்லை. எனவே இத்திருமணத்தில் வயதாலும், சொத்துரிமையாலும், சாதி அந்தஸ்தாலும் அன்னப்பிள்ளை நாச்சியாரும் மூத்ததம்பி நயினாரும் வேறுபட்டவர்களாகவும் பொருத்தமற்றவர்களாகவுமே படைக்கப்படுகின்றனர். இவ்வாறு பொருந்தாத வாழ்வில் இவர்களை இணைத்து வைத்த ஆசிரியர் அவர்களின் இல்லற வாழ்விலும் தோல்வியையே காட்ட அவர்களுக்குக் குழந்தைப் பேறு இல்லை என்றும் ஒரு சாதியென்றில்லாத பரியாரிமார்களின் சூரணவகைகள், குளம்பு வகைகள், செந்தூர வகைகள், குடிநீர் வகைகள், பத்திய வகைகள், எல்லாமே தோற்றுப் போய்விட்டன எனக்கூறித் தோல்வியை நிரந்தமாக்கி விடுகின்றார்.

ஆனால் அடுத்த கட்டத்தில், கறுத்தானின் மனைவி தெய்விக்கு நயினாரால் கொடுக்கப்பட்ட சுமை இறக்கப்படாமலேயே அவள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறந்தது பற்றிக் கூறுகின்றார். அவ்வாறாயின் மூத்ததம்பி நயினார் குழந்தைப் பேற்றிற்குத் தகுதியானவர் என்பதை ஆசிரியர் தெரியப்படுத்தி விடுகின்றார். இந்நிலையில் நாச்சியாரிடமே மலட்டுத்தன்மை இருக்கலாம் எனக்கருத வேண்டிய நிலை ஏற்படுகின்றது. ஆனால் ஆசிரியரின் நோக்கம் அதுவன்று.

மற்றொரு சம்பவத்தில், சுமை இறக்கப்படாமலே தெய்வி புதைக்கப்பட்டதால், பயந்த நயினார் நோய்வாய்ப்படுகின்றார். மைவெளிச்சம், மாந்திரீகம் எல்லாம் முறைப்படி பார்த்து நவாலி சின்னப்பிள்ளைப் பரியாரி வீட்டில் மூன்று மாத காலம் தங்கியிருந்து வைத்தியம் நடைபெற்றது. தெய்வியின் சுமையினாலேயே நயினாருக்கு வருத்தம் வந்தது எனக் கருதியதாலேயே இதற்கேற்ற பரியாரியான சின்னப்பிள்ளையிடம் நயினாரை அழைத்துச் செல்ல நாச்சியார் முடிவெடுக்கின்றார். இதனால் நல்ல தம்பி பிடித்து வந்த குதிரை வண்டிலில் நயினாரும் நாச்சியாரும் நவாலிப் பரியாரியிடம் செல்கின்றனர். சுமையோடு போனவர்களின் புருஷன்மாரின் நோயைச் சுகப்படுத்த நவாலி துரும்பச் சின்னப்பிள்ளையன் கெட்டிக்காரன் எனக் கூறிய கடைக்கார நல்லதம்பியனே இவர்களை நவாலிக்கு அழைத்துச் செல்கின்றான்.

நவாலியில் பரியாரி வீட்டில் வைத்தியம் முடிந்து விட்டது. நயினார் குணப்பட்டுவிட்டார். இதனால் இவர்கள் வீட்டிற்குச் செல்ல வேண்டும். வீட்டிற்குச் செல்லும்போது நல்லதம்பியன் துணைக்கு வருகின்றான். நயினாரின் பயணத்திற்கு இரண்டு நாள் முன்பாகவே நல்லதம்பியனின் கார் நாவாலியிருந்து நயினாரையும் நாச்சியாரையும் ஏற்றிக்கொண்டு காலை 10.00 மணிக்குப் புறப்படுகின்றது. இது யாழ்ப்பாணம் வந்து சேரும் போது பிற்பகல் இரண்டு மணியாகிவிடுகின்றது. கால் நடையாகப் பயணித்தாலும் தேவைப்படாத நான்கு மணித்தியாலம் நல்லதம்பியின் காருக்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவைப்பட்டிருக்கின்றது. இந்த ஆமை வேக கார்ப்பயணத்திலும் ஏதோ உள்நோக்கம் இருந்திருக்கின்றது. அதனைப் பின்னர் காணலாம்.

வீட்டுக்கு வந்ததும் பயணத்தில் களைத்துப்போன நயினாருக்கு இரண்டு இளநீர் வெட்டிக் கொடுக்கப்படுகிறது. இளநீரைக் குடித்ததும் நயினார் அசந்து தூங்கி விடுகின்றார். நல்லதம்பியனை சம்பிரதாயமாக இரவு நின்றுவிட்டு விடியப் போகலாம் என்று சொல்லாச்சிக் குஞ்சி கேட்கின்றாள். இந்த வேண்டுகோளுடன் நிறுத்தாமல் ஆசிரியர் தொடர்கின்றார். அன்னப்பிள்ளை நாச்சியார் கோப்பியுடன் வருகின்றார். அப்போது ஆசிரியர் மீண்டும் நினைவூட்டுகின்றார் நயினார் இளநீர் குடித்த களைப்பில் நல்ல மயக்கமாக இருக்கின்றார் என்பதை, அத்துடன் செல்லாச்சிக்குஞ்சி பின்பக்கமாகப் போய்விட்டதையும் கூறிவிடுகின்றார். இவ்வேளையிலேயே கோப்பியுடன் வந்த நாச்சியார், மெதுவாக மிகமெதுவாக இண்டைக்குப் பாட்டுக்கு நிண்டிட்டு வெள்ளணப்போமன் என்று நல்ல தம்பியனுக்கு மட்டும் கேட்கும்படியாக சொல்லி விடுகின்றாள். இதன் மூலம் நாச்சியார் நல்லதம்பியின் உறவில் இருந்த சிக்கலை வாசகர்களுக்குஎடுத்துக்காட்டி அவர்களை உசார்ப்படுத்துகின்றார் ஆசிரியர்.

இரவு காரினுள் படுத்திருந்த நல்லதம்பியனுக்கு நடுங்கும் குளிரில் குளிருக்கு மேல் மேலதிக குளிர் ஒன்று அவனது முதுகில் படிவது போல இருந்தது. அது இரு குளிர்க்கரங்கள். இப்போது ஆசிரியர் சிலமணி நேரங்களுக்கு முன் நாச்சியார் கிணற்றுத் தண்ணீரால் குளித்ததை நல்லதம்பியன் நினைப்பது போலக் கூறி வாசகர்களுக்கு மேலும் உற்சாகத்தைக் கொடுக்கின்றார். இரவு விரைவில் கழிந்து விடும்போல இருந்தது எனக் கூறுவதோடு காட்சியை முடிக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவு காரினுள் நடந்ததை வாசகர்களுக்கு உறுதிப்படுத்த ஆசிரியர் மற்றொரு சம்பவத்தைப் புனைகின்றார். நாச்சியார் குளிக்கின்றார், கூட நின்ற கோவிச்சி ஊத்தை உருட்டி ஒத்தாசை செய்கின்றாள். அவள், என்ன நாச்சியார் நாலைஞ்சிடத்திலை ரெத்தம் கண்டிப்போய்க் கிடக்குது?

நயினாருக்கு வருத்தமும் வருத்தம் தான் எண்டாலும் உதுகள்ளை விடார். என்று கோவிச்சி கூறினாலும் நயினார் இளநீரோடு அசந்து போனதை ஆசிரியர் மூன்றாவது தடவை நினைவூட்டவில்லை.

ஆசிரியரின் நோக்கத்தை நிறைவு செய்ய நல்லதம்பியன் இரண்டாவது நாளும் நயினார் வீட்டில் தங்குவதற்கான சந்தர்ப்பம் புனையப்படுகின்றது. நயினாரின் தோட்டத்தில் குடியிருக்கும் அடிமைகளின் குடிசைகளை எரிப்பதற்கு ஆள் தேடும்பணிக்காக நல்லதம்பியன் அடுத்த நாளும் நயினார் வீட்டில் தங்குகின்றான். குடிசைகளை எரிப்பதற்காக வந்தவர்களை அப்பணிக்காக அனுப்பிவைத்தார் - நல்ல தம்பியனை மட்டும் அனுப்பவில்லை – அவனை அளவுக்கு மிஞ்சிய போதை போல நடிக்க வைத்து காரினுள் படுக்க வைக்கின்றார். நயினார் பனியைக் கூடப் பார்க்காமல் தோட்ட வேலிப் பக்கம் அனுப்படுகின்றார். சொல்லாச்சிக்குஞ்சியைக் குறட்டை விட்டு நித்திரை கொள்ள வைக்கின்றார். இவ்வாறான சூழலை உருவாக்கிவிட்டு நாச்சியாரைக் காருக்குள் காத்திருந்த நல்லதம்பியனிடம் அனுப்புகின்றார். அதேவேளை நாச்சியார் காருக்குள் சென்றதும், செல்லாச்சிக் குஞ்சியைக் குறட்டை குலைந்து துயிலெழுந்து பின்புறமாகச் சென்று காருக்குள் நடப்பதைக் காணவைக்கின்றார். இப்போது நாச்சியார் குறட்டை விட்டு நல்ல நித்திரை கொள்கின்றார். ஆசிரியருக்கு இரண்டாவது சந்தர்ப்பமும் வெற்றியாகவே முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாச்சியாருக்கும் நல்லதம்பியனுக்கும் இடையே நடந்த சம்பவத்தைச் சொல்லாச்சிக்குஞ்சி காணுமாறுவைத்தோடு ஆசிரியர் திருப்திப்படவில்லை. இச்சம்பவத்தை ஊரறியச் செய்ய விரும்பிய ஆசிரியர் ஊர்வம்பு பேசித்திரியும் பம்பிடிசிங்கியையும் சம்பவத்தினுள் கொண்டு வருகின்றார். அவள்,

"கார்க்காரக் குருட்டு நல்லதம்பியனோடை சின்னப்பிள்ளைப் பாரியாரியான் வீட்டிலை நடந்த அதெல்லாம் இரண்டொரு மாதம் போனாத் தெரியாமல் விடப் போகுதே" என்று கூறித் தனக்கும் இந்த விடயம் தெரிந்ததை வெளிப்படுத்துகின்றாள். ஆனால் ஆசிரியர் விட்ட ஒரு தவறு பாரியாரி வீட்டில் நாச்சியாரும் நல்லதம்பியனும் தவறாக நடந்து கொண்டதாக ஆசிரியர் காட்டவேயில்லை. நாச்சியாரின் வீட்டில் காரினுள் இரண்டு தடவைகள் அவர்கள் தவறாக நடந்து கொண்டதை துல்லியமாக எடுத்துக்காட்டிய ஆசிரியர் பரியாரியார் வீட்டில் இவ்வாறான சந்தர்ப்பதைப் புனையத் தவறிவிட்டார். ஆனால் நாச்சியாருக்கு கருத்தரித்து பிரட்டல் தலைச்சுத்து முதலிய அறிகுறிகள் வெளிப்பட மூன்று மாதங்களாவது தேவைப்படலாம் என்பதைக் காலம் தாழ்த்தியே உணர்ந்த ஆசிரியர் நாச்சியாருக்கு பரியாரி வீட்டிலேயே தொடர்பு இருந்ததாகப் புதுக்கதை புனைந்துள்ளார். மேலும் நாச்சியார் கருவுற்றதைக் காட்டமுன்னர், நயினார் மூன்று மாதமாக நவாலிப் பரியாரியின் பராமரிப்பில் இருந்ததையும், பரியாரி,

"நயினார், பெண் பேய் பொல்லாதது, இலேசிலை விடாது, ஆறுமாதம் செல்லுறதுக்கிடையிலை ஏதெண்டாலும்....." என்று கூறியதை நினைவுபடுத்துகிறார். அதாவது கடந்த மூன்று மாத காலத்தினுள் நயினார் நாச்சியாருடன் உடலுறவு கொள்ளவில்லை என்பதை ஆசிரியர் வாசகர்களுக்கு அடித்துக் கூறுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லதம்பியன் பலதடவைகள் நாச்சியார் வீட்டிற்கு வந்து போய்விட்டான். வல்லிபுரக் கோயில் பயண அலுப்பும் பலவும் சேர்ந்து அயர்ந்து கிடந்த நாச்சியாரை இப்ப ஒரு எட்டுப் பத்து நாளாக தலைச்சுத்தும் பிரட்டலும் எண்டு கூடச் சொல்லிக் கொண்டிருந்தவ அது தானாக்கும் எழும்பேலாமல் கிடக்கிறா. என்று சொல்லி வீட்டுக் கோவிச்சி கூறும் போதும் ஆசிரியர் பரியாரியாரின் தாய் நாச்சியாருக்குக் கூறிய எச்சரிக்கையை நினைவுபடுத்துகின்றார். அதாவது பரியாரியாரின் தாய்,

பிறகும் செல்லுறன் நாச்சியார், ஆம்பிளையன் விடாயினம்! குறைஞ்சது ஐஞ்சாறு மாசத்துக்கிடையிலை நயினாரிலை தொட்டுக்கிட்டு அழைஞ்சீரண்டா பேந்து என்ரை மோனிலை புழைகிழை சொல்லிப் போடாதையும்! கவனம் நாச்சியார்!"

இந்த வார்த்தைகளைச் சொல்லாச்சிக் குஞ்சி இப்போது நினைத்துப் பார்க்கின்றாளாம். நயினாருக்கும் நாச்சியாருக்கும் தொடர்பு இருக்கவில்லை என்பதை மீண்டும் மீண்டும் கூறி நல்லதம்பியனின் சரிந்த கண்பார்வையுடன் நாச்சியார் முருகுப்பிள்ளை நயினாரைப் பெற்றெடுப்பதாக ஆசிரியர் வெற்றிகரமாகக் கதைபுனைகின்றார். பரியாரின் கட்டளையை அடிக்கடி நினைவுபடுத்தி நயினாரும் நாச்சியாரும் உடலுறவு கொள்ளவில்லை என்பதை வாசகர்களுக்கு உறுதிப்படுத்தி – நல்லதம்பியனோடு நாச்சியாரை காருக்குள் இரண்டு தடவைகள் உடலுறவு கொள்ளவைத்தும் பரியாரி வீட்டில் மூன்று மாதங்களுக்கு முன்னரே இவர்கள் உடலுறவு கொள்ள ஆரம்பித்து விட்டார்கள் எனக் கூறியும். முருகுப்பிள்ளை நயினாரை நல்லதம்பியின் சரிந்த கண்பார்வையுடன் பிரசவிக்கச் செய்வதில் ஆசிரியர் மேற்கொண்ட முயற்சி சற்று அதிகமானதுதான். மற்றொரு புறத்தில் குழம்புகளையும் சூரணங்களையும் கொடுத்துத் தோற்றுப்போன பரியாரிமார்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைத்தால் பரிதாபமாகவும் தெரிகின்றது. பரியாரிமார்களின் குழம்புகளுக்கெல்லாம் எடுபடாத நாச்சியாரின் மலட்டுத்தன்மை நல்லதம்பியனின் சில நாள் உறவோடு சிதறடிக்கப்பட்டது அதிசயந்தான்.

மேற்படி சம்பவங்களைத் தொகுத்து நோக்கும்போது,

1. நாச்சியாரின் சாதகத்தில் இருந்த செவ்வாய் தோசம்.

2. இதனால் வாய் நனைக்காத இடத்தில் மூத்ததம்பி நயினாரைத் திருமணம் செய்தமை.

3. பரியாரிமாரின் சூரணங்களாலும் குணப்படுத்த முடியாமற் போன நாச்சியாரின் மலட்டுத்தன்மை.

4. நயினாருக்கும் தெய்விக்கும் இடையே ஏற்பட்ட தொடர்பும் தெய்வி கர்ப்பத்துடன் இறந்ததும் - வயிற்றுப் பிள்ளையுடனேயே அவள் புதைக்கப்பட்டமை.

5. நயினாருக்கு ஏற்பட்ட நோய், ஆஸ்பத்திரியில் நின்றபோது பக்கத்துக் கடைக்கார நல்லதம்பியனின் சந்திப்பு.

6. நல்லதம்பியனின் தொடர்பால் நவாலிப் பரியாரி பற்றித் தெரிந்து கொண்டமையும் அவனுடன் வண்டியில் நவாலி சென்றமையும்.

7. பரியாரி வீட்டில் மூன்று மாதம் தங்கியிருந்து வைத்தியம் செய்தமை.

8. பரியாரியும், பரியாரியின் தாயும் நயினாரை – ஆறுமாதகாலம் வரை பெண்களோடு உடலுறவு கொள்ளக் கூடாது எனக் கூறியமை.

9. நல்ல தம்பியன் கார் வாங்கியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. காரில், நயினார் சுகமாகி வீட்டுக்கு வந்தது.

11. நல்லதம்பியன் நயினார் வீட்டில் இரண்டு இரவுகள் தங்கியதும் இரண்டு இரவும் நாச்சியாருடன் காரினுள் உடலுறவு கொண்டதும்.

12. இளநீர் குடித்த நயினாரின் அசதியும் தூக்கமும்.

13. செல்லாச்சிக் குஞ்சியின் குறட்டையும் விழிப்பும்.

இச்சம்பவங்களுக்கிடையே நயினார் உடலுறவு கொள்ளக் கூடாது என்ற பரியாரின் நிபந்தனை அடிக்கடி திரும்பத் திரும்பக் கூறப்படுகின்றது. எனவே மேற்படி சம்பவங்கள் வலிந்து உருவாக்கப்பட்டவை. நல்ல தம்பியின் உறவாலேயே நாச்சியார் கர்ப்பமுற்றார் என்ற முடிவுக்காக சம்பவங்கள் வலிந்து உருவாக்கப்பட்டுள்ளன. எனவே ஆசிரியர் நாச்சியாரின் ஒழுக்கக்கேட்டை வெளிப்படுத்துவதிலேயே அதிக அக்கறை காட்டியிருப்பது வெளிப்படையாகத் தெரியவருகின்றது. கறுத்தானின் மனைவி தெய்வி நயினாரால் கர்ப்பமாக்கப்பட்டதையும் கர்ப்பத்துடனேயே இறந்து போனதையும் சாதாரணமாகக் கூறியவர் நாச்சியார் நல்லதம்பியினால் கர்ப்பமாக்கப்பட்டதை நிரூபிப்பதற்கு மேற்கொண்ட முயற்சி திட்டமிட்டதொரு முயற்சியாகவே தெரிகின்றது.

டானியலின் மற்றொரு நாவலான அடிமைகள் என்பதில் புத்தூர் பல்லக்கு முதலியாரின் மைத்துனரான மழுவராயரின் மகள் முத்துப்பிள்ளை நாச்சியாரின் பிரசவகாலத்தில் வந்த நோய்க்கு வைத்தியம் பார்க்க யாழ்ப்பாணம் பாண்டியன் தாழ்வு ஆட்டிறைச்சிப் பரியாரி அழைக்கப்படுகிறார். பரியாரியின் மருந்தைக் கொடுப்பதற்குப் பெறுமாதப் பிள்ளைத்தாச்சி தேவைப்படுகின்றாள். பரியாரியின் இந்த நிபந்தனைக்காக உயர்சாதியினருள் எவரும் இல்லாததால் பின்வளவில் குடியிருந்த அடிமை செல்லனின் மனைவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைத்துவரப்படுகின்றாள். நாச்சியாருக்கு ஆட்டிறைச்சியில் பத்தியம் கொடுக்க வேண்டும் என்பது மட்டுமல்ல, நாச்சியார்பிள்ளைக்குப்பால் கொடுக்கக்கூடாது, நோய் பூரணமாகக் குணமாக முன்னர் அதாவது ஆறுமாதகாலம் கணவனுடன் உடலுறவு கொள்ளக் கூடாது, பிள்ளையின் நலன்கருதி வேறு ஒருத்தியின் மூலம் பிள்ளைக்குப் பால் கொடுக்கலாம். ஆனால் அவளும் ஆண் வாடை படாதவளாக இருக்க வேண்டும். பரியாரியின் அற்புதமான நிபந்தனைகளை நாச்சியார் ஏற்றுக் கொள்கின்றார். பரியாரியின் ஆலோசனைப்படி பால் கொடுப்பதற்கு ஒருத்தியைத் தேடவேண்டும். இதற்காகவே தயாரிக்கப்பட்ட செல்லனின் மனைவி செல்வி பின்வளவில் இருக்க மழுவராயர் பகுதி, கோவிய பகுதி, தச்சன் கடவை, கொல்லன் கொல்லை எங்கும் தேடுதல் நடைபெறுகிறது. எவருமே அகப்படவில்லை. இறுதியாகப் பண்டார பகுதியில் கிடைத்த ஒருத்தி கூட இந்த வேலைக்கு உடன்பட மறுத்துவிட்டாள். பின்னர் வேறு வழியின்றியே செல்லியைத் தெரிவு செய்ததாக ஆசிரியர் கூறுகின்றார், இல்லை வாசகர்களை ஏமாற்றுகின்றார், செல்வியைச் சிபார்சு செய்த நயினாரின் குடிமைக்காரி இத்தினி தனது கருத்துக்கு வலுவூட்ட கொட்டைப்பெட்டி ஆறுமுகத்தார் பள்ளியிடம் பால்குடித்து வளர்ந்ததையும் விதானையார் இப்போது பள்ளி, பறைச்சி என்று பார்க்காமல் பால் கறப்பிச்சுக் குடிப்தையும் நினைவூட்டுகின்றாள். இத்தினியின் சிபார்சின் படி செல்லி தெரிவு செய்யப்பட்டுவிட்டாள். ஆனால் அடுத்த நிபந்தனை பால் கொடுப்பவள் ஆண்வாடை படாதவளாக இருக்க வேண்டும். இதற்காக ஆறுமாதத்திற்கு ஆம்பிளையுடன் சேருவதில்லை என்று செல்லியிடம் கர்ப்பூரத்தட்டினை அணைத்துச் சத்தியம் பெறப்படுகின்றது. செல்லி செல்லனுக்குத் தெரியாமலேயே இந்த நிபந்தனைக்கு உடன்படுகின்றாள். இதனால் அவள் செல்லனோடு ஜீவமரணப் போராட்டமே நிகழ்த்துகின்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லி தனது சத்தியத்தைக் காப்பாற்றுவதற்காக துடக்குக் கழிந்த பின்னும் உடம்பு தேறவில்லை என்று பொய் கூறித் தாய்க் கிழவியையும் வீட்டில் மறித்துவைத்துச் செல்லனிடமிருந்து தன்னைப் பாதுகாக்க முயல்கிறாள். செல்லி செல்லனிடமிருந்து தன்னைப் பாதுகாத்தாலும் கொழுந்தர் நயினாரிடமிருந்து தன்னைப் பாதுகாப்பதிலேயே சிரமத்தை எதிர்நோக்குகின்றாள். பனைவடலியத் தாண்டி கொழுந்தரின் அடிச்சுவட்டில் செல்லி போவதும் பொழுது கருகிவிட்டபின் வருவதும் செல்லனுக்குச் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. சந்தேகம் வலுக்க செல்லன் தூக்கிட்டுத் தற்கொலை செய்கின்றான். அது செல்லியின் வாழ்வையும் முடித்துவிடுகின்றது.

மேற்படி சம்பவத்தில் ஆசிரியரின் நோக்கம் செல்லியைக் கொண்டு நாச்சியாரின் பிள்ளைக்குப் பால் கொடுப்பிப்பது தான் என்பது வெளிப்படை இந்த நோக்கத்திற்காக ஊரெல்லாம் தேடியும் கிடைக்காமல் கிடைத்த செல்லிக்கு புதுமையான நிபந்தனைகளை விதித்து அவளின் உயிருக்கே உலைவைத்து விடுகின்றார் ஆசிரியர். செல்லனோ செல்லியோ அழிவதில் ஆசிரியருக்கு எந்தவிதமான துன்பமும் இல்லை, செல்லியின் பாலைக் குடித்துத்தான் நயினாரின் பிள்ளை வளர்ந்தது என்பதைக் கூறுவதிலேயே ஆசிரியர் திருப்தியடைகின்றார்.

அடிமைகள் நாவலில் வருகின்ற மற்றொரு சம்பவம் அடிமை குடிமை வர்க்கத்தினர் விழித்துக் கொண்ட காலத்தில் மேல் தட்டுவர்க்கத்தினரின் கொடுமைகளுக்கு எதிராகச் செயற்பட்டதைக் காட்டமுற்பட்ட ஆசிரியர், கொடிகாமச் சந்தையில் குட்டிக் கயிலாயராகத்தர்பார் நடாத்திய சரக்கனின் செயற்பாடுகளை எடுத்துக்காட்டுகின்றார். சரக்கன் சுப்பனின் மனைவி கண்ணியில் கண் வைத்துக் காத்திருக்கின்றான். ஆனால் கண்ணி இதற்கு உடன்பட மறுக்கின்றாள். மறுத்தவள் சரக்கனுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அந்தாளோடை கூடித்திரிஞ்சு போட்டு இப்பிடிச் செய்யிறது சரியில்லாத வேலை அப்பிடி யெண்டா அந்தாளும் கூடித்திரியுது உங்கடை பெஞ்சாதியை அந்தாளும் பிடிக்கலாம் தானே?

என்று கேட்பதாகக் காட்டுவது அடிமை குடிமைவர்க்கம் விழிப்படைந்து விட்டதைக் காட்டுவதாகக் கருதலாம்.

வழக்கத்திற்கு மாறாக நார்ப்பட்டுவேட்டியும் தலைப்பாவும் அணிந்து சென்ற சுப்பனை வழியிலே கண்ட சரக்கனின் கூட்டம்

ஓ.....ஓ...... சரக்கரண்ணை தன்ரை பெண்டில் பக்கம் எண்ட துணிவிலை அவன் தலைப்பாக் கட்டுவான் தானே"

என்று சரக்கனைப் பரிகாரம் செய்து கண்டிக்கின்றது. சுப்பனின் மனைவியை வைத்திருப்பது சரக்கனுக்குக் கௌரவம், சமூகத்தகுதி அந்த அதிகாரக் குரல் வெளிப்பட்டபோது சுப்பனின் மனித உணர்ச்சியை யோசித்திருத்தால் சரக்கனுக்கு சுப்பனின் சூரிக்கத்தி பதில் சொல்லியிருக்காது. சுப்பனின் மனைவி சரக்கனின் வலையில் அகப்படாத போதும் சரக்கனின் கொலைக்கு அவர்களின் இரகசியத் தொடர்பே காரணம் என்று ஊர் பேசிக்கொள்கின்றது. கயிலாயரின் கொலைக்குப் பின்னர் கறுத்தானின் மனைவி பற்றியும் இப்படித்தான் பேசினார்கள். மேல்தட்டு வர்க்கத்தினரால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு சமூகக் கொடுமை இது என்பதையே இச்சம்பவங்கள் உணர்த்துகின்றன.

எனவே டானியலின் தண்ணீர், அடிமைகள் ஆகிய இரு நாவல்களினூடாகவும் நாம் காண்கின்ற சில சம்பவங்கள் தற்செயலானவையாக இல்லை. காரண காரியத்தோடு பின்னப்பட்டவைகளாகவும் இல்லை. ஆசிரியர் உரிமைகள் மறுக்கப்பட்ட மக்களின் நியாயமான கோரிக்கைகளைக் கலாபூர்வமாகப் பதிவு செய்ய முற்பட்ட வேளையில் தவிர்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாமல் இடம்பெற்ற சம்பவங்களாகவும் இல்லை. இனி இவ்வாறான சம்பவங்கள் எங்கோ ஒரு சில இடங்களில் நடந்திருக்கக் கூடியவை எனக் கூறினாலும் இது ஒரு சமூகப் பிரச்சினையாக இல்லை. ஒரு சிலரின் ஒழுக்கக்கேடுகளை வெளிப்படுத்துவதில் அதிகளவு அக்கறை காட்டியதால் ஆசிரியர் உரிமைகள் மறுக்கப்பட்ட மக்களின் உணர்வலைகளைச் சரியான முறையில் பதிவு செய்வதில் சற்றுத் தளர்ந்து விடுவதையும் அவதானிக்கமுடிகின்றது. இதனாலேயே டானியலுக்கு உயர்சாதியினரைப் பழிவாங்கும் நோக்கம் இருந்தது என்ற குற்றச் சாட்டும் எழுந்தது எனலாம்.

முடிவாக, டானியலின் கலைப்பிரக்ஞை அவர் வாழ்ந்த காலத்தினூடாக வந்தது. டானியல் வாழ்ந்த காலம் உடைமை வர்க்கத்தினரால் பஞ்சமர்கள் கொடுமைப்படுத்தப்பட்ட காலம். சொத்துக்களைத் தம்வசம் வைத்திருந்தவர்கள் மக்களை அடிமைகளாக நடத்திய காலத்தில் அம்மக்களில் ஒருவனாக நின்று இக் கொடுமைகளை அனுபவித்தவர் டானியல் அதிகார வர்க்கத்தின் கோரப்பிடியிலிருந்து விலகிய போது தான் படித்த பாடங்களை – கண்ட காட்சிகளை – சாட்சியாக நின்று உலகிற்குக் கூற விரும்பிய டானியல் தனக்கென்றே ஒரு கலைப்பாணியை விரும்பியோ விரும்பாமலோ உருவாக்கியிருக்கின்றார். இது அவரது சமூகப் பிரக்ஞையின் வழியாக வந்த கலை. அவரது கலைப் பாணியை விளங்கிக் கொள்ள அவர் வாழ்ந்த காலத்துச் சமூக வரலாற்றைத் தெரிந்து கொள்வது அவசியமாகும். துரதிஷ்டவசமாக அந்த வரலாறு இதுவரை எழுதப்படவேயில்லை. எழுதப்படாத வரலாற்றிற்கு டானியலின் எழுத்துக்கள் நல்லதொரு சாட்சியாக அமையலாம். ஆனால் வரலாற்றை எழுதப் போகின்றவனுக்கு ஒரு எச்சரிக்கை இது பாதிக்கப்பட்டவனின் சாட்சியம் என்பதையும் மறந்துவிடக்கூடாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மலையகத் தமிழ் நாவல்கள் புலப்படுத்தும் வாழ்வியற் பிரச்சினைகள்.**

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இலங்கை ஆங்கிலேயரின் ஆட்சிக்குட்பட்டிருந்த காலத்தில் பெருந்தோட்டங்களில் பணிபுரிவதற்காக இந்தியாவிலிருந்து அழைத்து வரப்பட்ட கூலித்தொழிலாளர்களும் அவர்களது சந்ததியினருமே மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் ஆவர். இவர்கள் ஆங்கில ஆட்சிக்காலத்திலிருந்தே பெருந்தோட்டங்களில் அனுபவித்து வரும் துன்பங்கள் மிகவும் அதிகம். தமது சொந்த மண்ணில் அனுபவித்த கொடுமைகளிலிருந்தும் வறுமைத் துன்பத்திலிருந்தும் விடுதலை பெறலாம் என்ற கனவோடு இலங்கைக்கு வந்தவர்கள் இங்கு அனுபவித்தது அடக்குமுறை, சுரண்டல், வறுமை முதலிய துன்பங்களையே. இவற்றைப் புதுமைப்பித்தன் முதற்கொண்டு ஈழத்துப் படைப்பாளிகள் வரை பலரும் தத்தமது படைப்புக்களில் எடுத்துக்காட்டியுள்ளனர். எனினும் மலையக மக்களின் வாழ்வையே பொருளாகக் கொண்டு வெளிவந்த படைப்புக்களில் இவர்களின் வாழ்வியற் பிரச்சினைகள் தனிக்கவனம் பெற்றிருக்கின்றன. இதனால் மலையகத் தமிழ் நாவல்களை அடிப்படையாகக் கொண்டு அவர்களின் வாழ்வியற் பிரச்சினைகளை ஆய்வு செய்வதே பயனுடையதாகும். இக்கட்டுரையில் அத்தகைய ஆய்வே மேற்கொள்ளப்படுகின்றது.

**உழைப்புக்கேற்ற ஊதியமின்மை**

இந்தியாவில் அனுபவித்த வறுமை, வேலையின்மை, அடக்குமுறை ஆகிய துன்பங்களிலிருந்து விடுபட்டு மகிழ்ச்சியான வாழ்வு வாழலாம் என்ற நம்பிக்கையோடு இலங்கைக்கு வந்த தொழிலாளர்கள் பெருந்தோட்டங்களில் மிகவும் குறைவான கூலிக்கே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலை செய்ய வேண்டியிருந்தது. நாள் முழுவதும் உழைத்தாலும் ஒரு வேளைக்கு உணவு உண்பதற்குப் போதுமான கூலியைப் பெறமுடியவில்லை. இதனால் இவர்கள் வறுமையில் வாடினர். தொழிற்சங்கங்கள் உருவாகாத சூழலில் இவர்களின் பிரச்சினைகள் வெளியே தெரியாதவாறு மறைக்கப்பட்டிருந்தன. தொழிலாளர்களும் போதிய கல்வியறிவு இல்லாதவர்கள் என்பதால் அவர்களாலும் தமது உழைப்புச் சுரண்டப்படுவதை உணரமுடியவில்லை. தொழிற்சங்கங்கள் உருவாகிய சூழலில் உழைப்புக்கேற்ற ஊதியம் வழங்கப்பட்ட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துப் போராட்டங்கள் நடைபெற்றன. இத்தகைய சூழலில் வெளிவந்த மலையக நாவல்கள் தொழிலாளர்களின் உழைப்புச் சுரண்டப்படுவதை எடுத்துக்காட்டின.

இந்த வகையில் கோகிலம் சுப்பையாவின் "தூரத்துப்பச்சை" என்னும் நாவலில் சம்பளக் கணக்கில் பொய்க்கணக்குக் காட்டிய கணக்குப்பிள்ளையிடம் கணக்குக் கேட்ட மூக்கனை காவற்காரர்கள் மரத்திற் கட்டிவைக்க துரை சாட்டையால் அடிப்பதும் பின் குழப்பக்காரன் என்று கூறிப் பொலிசாரிடம் ஒப்படைத்துச் சிறைத்தண்டனை பெற்றுக் கொடுப்பதும் காட்டப்படுகின்றது.

தோட்டத் தொழிலாளர்கள் தமது அடிப்படை உரிமைளுக்காகத் துரைமாரிடம் உரிமைக்குரல் எழுப்புவதையும் தொழிற்சங்க முயற்சிகளின் மூலம் போராட்டம் நடத்துவதையும் பெனடிக்ற் பாலனின் "சொந்தக்காரன்" என்னும் நாவல் விபரிக்கின்றது.

"நாம் நேர்மையாகத்தான் உழைக்கிறோம். நமக்குத்தான் இலங்கையில் ஆகக்குறைந்த கூலி. படுத்துத் தூங்க நல்ல வீடு இல்லை. மனிதனுக்கு இருக்கக்கூடிய அடிப்படை உரிமைகளே இல்ல" (ப.31)

எனக் கூறும் இராகவன் செங்கொடிச் சங்கத்தில் இணைந்து முதலாளித்துவத்திற்கு எதிராகத் தொழிலாளர்களை ஒன்றிணைத்துப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராட்டம் நடாத்துகின்றான். இப்போராட்டத்தின் மூலமே தொழிலாளர்களின் உரிமைகளை வென்றெடுக்க முடியும் என்பது இங்கு எடுத்துக் காட்டப்படுகின்றது.

தெளிவத்தை ஜோசெப்பின் "காலங்கள் சாவதில்லை" என்னும் நாவலில் மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை அதிகாரிகள் எவ்வாறு சுரண்டுகிறார்கள் என்பது விளக்கமாகக் காட்டப்படுகின்றது. சம்பள நாளில் துரையின் அலுவலகத்தில் கூடியுள்ள தொழிலாளர்கள் துரையிடம் பணத்தை வாங்கிச் செல்வதே வழக்கம். சம்பளப்பட்டியலில் கையெழுத்திடுவதோ சம்பளக் கணக்கு விபரத்தைப் பார்வையிடுவதோ வழக்கமாக இல்லை. இதனால் கிளாக்கர் பட்டியலிலுள்ள தொகையைக் குறைத்து வாசித்து எஞ்சுகின்ற பணத்தைத் துரை அறியாதவாறு திருடுவது வழக்கம். இதற்காக கிளாக்கர் தனது ஆட்களை இரண்டாவது முறையும் சம்பளம் வாங்க ஏற்பாடு செய்து வைக்கின்றார், கிளாக்கரின் இச்சூழ்ச்சிகளை அறிந்த கண்ணுச்சாமி சம்பளம் வாங்கும் போது தனக்கு விபரம் தரவேண்டும் எனக் கேட்கின்றான். கங்காணி அவனை ஏசி விரட்டமுயல்கின்றார். கண்ணுச்சாமியின் திட்டப்படி கண்ணம்மா இரண்டாவது முறையாகவும் சம்பளம் கேட்டுச்செல்கின்றாள். ஆனால் அவள் முன்பே சம்பளம் வாங்கியதை உறுதிப்படுத்த முடியாது கிளாக்கர் அவதிப்படுகின்றார். அலமேலுவுக்கும் ஆண்டியப்பனுக்கும் கிளாக்கர் இரண்டாவது முறையாகவும் சம்பளம் கொடுத்ததை கண்ணுச்சாமி வெளிப்படுத்துகின்றான். கிளாக்கரின் திருட்டுத்தனம் அம்பலத்திற்கு வந்து சம்பள விபரம் வெளியே பார்வைக்கு வைக்கப்படுகின்றது. இதன் மூலம் கிளாக்கரின் சுரண்டலுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படுகின்றது.

தி.ஞானசேகரனின் "குருதிமலை" என்னும் நாவலில் மலையக மக்களின் வாழ்வியற் பிரச்சினைகள் விரிவாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. கடுமையான மழையிலும் மலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்று கொழுந்தெடுக்கும் தொழிலாளர்கள் ஆபத்தான விளைவுகளைக் கூட எதிர்நோக்குவதுண்டு. மலைச்சரிவுகளில் சறுக்கி விழும் பெண்கள் இறந்து விடுவதும் வழக்கம். ஆனால் எந்த நிலையிலும் இத் தொழிலாளர்களுக்குக் கருணை காட்டப்படுவதில்லை என்பதை தி.ஞானசேகரன் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றார்.

கடும்மழை காரணமாக மலையிலே நின்று கொழுந்து பறிக்க முடியாததால் அரைமணி நேரம் முன்பாகவே சென்ற பெண்களை கண்டக்டர் கண்டிக்கின்றார். அவர்களுக்கு அரை மணிக்காக அரைநாள் வேலையே கழிக்கப்படுகின்றது. அவர்களைக் கூட்டி வந்த கங்காணிக்கு பத்துரூபா தண்டம் விதிக்கப்படுகின்றது.

சம்பளக் கணக்கில் முறைகேடுகள் நடைபெறுவதையும் இந்நாவல் எடுத்துக்காட்டுகின்றது. மாதம் முழுவதும் வேலைக்குப் போன குப்பன் தனக்குச் சம்பளம் எதுவுமே இல்லை என்று ஆத்திரப்படுகின்றான். அதேவேளை வவுனியாவுக்குச் சென்று இரண்டு மாதமாக வேலைக்கே வராத கறுப்பையாவுக்கு சம்பளம் வழங்கப்படுகின்றது. இதனை எதிர்த்த தொழிலாளர்களை நிர்வாகம் பொலிசாரின் உதவியுடன் அடக்குகின்றது என இந்நாவல் சித்திரிக்கும் போது இம்மக்களின் வாழ்வியற் துன்பங்கள் எமக்கு வெளிபடையாகப் புலப்படுகின்றன.

புலோலியூர் சதாசிவத்தின் "மூட்டத்தினுள்ளே" என்னும் நாவலில் கிளாக்கர் கங்காணியைத் தனது வலைக்குள் சிக்கவைத்து தொழிலாளர்களின் கூலியைச் சுரண்டுவது காட்டப்படுகின்றது. மலையக மக்கள் தோட்டங்களில் மட்டுமன்றி தோட்டத்திற்கு வெளியேயும் சுரண்டப்படுகின்றார்கள். மலையாண்டி கொழும்பிலுள்ள "யாழ்ப்பாண ஸ்ரோர்ஸ்" என்ற கடையில் வேலைக்குச் சேர்கின்றான். முதலாளி கொடுத்த குறைந்த சம்பளத்துடன் அரைவயிற்றுக்கு உணவுண்டு சாமான் பெட்டிகளுக்கு நடுவில் படுத்துறங்கி நேர்மையாக உழைத்த மலையாண்டி கடையில் ஐம்பது ரூபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணம் காணாமற் போன போது தோட்டக்காட்டானை நம்பேலாது என்று கூறி விரட்டப்படுகின்றான் என்று ஆசிரியர் சித்திரிக்கின்றார். இது யாழ்ப்பாண மக்கள் பலரிடமும் ஆரம்பத்தில் இருந்த மலையக மக்கள் மீதான வெறுப்புணர்வையும் நம்பிக்கையின்மையையும் எடுத்துக்காட்டுகின்றது.

சி.வி.வேலுப்பிள்ளையின் "இனிப்படமாட்டேன்" என்னும் நாவலில் இலங்கைப் பிரசாவுரிமை கிடைத்த மலையக மக்களில் பலர் அவ்வுரிமையினால் எந்தச் சுகத்தையும் அனுபவிக்க முடியாமல் அதனை இரத்துச் செய்துவிட்டு இந்தியாவுக்கே செல்ல முயற்சிப்பது காட்டப்படுகின்றது.

**ஒடுக்குமுறை**

பெருந்தோட்ட நிர்வாகிகள் மலையக மக்களின் உழைப்பைச் சுரண்டியதோடல்லாமல் அம்மக்களைப் பல்வேறு விதமான ஒடுக்கு முறைகளுக்கும் உட்படுத்தினர். இவர்களுக்குக் குடியிருப்பதற்கு வசதியான வீடு வழங்கப்படவில்லை. மிகவும் சிறிய லயங்களில் பலர் நெருக்கமாகக் குடியிருத்தப்பட்டனர். குடியிருப்புக்களில் சுகாதார வசதிகள் கவனிக்கப்படவில்லை. நோயுற்றவர்களுக்கு ஏற்ற மருத்துவ வசதிகள் வழங்கப்படவில்லை. தொழிலாளர்களின் தேவைக்கேற்ற போசாக்கான உணவு வழங்கப்படவில்லை. பிள்ளைகளுக்குக் கல்வி கற்கும் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை.

இத்தகைய சூழ்நிலையில் வாழ்கின்ற மக்களுக்கு உளவியல் ரீதியான பாதிப்புக்கள் ஏற்படுவது சாதாரணமானதாகும். குறிப்பாக இளந்தலைமுறையினர் பெரிதும் பாதிக்கப்படுவர். சிறிய வயதிலேயே தீய பழக்கவழக்கங்களுக்கு அடிமையாகி இவர்களின் வாழ்வு கெட்டுப்போய்விடுகின்றது. இவர்களின் மனோநிலை இளவயதிலேயே பாதிக்கப்படுவதால் இவர்கள் தம்மீது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரயோகிப்படும் ஒடுக்குமுறைகளை உணர முடியாதவர்களாகவே இருப்பர். இதனால் அம் மக்கள் மீது பிரயோகிக்கப்படும் ஒடுக்கு முறைகள் வெளியுலகிற்குத் தெரியவராமல் மூடி மறைக்கப் பட்டுவிடும். இதன் மூலம் இவர்கள் பிரச்சினையுள்ள ஒரு சமூகம் என்று ஏனையவர்களுக்குத் தெரிய வரவாய்ப்பில்லாது போய்விடும். இது இவர்களின் உரிமைகளை நசுக்குவதற்கு வாய்ப்பாக அமைந்துவிடும். ஏகாதிபத்தியத்திற்கோ தோட்ட நிர்வாகிகளுக்கோ இவர்களின் உழைப்பு மிகவும் மலிவான விலையில் கிடைப்பதற்கு எந்தத் தடையும் இருக்காது.

இத்தகைய நோக்கங்களின் அடிப்படையிலேயே இம்மக்கள் மீது கடுமையான ஒடுக்குமுறை பிரயோகிக்கப்பட்டது எனலாம். ஆனால் காலம் மாறியபோது அம்மக்களும் சிந்திக்கத் தலைப்பட்டனர். இதனால் தமது உரிமைகளுக்காகப் போராட முற்பட்டனர். இந்த வரலாறு மலையக நாவல்களினுடாகப் புலப்படுத்தப்படுகின்றது.

கோகிலம் சுப்பையாவின் "தூரத்துப்பச்சை" என்ற நாவலில் இருவர் வாழமுடியாத லயத்தில் பத்துக்கும் மேற்பட்டவர்கள் அடைத்து வைக்கப்பட்டதையும் இவர்களில் புதிதாகத் திருமணம் செய்த வள்ளியும் செங்கமலையும் ஒருவரோடொருவர் தனியாகப் பேசக்கூட வாய்ப்பில்லாமல் துன்பப்படுவதும் காட்டப்படுகின்றது. பெனடிக்ற் பாலனின் சொந்தக்காரன் என்ற நாவலிலும் திருமணமாகி ஒருமாதமாகியும் மனைவியுடன் உறவு வைத்துக் கொள்ள முடியாமல் தவிக்கும் சப்பாணியின் துன்பம் காட்டப்படுகின்றது. இதனால் குடிப்பழக்கத்திற்கு ஆளாகிய சப்பாணி ஒருநாள் இரவு மதுபோதையில் மனைவி என நினைத்து தனது தங்கையின் மீது விழுந்து அவளை அணைக்கின்றான். அவள் சத்தமிட்டுக் கத்தியபோது திடுக்கிட்டு எழுந்த தகப்பன் யாரோ என நினைத்து சப்பாணியை நன்றாகத் தாக்கி விடுகின்றார். இச்சம்பவத்தால் மனம் பாதிக்கப்பட்ட சப்பாணி தற்கொலை செய்துவிடுவதாக ஆசிரியர் சித்திரிக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கல்விகற்கும் வசதியின்மை**

மலையக மக்களின் பிள்ளைகள் கல்வி கற்பதற்கு வசதியான பாடசாலைகள் அமைக்கப்படவில்லை. இதனால் அவர்கள் படிக்காதவர்களாக இருந்து தோட்டக் கூலிகளாகவே தமது வாழ்வைக் கழிக்க வேண்டியிருந்தது. இந்நிலையிலும் ஒருசிலர் நகரப்பகுதிகளிலுள்ள பாடசாலைகளுக்குப் பிள்ளைகளை அனுப்பிப் படிக்க வைத்தனர்.

தூரத்துப்பச்சை என்னும் நாவலில் வருகின்ற வள்ளி தனது காதோலையை விற்றுப் பிள்ளைகள் இருவரையும் பள்ளிக் கூடத்திற்கு அனுப்புகின்றாள். வள்ளியின் இச்செயலை மற்றவர்கள் கேலிசெய்கின்றார்கள். இதனால் மலையக மக்களின் மனதில் தாம் வெறும் தோட்டக் கூலிகள் தான் தமக்குப் படிப்பு, உத்தியோகம் என்ற வார்த்தைகளுக்கே இடமில்லை என்ற மனநிலை ஏற்பட்டிருப்பது தெரிகின்றது. அத்தகையவர்களைப் பொறுத்தவரை ஏகாதிபத்தியத்திற்கு வெற்றியாக இருந்தாலும் வள்ளி போன்றவர்கள் இதற்கெல்லாம் விட்டுக் கொடுக்காமல் தொடர்ந்து முன்னேறியதால் அவர்களுக்கு விடிவு காத்திருந்தது.

நந்தியின் மலைக் கொழுந்து என்ற நாவலில் வருகின்ற ரங்கசாமி தோட்டத்துப் பிள்ளைகள் படிக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து மலையப்பனைப் படிக்க வைக்கின்றான். ஆனால் தோட்ட நிர்வாகம் ஐந்தாம் வகுப்பு வரையாவது படிக்கக் கூடியதாக இருந்த தோட்டப் பாடசாலையினையும் மூடிவிட்டு அதைத் தோட்டத்து டிஸ்பென்சருக்கும் கண்டக்டருக்கும் மாட்டுத் தொழுவமாக உபயோகிக்க வழங்குகின்றது. இதன் மூலம் தோட்ட நிர்வாகத்துக்கு மலையக மக்களின் கல்வியில் அக்கறை இல்லை என்பது எடுத்துக்காட்டப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### குடியுரிமை தொடர்பான பிரச்சினைகள்

1927இல் இலங்கைக்குக் வந்த டொனமூர் ஆணைக்குழுவின் சிபார்சின்படி 21 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டது. இதனால் தோட்டத் தொழிலாளர்களும் வாக்குரிமையினைப் பெற்றது சிங்கள மக்களுக்குப் பெரும் அச்சுறுத்தலாக அமைந்தது. இதனால் 1948இல் இலங்கை சுதந்திரம் பெற்றதைத் தொடர்ந்து சிங்கள மக்கள் இந்திய வம்சாவழித் தமிழர்களுக்கு எதிராகப் போராடத்தொடங்கினார். இதன் விளைவாக 1949இல் கொண்டு வரப்பட்ட இலங்கை குடியுரிமைச்சட்டம், பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம் ஆகியவற்றால் தோட்டத் தொழிலாளர்களின் குடியுரிமை பறிக்கப்பட்டது. இதனால் பல இலட்சக்கணக்கான மலையகத் தமிழர்கள் நாடற்றவர்களாக்கப்பட்டனர். இதன் பின்னர் 1964இல் கைச்சாத்திடப்பட்ட சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தத்தின் அடிப்படையில் பலர் இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பட்டனர். இத்தகைய அரசியல் நடவடிக்கைகளையும் இச்சூழ்நிலையில் மலையக மக்களுக்கு எதிராக இடம் பெற்ற வன்முறைகளையும் மலையக நாவல்கள் சில எடுத்துக் காட்டியுள்ளன.

பெனடிக்ற் பாலனின் சொந்தக்காரன் என்னும் நாவலில் மலையக மக்களை நாடு கடத்தும் முயற்சி முதலாளி வர்க்கத்தின் திட்டம் என்றும் இதற்கு எதிராக மலையகத் தொழிலாளர்கள் தொழிலாளி வர்க்கத்துடன் ஒன்றிணைந்து போராடவேண்டும் என்றும் ஆசிரியர் பாத்திரங்களின் வாயிலாக உணர்த்துகின்றார். ஆசிரியர் இப்பிரச்சினையை இனரீதியாக நோக்காமல் வர்க்க அடிப்படையில் நோக்குவதாலேயே இந்நாடுகடத்தல் முயற்சி சிங்களத் தொழிலாளர்களின் முடிவல்ல என்பதையும் அவர்கள் ஆதரிக்கவில்லை என்பதையும் புஞ்சிபண்டா என்ற சிங்களத் தொழிலாளியின் மூலமாக எடுத்துக்காட்டியுள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிக்கன்ராஜ் எழுதிய "தாயகம்" என்னும் குறுநாவலில் குடியுரிமை பறிக்கப்பட்டு இலங்கையை விட்டு வெளியேற வேண்டும் என்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்ட போதும் தாம் பிறந்து வளர்ந்த மண்ணைவிட்டுப் பிரியமனமின்றித் தவிக்கும் மலையக மக்களின் மனநிலை எடுத்துக் காட்டப்படுகின்றது. இந்நாவலில் வருகின்ற ராகு என்ற பாத்திரம்.

"...... எனக்குத்தான் இந்நாட்டில் வாழ்கிற உரிமையில்லையே இந் நாட்டிலே பிறந்து வளர்ந்து வாழ்ந்தும் உரிமைகள் பறிக்கப்பட்டு நடைப்பிணமாக வாழ்கின்றேனே......" (ப.8)

என்று ஏங்குவது மலையக மக்கள் பலரினதும் ஏக்கமே. ஆனால் மண்ணில் உரிமை கேட்டன்றி வயிற்றுப் பிழைப்புக்கு வழிதேடி வந்த மக்களுக்கு இந்த மண்ணில் மாறி மாறி நடந்த கொடுமைகளால் அவர்கள் இந் நாட்டில் வாழ்வதற்கே அஞ்சி விரக்தியுறுகின்றார்கள். அந்த வெறுப்பும் விரக்தியும் ஒரு சாதாரண மலையகப் பெண்ணின் வார்த்தைகளாக வெளிப்படுத்தப்படுகின்றது.

"ச்சீ இந்த ஊரில மனிசன் இருப்பானா? டவுனுக்குப் போனாலும் சரி, ஸ்கூலுக்குப் போனாலும் சரி, வீட்டை விட்டு வெளியேறி விட்டால் சரி, பஸ்ஸிலும் போக முடியாது நடந்தும் போக முடியாது ஒரே துவேஷந்தான்" (ப.28)

சி.வி. வேலுப்பிள்ளையின் "இனிப்படமாட்டேன்" என்ற நாவலிலும் இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்ட மலையக மக்கள் இனியும் இத்தகைய துன்பங்களை அனுபவிக்க விரும்பாமல் இந்தியாவுக்கு சென்று வாழ விரும்புவது காட்டப்படுகின்றது.

"சிங்கள ஆளுக்கும் யாழ்ப்பாணத்து ஆளுக்கும் சண்டை வாறப்ப எங்களே தான் முதல்லே கொத்துவாங்க. இந்தியாவுக்கு போய் பிச்சை எடுக்கிறது நல்லது சார்" (ப.36)

இது இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்டு அகதிமுகாமில் தஞ்சம் புகுந்த ஒரு தொழிலாளியின் மனக்குமுறல். மற்றொரு தொழிலாளி,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“சும்மா கிடக்கிறவங்களே நடு சாமத்தில வந்து அடிச்சு விரட்டி நெருப்பு வைத்தாங்க. பொம்புளே பிள்ளைகளை அவமானம் செஞ்சாங்க. காட்டு சாதிய பயக. இந்த ஊர்லே மனுசன் இருக்க முடியுங்களா....” (ப.36)

என்று இலங்கையில் வாழ விரும்பாத மனநிலை புலப்படுத்தப்படுகின்றது.

இலங்கைப் பிரசாவுரிமை கிடைத்தவர்களுக்கும் இங்கு வாழ விரும்பாத நிலையை மற்றொரு பாத்திரத்தின் மூலம் வெளியிடுகின்றார்.

“நான் இலங்கே பிரஜேமாஸ்டர். வெள்ளைக்காரி கக்கூசுக்கு போயிட்டு பேப்பர்லே தொடப்பாளாம் அதுக்குக் கூட இந்தப் பத்ரம் ஒதவாது. என்ன பேசாம இருக்கிறிங்க. நம்ம தலைவர்மாரு மந்திரிமாரு என்ன கிழிச்சிட்டாங்க. நம்ம எல்லோருக்கும் தண்ணி கசந்திருச்சு எதோ நாம செய்த பாவம்” (ப.44)

பிரசாவுரிமை என்பது வெறுங்கண்துடைப்பு என்பதையும் இனக்கலவரங்கள் ஏற்படும் போது தாமும் தமிழர்கள் என்ற வகையில் தாக்கப்படுவதையும் உணர்ந்து கொண்ட இம்மக்கள் இந்த மண்ணில் வாழ விரும்பவில்லை என்பது தெளிவாகப் புலப்படுத்தப்படுகின்றது.

**பாலியல் சுரண்டல்**

மலையக மக்களைத் தமது அதிகாரத்தால் அடக்கியாண்ட தோட்ட நிர்வாகிகள் அவர்களது உழைப்பைச் சுரண்டியதோடல்லாமல் பாலியல் ரீதியான சுரண்டல்களிலும் ஈடுபட்டனர். ஆரம்பத்தில் அறியாமையினாலும் பயத்தினாலும் இத்தகைய சுரண்டல்களை எதிர்க்க முடியாமல் இருந்த மலையகப் பெண்கள் காலப்போக்கில் ஓரளவு கல்வியறிவினையும் வெளித் தொடர்புகளையும் பெற்றுக் கொண்டபோது இச்சுரண்டல்களை எதிர்த்தனர். கே.ஆர்.டேவிட்டின் வரலாறு அவளைத் தோற்றுவிட்டது என்னும் நாவலில் வருகின்ற குருவம்மா இத்தகைய சுரண்டலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்த்துப் போராடி வெற்றி பெறுகின்றாள். ஆனால் மலையக மக்களை நிரந்தரமாகவே ஆட்கொண்ட வறுமை அதிகாரிகளின் இத்தகைய சுரண்டல்களுக்கு எப்போதும் வாய்ப்பாகவே இருந்து விடுகின்றது.

பொதுவாக நோக்கும்போது ஈழத்தில் வெளிவந்த மலையகத் தமிழ் நாவல்களினூடாக மலையக மக்களின் வாழ்வியல் துன்பங்களையும் அத்துன்பங்களுக்கு அடிப்படையாக இருக்கின்ற காரணங்ளையும் அறிந்து கொள்ள முடிகின்றது. வயிற்றுப் பிழைப்புக்காக சொந்த மண்ணை விட்டு இங்கு வந்தவர்களுக்கு இங்கு வயிறார உணவில்லை. வாழ இடமில்லை எஞ்சியது கடன் சுமை மட்டுமே. இந்நிலையில் இவர்கள் தமது உடலை விற்றுக்கூட வயிற்றுப் பசியைப் போக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கின்றது. பசித்த வயிற்றோடும் கந்தல் உடையோடும் - கடன் சுமையோடும் வாழும் மக்களை அரசியல்வாதிகளின் சட்டங்கள் மேலும் துயருறுத்தின. ஈழத் தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் இடையே ஏற்பட்ட அரசியல் ரீதியான முரண்பாடுகளின் போதெல்லாம் ஏதுமறியாத மலையக மக்களும் தாக்கப்பட்டனர். இத்தகையய துன்பங்களையெல்லாம் மலையகத் தமிழ் நாவல்கள் பலவும் எடுத்துக்காட்டியுள்ளன. இடதுசாரிச் சிந்தனையுள்ளவர்கள் பாட்டாளி வர்க்கப் புரட்சியினையே இத்துன்பங்களுக்கான தீர்வாகக் கூறுகின்றனர். ஆனால் காலங்கடந்த நிலையில் இன்று இம்மக்களின் வாழ்வு விடை கிடைக்காத வினாவாகவே எழுந்து நிற்கின்றது.

10373



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதவிய நூல்கள்**


1. கோகிலம் சுப்பையா - தூரத்துப்பச்சை, 1973, கொழும்பு.
2. பெனடிக்ற் பாலன் - சொந்தக்காரன், 1968, சென்னை.
3. தெளிவத்தைஜோசெப் - காலங்கள் சாவதில்லை, 1974, கொழும்பு.
4. தி. ஞானசேகரன் - குருதிமலை, 1979, கொழும்பு.
5. புலோலியூர் சதாசிவம் - மூட்டத்தினுள்ளே, 1983, கொழும்பு.
6. சி.வி.வேலுப்பிள்ளை - இனிப்படமாட்டேன், 1984, மதுரை.
7. நந்தி - மலைக்கொழுந்து, 1964, யாழ்ப்பாணம்.
8. த.சிக்கன்ராஜ் - தாயகம் 1969, நூரளை, இலங்கை.
9. கே.ஆர்.டேவிட் - வரலாறு அவளைத் தோற்றுவிட்டது. 1976, கொழும்பு.



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10373

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

RINTERS, 72 PALALY R ELVLY.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org